Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

தபால் மூலம் இலவச போதனை
பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு
( GCE (ord) LEVEL)
ஆயத்தம் செய்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
வசதியுள்ளவர்களுக்கு குறைந்த செலவிலும்,
வறியவர்களுக்கு இலவசமாகவும்
கல்வி போதிக்கப்படும்.
மாணவ அங்கத்தவராகச்சேர விரும்புவோர்
விபரங்கட்கு உடன் எழுதுக.
செயலாளர்:
சமூக முன்னேற்ற நலன்புரி மன்றம்,
107, தட்டாதெரு, கொழும்பு - 12.

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 மாசி திங்கள் 24-ம் நாள் 8—3—1959 ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 27 இதழ் 41

# மார்ச் 3 அடையாள வேலைநிறுத்தம்

## தமிழ் பேசும் மக்களுக்கு அறிவுறுத்தும் அப்பட்டமான உண்மை

## சட்டத்தை எதிர்ப்பதாகச் சொல்லிக்கொண்டு ஒதுங்கி இருந்த 'தோழர்'களின் ஓலம்

### அரசாங்கத்துக்கு அருமையான 'பக்கப்பாட்டு'

**"பொதுஜன பாதுகாப்பு (திருத்த) சட்டத்தை எதிர்க்கிறோம்; ஆனால் எதிர்ப்பை இப்போது நாம் அரசாங்கத்துக்குக் காட்டப்போவதில்லை" என்று சொல்லி மூன்றாந் திகதி நாடு எங்கிலும் நடந்த அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருந்த கொம்யூனிஸ்டுகள் பொதுமக்களின் பார்வையிலிருந்து மறைந்தனரல்லவா?**

**அவர்கள் இப்போது, வேலைநிறுத்தம் மலைநாட்டிலும் மற்றுமுள்ள தமிழ்ப் பிரதேசங்களிலும் பிற இடங்களிலும் வெற்றிகரமாக நடந்தேறிய பின்னர், தாமும் இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொள்ள மெதுவாகத் தலையைத் தூக்கி ஈனக் குரலில் ஓலமிடத் தொடங்கியிருக்கிறார்கள்.**

பத்து தொழிற் சங்கங்கள் சேர்ந்து நடத்திய அடையாள வேலைநிறுத்தம் பிரஸ்தாப தொழிற் சங்கங்களுக்கு வெற்றியாக முடிந்ததா அன்றி எதிர்த்தரப்பில் உள்ள அரசாங்கத்துக்கு வெற்றியாக முடிந்ததா என்று இருசாராரும் சர்ச்சையில் ஈடுபட்டிருக்க கொம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் இடையில் புகுந்து வேலைநிறுத்தம் பொதுவாகப் பிசுபிசுத்து விட்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

பதவிக்கு வந்த காலம் தொடக்கம் இலங்கை வானொலியையும் அரசாங்கப் பத்திரிகையான ஸ்ரீ லங்காவையும் பொய்ப் பிரசாரத்துக்குப் பயன்படுத்திப் பிழைப்பு நடத்தி வரும் எம். ஈ. பி. அரசாங்கமும் இந்த வேலைநிறுத்தம் சம்பந்தமான சில புள்ளி விவரங்களை அடுக்கி, தொழிற் சங்கங்கள் தோற்றுவிட்டன என்று வெற்றி முழக்குகிறது.

#### எச்சரிக்கை!

கொம்யூனிஸ்ட் தலைவர் கெனமனும் வழமைப்பிரகாரம் அரசாங்கத்தோடு சேர்ந்து இதே பல்லவியை ஒரே ஒரு சுருதி பேதத்தோடு பாடுகிறார். அந்தப் பேதம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை என்ற ரீதியில் காட்டப்பட்டிருக்கிறது.

ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களை அதற்காக அரசாங்கமோ அல்லது வர்த்தக ஸ்தாபன முதலாளிகளோ தண்டித்தால் தொழிலாளர் வர்க்கமே ஒருமித்துத் திரண்டு எழுந்து எதிர்ப்பு தெரிவிக்கும் என்று எச்சரிப்பது போல அறிக்கை விடுத்திருக்கிறார்.

#### கொம்யூனிஸ்டுகள் நோக்கம்

பொலீஸார், இராணுவத்தினரின் தடபுடலான ஏற்பாடுகளின் மத்தியில் அர

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஒழிப்பு வேலைகள் அநுராசபுரத்திலும் ஆரம்பம்

## சிற்றம்பலம் வீதி திடீரென்று 'மிஹிந்துமாவத்த' ஆயிற்று

### தமிழ்க் கழகம் நடவடிக்கை எடுக்கும்


**தமிழ் ஒழிப்பு வேலைகள் அநுராசபுரத்திலும் தொடங்கிவிட்டன. ஆரம்ப நடவடிக்கையாக பல ஆண்டுகளாக வழங்கி வந்த தமிழ் வீதிப் பெயர்கள் அகற்றப்பட்டு பதிலுக்கு சிங்களப் பெயர்கள் வைக்கப்படுகின்றன.**

அநுராசபுரம் பழைய நகரில் உள்ள வீதி ஒன்றுக்கு "சிற்றம்பலம் வீதி" என்று பெயர். பல ஆண்டுகளாக வழங்கி வந்தது இந்தப் பெயர். சிற்றம்பலம் குடும்பத்தினர் அநுராசபுரத்துக்கு தன்னலங் கருதாது செய்த அரும்பெரும் சமூகத் தொண்டுகளை நினைவுபடுத்துமுகமாக வைக்கப்பட்ட இந்தப் பெயர் அங்கு நாட்டப்பட்டிருந்த பலகையிலும் பொறிக்கப்பட்டிருந்தது.

சமீபத்தில் திடீரென்று அந்தப் பலகை அகற்றப்பட்டு அதே இடத்தில் "மிஹிந்துமாவத்த" என்ற சிங்களப் பெயர் பொறித்த பலகை ஒன்று நாட்டப்பட்டது. யார் இப்படிச் செய்தது என்று விசாரித்ததில் விசேட நகர அதிகாரி என்பது தெரிய வந்தது. ஆனால் யாருடைய ஆலோசனையின் பேரில் அவர் அப்படித் தமிழ் ஒழிப்பும் சிங்களத் திணிப்பும் செய்தார் என்பது எவருக்குமே தெரியாது.

"தமிழ்த் துவேஷமுள்ளவர்கள் தாம் நினைத்தபடியெல்லாம் தான் தோன்றித்தனமாக வீதிப் பெயர்களை மாற்றிக்கொள்வதா?" என்று ஆத்திரமடைந்த அநுராசபுரத்துத் தமிழர்கள் கேட்கிறார்கள். அநுராசபுரத் தமிழ்க் கழகம் இது விஷயமாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க முடிவு செய்திருக்கிறது.

## வளரும் பேச்சாளர்



பேச்சுக் கலை இலங்கையில் வளர்வதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன. பள்ளிக்கூடங்களும் பொது நிறுவனங்களும் பிறவும் பேச்சுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் வழங்கி ஊக்கமளித்து வருகின்றன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 125வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்றார் செல்வன் த. துரைராசா. ரூபா 100-00 பெறுமதியுள்ள தங்கப் பதக்கம் இவருக்குக் கிடைத்தது.

செல்வன் த. துரைராசா முன்னரும் வள்ளுவர் தினத்தையொட்டி நடந்த போட்டியொன்றில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பரிசாக ஈட்டினார். வேறு போட்டிகளில் புத்தகப்பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் பெற்றிருக்கிறார்.

இவர் யாழ்ப்பாணத்துப் பிரபல பத்திரிகை புத்தக விற்பனையாளரான திரு த. தம்பித்துரையின் மூத்த மகன் ஆவார்.

## இந்தியத் தூதுவர் காரியாலயம் கைவிரிப்பு!

## பத்திரிகைக் கண் காட்சிக்கு உதவ தமிழ்ப் பிரசுரங்கள் இல்லையாம்

### ருஷ்ய ஸ்தானீகர் அலுவலகத்தின் அன்பளிப்பும் பேராதரவும்

**இந்தியத் தூதுவர் காரியாலயம் தமிழ் பிரசுரங்கள் இடையாது என்று கையை விரித்துவிட, ருஷ்ய தூதுவர் காரியாலயம் மாஸ்கோவில் அச்சான தமிழ் பிரசுரங்களை உவந்தளித்துப் பத்திரிகைக் கண்காட்சியொன்றை உற்சாகப்படுத்திய சம்பவம் சமீபத்தில் நடைபெற்றிருக்கிறது.**

பதுளை பாரதி கல்லூரியைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் ஒரு தமிழ்ப் பத்திரிகைக் கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டு பல பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும், இலங்கையிலுள்ள ஸ்தானீகர் காரியாலயங்களுக்கும் கடிதம் எழுதினர்.

ஸ்தானீகர் காரியாலயங்களுக்கு எழுதிய கடிதத்தில் "உங்கள் நாட்டில் தமிழ் பத்திரிகைகள், அரசாங்க தமிழ் சஞ்சிகைகள் வெளியானால் அவற்றில் ஒவ்வொரு பிரதி அனுப்ப அல்லது பெற்றுத்தர ஏற்பாடு செய்யுங்கள்; நாங்கள் ஒரு உலகத் தமிழ்ப் பத்திரிகை—சஞ்சிகைக் கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்" என்று கேட்டிருந்தனர்.

பல இடங்களிலிருந்து பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கிடைத்து வருகையில்

(5-ம் பக்கம் பார்க்க)




இந்த
சக்திவாய்ந்த
நிவாரணி
மார்பு நோய்களை
குணப்படுத்தி
வேதனையை
நீக்குகிறது.

ரிச்லெட்ஸ் பெக்டோரல் (Richelet's Pectoral) ஒரு பிரசித்திபெற்ற மருந்து. குறிப்பாக தொண்டை சுவாசப்பை சம்பந்தப்பட்ட சகல கோளாறுகளையும் விரட்டியடிப்பதற்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.




இருமல், தடிமல், சளிக்காய்ச்சல் (INFLUENZA):- ரிச்லெட்ஸ் பெக்டோரல் இடைவிடாத இருமலைக் கூடதணித்து, தொண்டைக் கரகரப்பைப் போக்கி, சளிப் பிடிப்பை உடைத்து, சுகானுபவத்தை அளிக்கிறது.

மூச்சுக் குழல் அழற்சி (Bronchitis):- இது ஆரம்பித்து வெகு நாட்களாகி விட்டாலும் ரிச்லெட்ஸ் பெக்டோரல் மூச்சுக் குழல்களின் குருதிக் கட்டை குலைத்து, சளிப்பிடிப்பை ஒழிக்கிறது. இதனால் நோயாளியின் ஜுரமும் தணிகிறது. ஆழ்ந்த—நிம்மதியான—நித்திரையும் கிடைக்கிறது.

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.
ஸோல் ஏஜண்ட்:-
வெஸ்ட்டன் ஏஜன்சீஸ்,
170, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (29)

### அரசியல் சர்ச்சை

நிழல் மனிதன் தனக்கு அனுப்பிவைத்த கடிதத்தைத் தணிகாசலம் மியூறியலிடம் கொடுத்தானல்லவா? அதைப் படித்து முடித்த மியூறியலுக்கு என்ன செய்வதென்றே புலப்படவில்லை. காரியம் போகும் வேகத்தைப் பார்த்தால் தன்னுடைய அந்தரங்க எண்ணம் ஈடேறுது போய்விடலாம் போலவும் அவளுக்குப் பட்டது.

மியூறியலின் மருட்சியைக் கவனித்த தணிகாசலம், அவளைத் தேற்றி ஆறுதல் கூறினன்.

"இன்று நீலவேணியை எப்படியும் இங்கு கொண்டு வந்து நம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும். நாளைய விருந்தில் அவளைக் கலந்துகொள்ள விடாமல் அவளை மறைத்தாலும் மறைத்துவிடுவார்கள்" என்று ஆலோசனை கூறினள் மியூறியல். காரியம் வெகுவாக மிஞ்சிப்போனல் அப்படியே சொல்லாமல் கொள்ளாமல், தான் திட்டமிட்டு எண்ணி வந்த காரியத்தை செய்துவிட வேண்டும் என்பதுதான் அவளின் முடிவு.

அன்று இரவுதானே நேரில் சென்று நீலவேணியை அழைத்துவருவதாக உறுதி கூறினன் தணிகாசலம்.

அப்புறம்?

அப்புறம் என்ன! நாலைந்து பீர்ப் புட்டிகள் காலியாகின. மியூரியலும் தணிகாசலமும் நெருங்கி உட்கார்ந்து கொண்டார்கள்.

டாக்டர் சங்கரனையும், அவன் நண்பன் வைத்தியையும், காரில் ஏற்றிவிட்டு ரத்மலானை விமான நிலையத்திலிருந்து நாம் பிரிந்தோமல்லவா?

அவர்கள் என்ன ஆனுர்கள்? அவர்களையும் அந்தப் பொல்லாத நிழல் மனிதன் தொந்தரவு செய்தானு? என்ற விபரத்தையெல்லாம் நாம் ஒரு கண்ணேட்டம் செலுத்திவிட்டோமானல் நல்லது.

கார் சங்கரனின் டிஸ்பென்ஸரிக்குள் நுழைந்தது. டிஸ்பென்ஸரியின் தோற்றத்தைக் கண்ட வைத்தி அப்படியே திகைத்துவிட்டான்.

"என்னடா சங்கரா! ஒரே அமர்க்களப்படுத்திவிட்டிருக்கிருய்?" என்று தன் ஆச்சரியத்தைக் கூறினன் வைத்தி.

"போடா உனக்கு எப்பொழுதும் என்னைக் கிண்டல் செய்வதில் அலாதிப் பிரியம். உன் பாரீஸை விடவா நான் ஜமாய்த்து விட்டேன்!"

"பாரீஸ் கூடப் பிச்சை வாங்க வேண்டுமடா! உண்மையில் நல்ல நேர்த்தியாக வைத்திருக்கிருய். இங்கு வந்து இந்தப் பூங் காற்றை அநுபவிக்க வேண்டும் என்பதற்காகவே மனுஷனுக்கு நோய் வரலாம் போல இருக்கிறது."

"உன் புகழ் மாலையைக் கொஞ்சம் நிறுத்தினல் தேவலை. பாரீஸ் புதினங்களை உன்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒரே ஆவலாக இருக்கின்றது. அதுபற்றிப் பேசாமல் வேறு என்னென்னவெல்லாமோ பேசி நேரத்தை விரயம் செய்துகொண்டிருக்கிருயே!"

"வாஸ்தவம் சங்கர்! பாரீஸைப் பற்றிச் சொல்ல நிறைய இருக்கின்றது. பத்திரிகையில் என்னத்தை எழுதுகிருர்கள்! வாலும் இல்லாமல் தலையுமில்லாமல் செய்தி முண்டமாக ஏதோ எழுதி வெளியிடுகிருர்கள்.

பாரீஸை வளைத்தோடும் ஸைன் நதிப் படுக்கையில் உறைந்து கிடந்த பனிப்பாளங்கள் உருகி நதியே பெருக்கெடுத்து விட்டதாமே!"

"அந்த அக்கிரமத்தை ஏன் கேட்கிருய் சங்கர்? ஸைன் நதியின் ஆக்ரோஷத்தை என் கண்ணுலேயே பார்த்து அனுபவித்தேன்.

"'சோ' என்ற பேரிரைச்சலுடன் ஸைன் நதி பெருக்கெடுத்து வந்த பயங்கரக் காட்சியை இன்று நினைத்துக் கொண்டாலும் நெஞ்சு, அந்தப் பனிக்கட்டி உருகியது போல் உருகுகின்றது.

"இயற்கையின் சீற்றத்தின் பைலாஸக் குறறலை அன்று நேரில் நான் கண்டபோது, 'விஞ்ஞானம் இருந்தென்ன? அறிவு இருந்தென்ன?' என்ற எண்ணமே ஏற்பட்டது.

"அந்நதி வந்த வேகத்தில் அழிவு பாரீஸ் நகரத்தோடு மட்டும் நின்று விடாது; உலகத்தையே உருக்குலைத்து விடுமோ என்று பயந்தேன்." என்று கூறினன் வைத்தி.

"வேண்டும். நன்ருக வேண்டும். பாரீஸ் சர்க்காரின் மிருகத்தனமான ஆட்சிக்கு நல்லாக அது வேண்டும்" என்று சபித்தான் சங்கரன்.

"ஓகோ நீ வந்து நாஸர் கட்சிப் பேர்வழியோ?"

"ஏன் எகிப்தோடு விஷயத்தை நிறுத்திவிட்டாய்? மொரோக்கோ, டுனீஷியா, அல்ஜீரியா எல்லாம் எங்கே போவது?" என்று ஒரு போடுபோட்டான் சங்கரன்.

"நல்ல வேளை; இந்திய பிரான்ஸ் திட்டைப்பற்றி ஒன்றும் திட்டாமலிருந்தாயே! பிரான்ஸ் பிழைத்தது!"

"'பிழைத்தது' என்று இலேசாகச் சொல்லிவிடாதே! அந்நாட்டு மந்திரி சபை சமீபத்தில் நடந்த ஆவஸ் படையெடுப்பின் காரணமாக 'டான்ஸ்' ஆடிக்கொண்டிருக்கின்ற சங்கதி உனக்குத் தெரியாதோ?"

"நான் என்னத்தைச் சொல்வது பிரான்ஸிய விவ[illegible] என்று சங்கரனுக்கு ஒரு 'அரசியல் ஸர்ட்டிபிக்கேட்' கொடுத்தான் வைத்தி.

"என்னப்பா 'பிய்க்கிறது; பிடுங்கிறது'? எனக்கு கொஞ்சம் சொல்லுங்கள். பத்திரிகைக்கு உபயோகப்படும்!" என்று கூறிக்கொண்டு உள்ளே நுழைந்தான் அழகு.

## (30)

### நீலாவின் குழப்பம்!

"வாப்பா வா! நீ எங்கே வராமல் இருந்துவிடுவாயோ என்று பயந்து கொண்டிருந்தேன்" என்று அழகேசனுக்கு நல்வரவு கூறினன் சங்கரன்.

மூவரின் பேச்சும் அரசியல், கலை சம்பந்தமாக ஓடிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தின் பின்னல் அழகேசன் எழுந்து, ஏதோ அவசர வேலை இருக்கிறது என்று கிளம்பிவிட்டான். அவனைத் தொடர்ந்து வைத்தியும் சங்கரனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்ருன்.

ஃ ஃ ஃ

ஸீபேஸ் ஹோட்டலிலிருந்து புறப்பட்ட நீலவேணி நேரே தன் வீட்டுக்கு வந்தாள். வந்ததும் வராததுமாக ஒரு டெலிபோன் கோல் காத்திருந்தது.

"ஹலோ!" என்று கூப்பிட்டாள்.

"ஹலோ! நீலாதானே பேசுகிறது?"

"ஆமாம்; நீங்கள்?"

"நான்தான் நிழல் மனிதன் பேசுகிறேன். எப்படி விருந்தேற்பாடெல்லாம் கச்சிதமாக முடிந்துவிட்டதா?"

நிழல் மனிதன் என்றதும் நீலவேணிக்கு திகைப்பாகப் போய்விட்டது.

"நீலா!" டெலிபோனின் மறுமுனையிலிருந்து நிழல் மனிதன் நீலவேணியை அழைத்தான்.

"என்ன வேண்டும். சொல்லுங்கள்!!" என்று கேட்டாள் நீலவேணி.

"சொல்லட்டுமா? எனக்குத் தேவையானது எது என்பதை?"

"தாராளமாக"

"நீங்கள் வேண்டும்!"

நீலவேணிக்குப் 'பகீ'ரென்றது.

'நிழல் மனிதன் என்னதான் நமக்கு உதவி செய்தாலும், இப்படி இங்கிதக் குறைவாய்—மட்டரகமாய் பேசியது கண்டிக்கத்தக்கது' என்று எண்ணிய நீலவேணி "என்ன மிஸ்டர் உளறுகிறீர்கள்?" என்று கொஞ்சம் உறைப்பாகவே கேட்டு வைத்தாள்.

நீலவேணியின் இந்த இறுக்கமான பதில் நிழல் மனிதனுக்கு ஒரு விறுவிறுப்பைக் கொடுத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் கொடுத்த மறுமொழி அவ்வளவு சூடாயிருக்க வேண்டியதில்லை.

"நிதானமாகப் பேசுங்கள் அம்மா! நானு உளறுகிறேன். ஒரு மனிதன் ஆசையோடு தன் அபிப்பிராயத்தை வெளியிட்டால் அதற்கு இதுவா பதில்?"

"மிஸ்டர்! நிதானம் உங்களுக்குத்தான் இப்போ நிறைய வேண்டியிருக்கிறது. எனக்கல்ல!" என்று பதில் கூறினள் நீலா.

"இல்லை அம்மணி! நிதானத்தை வரவழைக்க வேண்டியவர்கள் தாங்கள்தான். விமானநிலையத்தில் தாங்கள் அந்த டாக்டரோடு பழகிக் கொண்ட விதம் எந்த நியாயத்தில் சேர்ந்தது?"

நீலவேணி திடுக்கிட்டாள். 'சங்கரனுடன் நான் கதைத்த விபரம் இவனுக்கு எப்படித் தெரிந்தது?'

"அதிகம் மூளையைப் போட்டுக் குழப்ப வேண்டாம் அம்மணி! அந்த டாக்டர் பயல் உன்னுடன் பேசக்கூடாது. நீயும் அவனுடன் பேசக்கூடாது. இது என் கட்டளை!"

"என்ன துணிச்சல்? எனக்குக் கட்டளையிட உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது!"

"அதிகாரம் நிறைய இருக்கிறது அம்மா! ஏன், உரிமை கூட இருக்கிறது. பேசாமல் நீ என்னுடன் வந்துவிடு"

"சீ! நன்ஸன்ஸ்! நீ இப்படிப்பட்ட பண்பு கெட்டவனென்று அறிந்திருந்தால் அன்று நள்ளிரவில் உன் உதவியை நான் நாடியிருக்கவே மாட்டேன்"

"பார்த்தீர்களா? 'நன்ஸன்ஸ்! என்று ஒரே வார்த்தையில் கூறித் தட்டிக்கழித்துவிட்டீர்கள். நான் மட்டும் அன்று நினைத்திருந்தால் உன்னை அலாக்காகத் தூக்கிக்கொண்டு மறைந்திருக்கலாம். இப்பொழுதும் காலங் கடந்துவிடவில்லை. நல்லபடியாய்க் கேட்கிறேன். நீ என்னுடன் வந்துவிடு. இல்லாவிட்டால்........."

"இல்லாவிட்டால்?"

"வர வைக்க நேரும்!"

அதற்கு மேலும் நீலவேணி நிழல் மனிதனுடன் தொடர்பு வைக்க விரும்பவில்லை. தடால் என்று ரிஸீவரை வைத்துவிட்டாள்.

அவள் எண்ணம் தீவிரமாகத் தொழிற்பட்டது. 'ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையே கடிக்க ஆரம்பித்துவிட்டானே இந்த மாயாவி! ஒரே நிமிஷத்தில் அவன்மீது தான் வைத்திருந்த நல்லெண்ணத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டானே!' என்று அவள் எண்ண அலைகள் ஓடி நெளிந்தன.

'பளி'ரென்று மியூறியல் பாரீஸைப்பற்றிக் கூறிய வார்த்தைகள் அவள் செவிகளில் மோதின. 'அடடா! அந்த வாய்ப்பு மட்டும் நமக்குக் கிடைத்துவிட்டால்...? இங்கு நாம் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. உல்லாசமாக மேல்நாட்டில் சுற்றிக்கொண்டு திரியலாம். மியூறியலின் வந்த காரியம் விரைவில் முடிய வேண்டுமே!' இப்படி ஓடினது அவளது இளம் சிந்தனை.

இப்படி எத்தனை நேரம் தன் சிந்தனைரதத்தைத் தட்டிக்கொண்டிருந்தாளோ தெரியாது. பங்களா முன்றலில் ஒரு கார் வந்து நின்ற சத்தத்திலிருந்துதான் அவள் சுயநினைவு பெற்ருள். கார் சத்தத்தைக் கேட்டதும், 'ஒருவேளை அந்தப் பொல்லாத மாயாவிதான் வந்துவிட்டானே' என்று எண்ணினள். நல்லவேளையாக அதிலிருந்து தணிகாசலம் இறங்கவும் அவளுக்கு வயிற்றில் பால் வார்த்தது மாதிரி இருந்தது.

காரிலிருந்து தணிகாசலம் இறங்கி வந்தான். "வாருங்கள்!" என்று அகமும், முகமும் மலர அவனை வரவேற்ருள் நீலவேணி.

இது என்ன? தணிகாசலத்தின் காரின் பின் ஸீட்டிலிருந்து இன்னுமொரு உருவம் வருகின்றதே! அது யாராக இருக்கலாம்? கன்னங்கரேல் என்று கறுப்புத் துணியால் உடல் முழுவதையும்போர்த்துக்கொண்டு வருகிறதே! ஒருவேளை வருவது நிழல் மனிதன்தானு? நீலாவுக்குத் தலை சுற்றியது.

(தொடரும்)


உங்கள் நீடித்த எழிலுக்கு

'எலேட்'

சுப்பர் லோன் ஜோர்ஜட்

என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலேட்'

சுப்பர் வோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,

லிமிட்டெட்,

கொழும்பு.



ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் குடைப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75, சிறியது ரூ. 3-00

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

**சி. ஆனந்தம், மண்டூர்.**

கே: "பெண் என்ருல் பேயும் இரங்கும்" என்கிருர்களே, தாங்களும் இரங்குவீர்களா?

ப: தம்பி, ஒருதரம் இரங்கி நான் பேயாகிவிட்டேன். அந்தத் தவறை மீண்டும் செய்வேனு?

ஃ

**செ. அரியநாதன, அம்பாரை.**

கே: வாழ்க்கையிலே ஏற்படும் தோல்விகளுக்குக் கைகண்ட மருந்து எது?

ப: மறதி.

கே: ஒளியே இல்லாவிட்டால்......

ப: ஒலிப்பதிவு மட்டும் நன்ருயிருந்தது என்று சினிமா விமர்சகர்கள் எழுதுவார்கள்.

கே: இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு எதற்குப் பெயர் பெற்றது?

ப: விளம்பரங்களைப் படிக்கும் அந்த மேதாவி,யார் என்பதை பெயர் சொல்லி விளம்பரம் செய்வதில் பெயர் பெற்றது.

ஃ

**எஸ். தேவராஜா, மட்டக்களப்பு.**

கே: ஒரு மனிதனுக்கு அவன் வாழ்க்கையில் முதல் கடமை எது?

ப: பசிக்கும் வயிற்றுக்கு உணவளிப்பது.

ஃ

**சா. எ. ந. ஆபிரகாம், அக்கரைப்பற்று.**

கே: பாரிஸில் 120'ரீன் ஏஜ்' பெண்கள் முழு நிர்வாணமாக 'டான்ஸ்' ஆடியதாக பத்திரிகையில் படித்தேன். இந்த டான்ஸ் இலங்கைக்கு எப்போது வரும்?

ப: இந்த மாதிரியான விஷயங்களில் அந்தரங்க ஞானம் உள்ளவர் உங்கள் பிரதிநிதி தான். அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஃ

**ஏ. கே. வேலாயுதம், மஸ்கேலியா.**

கே: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், டாக்டர் என். எம். பெரேரா, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இவர்கள் எந்தெந்த வகையில் சிறந்தவர்கள்?

ப: வரிசைக் கிரமப்படி சொல்லுகிறேன்: நாவன்மையில், பொருளாதாரத்தில், பொய்மையில், வாய்மையில்!

ஃ

**சா. முத்துலிங்கம், கந்தளாய்.**

கே: ஐயா, மிக வேகமாகப் பறக்கும் பறவை எது?

ப: பணம்! ஐந்து ரூபாயை மாற்றினுல் அரை நொடியில் பறந்து விடுகிறதல்லவா?

ஃ

**பி. மரியநாயகம், யாழ்ப்பாணம்.**

கே: தற்காலப் பெண்கள் பலரும் தங்கள் கொண்டைகளில் பட்சிகள் வைத்துக் கொள்கிருர்களே, ஏன்?

ப: இது தெரியாதா? தாங்கள் சண்டைக்காரர்கள் அல்லர்; சமாதானத்தை விரும்புபவர்கள் என்று விளம்பரம் செய்வதற்காக.

> **மிஸ்டர் குயுக்தியார்**
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

## பித்தர்களும் கவி பொழிவார்

முத்தினத்தை உதிர்த்தனையோ! முல்லை மலர்க் கூட்டத்தை
பிய்த் தெடுத்துச் சொரிந்தனையோ! பெண்பாவை நீ சிரித்தால்
இத்தனையும் நான் காண்பேன்! இறந்திருந்த உணர்ச்சியெல்லாம்
சிந்தத்துக் குயிர்த்தேறித் திணறடிக்கத் துடி துடிப்பேன்!

வான் முகிலைக் கொண்டனையோ! வண்ணமயி லிடந்தோகை
கான் புகுந்தோ கடன் பெற்ருய்? கண்மணியே நின்குழலில்
நான் காண்பேன் இத்தனையும்! நல்லழகின் நாயகியாய்
ஏன் பிறந்தாய், என்னிதயத் தேநடனஞ் செய்திடவோ?

நிலா பகலில் எறிப்பதென்ன? நளினமலர் இரவிலுமேன்
விலாப் புடைக்கச் சிரிப்பதுபோல் விரிந்திருப்பான்? பேச்சினிலே
பலாக் கனியைப் பிழிபவளே! பகல், இரவு வேளையில் நீ
உலாப் போனல் இத்தனையும் உன்முகந்தான் காட்டுமடி!

வெஞ்சிலையோ நின்புருவம்! வீரர்கை தாழவுகின்ற
நஞ்சனைய கூர்வாள்கள் நவமணியே நின் முகத்தில்
கொஞ்சிடுதே, விந்தையடி! குறுநகையைப் பெய்தெந்தன்
நெஞ்சகத்தைத் தாக்காதே, நீளுதடி வேதனை நோய்!

விந்தை பல கற்றனையோ! விசித்திரவுன் கண்ணசைப்பால்
இத்தரைவாழ் கோழைகளும் ஏகிடுவார்! போர்க்களம்! ஏன்,
பித்தர்களும் கவிபொழிவார்! பேசும் பொற் சித்திரமே!
எத்தனைநாள் பொறுத்திருப்பேன், இனியிறத்தல்தான் கதியோ?

—மு. பொன்னம்பலம்.

**ஆ. பற்குணன், வட்டக்கட்சி.**

கே: துறவிகள் என்போர் யாவர்?

ப: அறவழி நின்று புறவியல் கண்டவர்கள்.

ஃ

**செல்வி பாலாமணி, வண்ணர்பண்ணை.**

கே: உலகத்தைச் சுற்றி என்ன இருக்கிறது?

ப: விமானப்பாதை இருக்கிறது.

கே: தங்களின் கற்பனையைச் சோதிப்பது எது?

ப: நேயர்களின் கேள்வி.

ஃ

**எஸ். பானுமதி, மட்டக்களப்பு**

கே: ஆண்கள் மலருக்கு மலர் தாவும் வண்டென்ருல் பெண்கள்......?

ப: வற்ருத தேனூற்று.

கே: நான் சொன்னேன் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று. ஆனல் என் தோழி சொல்கிருள் 'அன்னையும் பிதாவும் அட்டமத்துச் சனி' என்று. இதில் எது உண்மை.

ப: தோழி 'பட்டுப்பழுத்தவள்' என்பதுதான் உண்மை.

ஃ

**நா தாமோதரன், கொழும்பு.**

கே: உண்மையில் திறமை உள்ளவர்கள் பரீட்சைகளில் சித்தியடையாமல் இருக்க, தகுதியும் திறமையும் மருந்துக்குக் கூட இல்லாதவர்கள் சித்தியடைந்து விடுகிருர்களே, இது எப்படி அண்ணு?

ப: அது செப்படி வித்தை தம்பி. காலித் தஹாவின் கையில் கல்வி இலாகா இருக்கும் வரை பரீட்சைக்குத் தோன்ருதவர்கள் கூட சித்தியெய்தத்தான் செய்வார்கள்.

ஃ

**ந. திலகரத்தினம், கல்முனை.**

கே: பிரதமர் பண்டாரநாயகாவுக்கு மூக்குக் கண்ணுடியைக் கழற்றிவிட்டால் பார்வை தெரியுமா?

ப: கண்ணுடி இருந்தும் சரியான அரசியல் பார்வை இல்லாதவருக்கு கழற்றிவிட்டால் எங்கே தெரியப்போகிறது? இராணி மாளிகையிலிருந்து பார்த்தால் ஒருவேளை மங்கலாகத் தெரியக் கூடும்.

ஃ

**ஏ. குமார், வந்தாறுமூலை.**

கே: நான் காதலிக்கும் பெண் எனக்கு படம் தர மறுக்கிருள். இதனுல் அவளை வெறுக்க எண்ணுகின்றேன். இது சரியா?

ப: சரிதான்; நீங்கள் காதலித்தது பெண்ணையல்ல; படத்தை என்று தெரிகிறது. அதுதான் கிடைக்கவில்லையே 'பட்' டென்று நிறுத்திக் கொள்ளும் உமது காதலை.

ஃ

**சு. கமலாவதி, கொழும்பு.**

கே: காதல் நோய் மாற்றக் கூடியதா?

ப: காலத்தால் வந்ததானல் 'கலியாணம்' என்ற பில்ஸ் கைகொடுக்கும்.

**க. ஒள்ளுப்பம்தம்பி, ஆனரப்பற்றை.**

கே: "ஐயம் இட்டுண்" என்று சொன்ன ஔவையாரே "ஏற்பது இகழ்ச்சி" என்றும் சொல்லிவைத்திருக்கிருர். ஆயின், யாருக்குக் கொடுத்து உண்பது?

ப: அதற்கா ஆள் இல்லை! "ஏற்பது இகழ்ச்சி" என்று கருதி தேவையிருந்தும் யாரையும் எதையும் வாய் திறந்து கேளாமல் இருந்து நாளும், மாளும் மனிதப் பிறவிகள் இருக்கவே இருக்கின்றன. அவற்றைத் தேடிப் பிடித்துக் கொடுத்து உண்ணலாமல்லவா.



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானுலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 4

இந்த நான்காவது வெண்பாப் போட்டிக்கென யாக்கப்படும் வெண்பாக்கள் மந்தி என்று ஆரம்பித்து மாடு என்று முடிய வேண்டும் என்பதே விதியாகும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

—ஆசிரியர்: சுதந்திரன்.

> 'நமக்குத் தொழில் கவிதை'
> C/o ஆசிரியர்,
> சுதந்திரன்,
> த. பெ. 1183.
> கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
இறுதி நாள்
15—3—1959

**மந்தி என்று ஆரம்பித்து மாடு என்று முடிய வேண்டும்**





ஓடிக்கொலோன்
இதமளிக்கும் தன்மையில்
சுகானந்தம் பெறுங்கள்.

**மிக்காடோ**
**ஓடிக் கொலோன்**
**டல்கம் பவுடர்**

கவர்ச்சிகரமான
புதிய டின்களில்
எங்கும் கிடைக்கும்.

**மிக்காடோ**
**அன் கம்பெனி,**
டாம் வீதி, கொழும்பு.
போன் : 3242.

**USE K. D. K. FANS**



அல்லிக் குளத்தருகில் வீசும் தென்றற் காற்றை, உங்கள் வீடுகளிலோ, காரியாலயங்களிலோ, அறைகளிலோ பெற்று சுவாத்தியம் பெறவேண்டுமெனில் உலகப் பிரசித்தி பெற்ற

**கே. டி. கே.**

**மின்சார விசிறிகளைப் பாவியுங்கள்.**

★ உறுதிப்பாடு ★ நீடித்த பாவனை
★ திறமையான சேவை

இவைகளுக்குக் கே. டி. கே. மின்சார விசிறிகள் உத்தரவாதம் பெற்றுள்ளன.

மேசை, கூரைப் பலகை, அடித்தம்பமுடைய மின்சார கே. டி. கே. விசிறிகள் விதம் விதமான அளவுகளிலும், கண்கவர் வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். விலை போட்டா போட்டி.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

**துரை அருள் & கோ லிமிட்.,**
93, கெய்ஸர் வீதி, கொழும்பு—11.
போன் : 4588.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம் — பொருளாதாரம் (8)

# திட்டமிடுதல்:

## முதலீடும் பிறநாட்டு மூலதனமும் (1)

## PLANNING:

### INVESTMENT AND FOREIGN CAPITAL (1)

**பாத்திரங்கள்**

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

உபாத்தியாயர்:

சென்ற முறை ஒரு நாட்டில் உருவாகும் முதலீட்டை நிர்ணயிக்கும் சக்திகளைப் பற்றி ஆராய்ந்தோம்.

குமரேசு:

முதலீட்டை நிர்ணயிக்கும் சக்திகளனைத்தையும் நாம் பார்க்க வில்லை. பிரதான சில சக்திகளைத்தான் ஆராய்ந்தோம். தூய பொருளியலாய்வில் (Economic theory) முதலீடும் இன்னும் பல அம்சங்களும் ஒன்ருேடொன்று பின்னல் பட்ட பிணைப்பாகக் காட்சி யளிக்கும் (Exhibit a complex inter-relationship) பிரயோக பொருளியலாய்வில் (Applied economics) ஒவ்வோர் சூழலிலும் முக்கிய ஸ்தானத்தை வகிக்கும் சக்திகளை மட்டும் அவதானித்தால் போதுமானது. அதன் பிரகாரமே முதலீட்டை நிர்ணயிக்கும் சக்திகளில் பெரும்பாலானவை தலா விதவருவாயையும், மக்கள், வருவாயில் எவ்வளவு பெரிய பங்கினை நுகர்ச்சிப் பொருள்களில் செலவிடுகின்றனர் என்பதிலும் தங்கியிருக்கின்றன என்று குறிப்பிட்டோம்.

அப்பாக்குட்டி:

தம்பீ, ஒரு விசளம். அண்டைக்கு முதலீடு என்பது செயலைத்தான் காட்டும் எண்டும் அதாவது உற்பத்திப் பொருள் உருவாக்கப் படுகின்றதைத்தான் முதலீடு எண்டு சொல்ல வேண்டும் எண்டல்லோ சொன்னது.

குமரேசு:

மிக நுட்பமாக அவதானித்திருக்கிறீர்கள். நாங்கள் இப்பொழுது குறிப்பிட்டன உயிரற்ற சக்திகளை. ஆம் இவை வசதிகளாகும். அவ்வசதிகளை மனோதைரியத்துடனும் பிரயாசையுடனும் உபயோகித்து உற்பத்திப் பொருளை உருவாக்கினுல்தான் முதலீடு பெருகும். அவ்வாறு செய்யும் செயலையும் அச் செயலைச் செய்யும் உஷார் உற்சாகத்தையும் (Entrepreneurship) என்று ஆங்கிலத்தில் கூறுவர். உண்மையில் அது ஆங்கிலச் சொல் அல்ல. ஆங்கிலத்தில் அக்கருத்தைக் காட்டும் சொல்லேயில்லை. பிரஞ்சு மொழியில் உள்ள சொல்லையே ஆங்கிலத்திலும் உபயோகிக்கிருர்கள். அந்தப் பண்பை விவரமாக இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆராய இருக்கின்ருேம். தற்போதைய ஆராய்ச்சிக்கு நாம் முன்னர் குறிப்பிட்ட இரு சக்திகளையும்-அதாவது தலாவித வருவாய் ஒன்று, மற்றது தலாவித வருவாயில் நுகர்ச்சிப் பொருட்களில் செலவிடும் பங்கின் பருமன்—கண்காணித்தல் போதுமானது.

உபாத்தியாயர்:

சரி. பிறநாட்டுதவியின்றி நாட்டுப் பொருளாதாரத்தை முன்னேற்ற நிலைக்குக் கொண்டுவர முடியாது என்றும் அந்நிய நாட்டு மூலதனம் அவசியம் என்றும் கூறுகின்றனரே?

குமரேசு:

பிற நாட்டு மூலதனம் அநேக நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்கு பெருந்துணைபுரிந்திருப்பது உண்மைதான். ஆயினும் பிற நாட்டு உதவியும் மூலதனமும் இன்றிப் பொருளாதார அபிவிருத்தியடைய முடியாதென்று சொல்வதற்கில்லை. இலங்கையின்— உண்மையில் தென்னிலங்கையின் பொருளாதாரம் பிற நாட்டு மூலதனத்தாலும் பிற நாட்டவரின் பிரயாசையாலும் தான் கணிசமான அளவு நிலை பெற்றது என்பது உண்மையே.

அப்பாக்குட்டி:

இந்த ரப்பர் தேயிலையெல்லாம் வெள்ளைக்காரன்ரை முதலும் ராமசாமி மீனாட்சியின்ரை கையுழைப்பும் தானே.

உபாத்தியாயர்:

பிற நாட்டு மூலதனம் எவ்வாறு கிடைத்தது?

குமரேசு:

16-ம் 17-ம் நூற்றாண்டுகள் தொட்டு ஐரோப்பிய சமூகங்கட்கு ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க நாடுகளை ஆக்ரமித்து சாம்ராச்சியங்

**சகாதேவன்**

களை சிருஷ்டிக்க வேண்டும் என்ற ஆர்வம்-திய எண்ணம் உண்டாயிற்று. ஆகவே 16-ம் நூற்றாண்டு தொடக்கம் 20-ம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை உள்ள காலத்தை உலக சரித்திரத்தில் ஒரு சாம்ராச்சிய சகாப்தம் என்று கூறலாம்.

அப்பாக்குட்டி:

ஏன் தம்பி இந்தச் சிங்களவர் தமிழரை அடக்கி ஒரு வகை சாம்ராச்சியம் தானே நிலைநாட்டப் பார்க்கினம்?

உபாத்தியாயர்:

சாம்ராச்சியம் மட்டுமா? தமிழர் என்று ஒரு தனிப்பட்ட சமுகமே இலங்கையிலே இல்லை என்று சொல்லுமளவுக்கு அழித்து விடவும் பார்க்கிருர்கள்.

குமரேசு;

இந்தச் சாம்ராச்சியப் பித்தோடு கைகோத்து வந்தது தான் பிறநாட்டு மூலதனம். ஆனுல் அவ்வாறு வந்த மூலதனம் நாட்டுக்குளவ்வளவோ நன்மைபயக்கியிருக்கின்றது. சாம்ராச்சியத்தைக் கைவிட்டு விட்டுப் போகும் பொழுது நாட்டில்விதைத்து வளர்த்த முதலீட்டையும் விட்டு விட்டே போக வேண்டும்.

உபாத்தியாயர்:

தற்பொழுதும் எவ்வளவோ மூலதனத்தை பிற நாட்டு அரசாங்கங்கள் கொடுத்துதவுகின்றன வாமே?

குமரேசு:

தற்பொழுது தருவிக்கப்படும் மூலதனத்திற்கும் முன்னுட்களில் இலங்கையில் வந்திறங்கிய மூலதனத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் உண்டு. தற்பொழுது கிடைக்கும் மூலதனங்கள் ஒன்றில் பிறநாட்டு அரசாங்கங்களிடமிருந்து அல்லது சர்வதேச ஸ்தாபனங்களிடமிருந்து கிடைக்கின்றன. இவை ஆதாய நோக்குடன் (Profit motive) வரவில்லை. ஆனுல் முன்னுட்களில் வந்திறங்கிய மூலதனம் ஆதாய நோக்கினுல் உந்தப்பெற்று தனி நபரின் சொத்தாக வந்து [illegible] யால் இலங்கையில் ஈட்டப் பெற்றது. தற்பொழுது வரும் மூலதனத்தில் பெரும் பகுதி உதவி நன்கொடையாகவும் சிறு பகுதி கடன் முறையாகவும் வந்து சேர்கிறது. இவற்றைவிட ஒரு சிறு தொகை கிளை நிறுவனங்களுக்காகவும் வருகின்றது.

உபாத்தியாயர்:

கடைசியில் கூறிய இனத்தை விளக்கிக் கூறவேண்டும்.

குமரேசு:

அதாவது இன்றைய உலகில் பல நாட்டு அரசாங்கங்களும் பல்வேறு வகையான இறக்குமதிப் பொருட்களுக்கு உயர்ந்த தீர்வையை நிறுவியோ அன்றித் தடையுத்தரவை விதித்தோ கட்டுப்பாடு செய்கின்றன. இதன் காரணமாக சிற்சில ரகப் பொருள் உற்பத்தியாளர்கள் — அதாவது பிற நாடுகளில் ஏற்றுமதிக்காக பெருமளவில் உற்பத்தி செய்பவர்கள் — பல்வேறு நாடுகளிலும் கிளை நிறுவனங்களைத் தோற்றுவித்து ஓரளவு உற்பத்தியை அந்தந்த நாட்டு நிறுவனங்களிலேயே செய்து தீர்வைப்பழுவையோ தடையுத்தரவுகளையோ தவிர்க்கும் நோக்கமாக சொற்ப முதலீடுகளை ஒவ்வொரு நாட்டிலும் தாவத் தலைப்பட்டிருக்கின்றனர்.

உபாத்தியாயர்:

மற்றைய நாட்டு அரசாங்கங்கள் என்ன காரணத்திற்காக நன்கொடையாக மூலதனம் உதவ வருகின்றன?

குமரேசு:

அநேகர் இதை ஒரு அரசியல் சூது என்று சொல்வார்கள். ஆனுல் அது உண்மையில் 100க்கு 90 விகிதமும் தப்பான ஒரு முடிவேயாகும். சென்ற முப்பது ஆண்டுகளில் உலகத்தைப் பிடித்திருந்த பொருளாதார விழுக்காடு (Economic depression) காரணமாக பல்வேறு நாட்டுப் பொருளியலறிஞர்களும் அரசியல் ஞானிகளும் நிலைமையை ஆராய்ந்து அறிந்து வழிகாட்ட, அதன் விளைவாக இன்றைய உலகில் ஒரு புதிய மனப்பான்மை வேரூன்றியிருக்கின்றது. அதைச் சுருக்கமாகச் சொல்வதானுல் "அயல் நாடு பிச்சையெடுக்கும்போது உன் நாடு செழிக்காது" you cannot beggar your neighbour and yourself hope to be rich என்ற உண்மையை எல்லா நாடுகளும் உணர்ந்திருக்கின்றன எனலாம்.

இதன் அர்த்தம் என்னவென்ருல் இன்றைய உலகில் பல்வேறு நாடுகளின் பொருளாதாரமும் ஒன்ருேடொன்று பின்னல்பட்டு ஒவ்வொன்றும் மற்றவைகளில் பெருமளவிற்குத் தங்கியிருப்பதே காரணம். ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியாகும் பொருளில் கணிசமான பங்கு பிறநாட்டுச் சந்தைகளிலேயே விற்பனையாக வேண்டும். அப்படி விற்பனையாவதற்கு அந்நாடு செழித்துச் செல்வமுடையதாயிருக்கவேண்டும் ஏழ்மை நிலையிலிருக்கும் நாட்டிற்கு மிகச் சிறிய தொகைப் பொருள்களையே ஏற்றுமதி செய்ய முடியும். இதே மாதிரி ஒரு நாட்டிற்குத் தேவையான பொருட்களில் பெருமளவு பிறநாட்டில் உற்பத்தியாகி இறக்குமதி செய்யப்படவேண்டும். இதன் காரணமாக எந்த ஒரு நாடும் தனிப்பட்டவகையில்

(9-ம் பக்கம் பார்க்க)


உங்கள் அபாயகரமான விரோதி



பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல்? வாய்ப் புண்? பல்லாட்டம்?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள' பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும்! நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

பயனீர் பார்மஸி,

183, ஷாப்புத்தெரு, கொழும்பு.



ஈழத்துச் சிறுகதைகள்

பத்திரிகைகளாலும், அறிஞர்களாலும் பாராட்டப்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் கதைத் தொகுதி.

தனிப் பிரதி: ரூபாய் 2 சதம் 50

விற்பனையாளர்க்கு 25% கமிஷன்

பாரி நிலையம்

59. பிராட்வே ★ சென்னை—1.

இலங்கையில்:-

1. நவலட்சுமி புத்தகசாலை, 136, செட்டியார் தெரு, கொழும்பு.
2. ரத்தினு ஸ்டோர்ஸ், 130, மலாய் வீதி, கொம்பனித்தெரு.
3. கலைச்சோலை நூலகம், திருகோணமலை.
4. மீனும்பிகா புத்தகசாலை, பதுளை.
5. கலாநிதி புத்தகசாலை, மட்டக்களப்பு.
6. கு. தம்பித்துரை, யாழ்ப்பாணம்.


# மக்கள் குரல்

## தமிழாசிரியர்களின் பதவிப் பித்து

கடந்த வாரச் சுதந்திரனில் வெளியான அவசர கால நிலைமை '58 கட்டுரையில் "புத்தரின் சீடருக்கு இத்தனை பெண் பித்தா?" என்று இடித்துக் காட்டியிருந்ததைப் பார்த்தேன் நம்மவர்களுக்கு அதைக் காட்டிலும் கேவலமான தோர் பித்து தலைக்கேறிவிட்டது தங்களுக்குத் தெரியாதா?

யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் வருடாந்தக் கூட்டம் நடத்திய தமிழாசிரியர்கள் தம் பதவிப் பித்தை என்னென்று சொல்வது? நாடே சிரிக்கிறதே. ஆசிரிய சமூகம் வெளியில் தலைகாட்ட முடியாத நிலையை உண்டாக்கிவிட்டார்களே பதவிமோகம் கொண்ட பெருச்சாளி ஆசிரியர்கள் சிலர்.

ஒருவரின் தகுதி அறிந்து அவரைப் பிறராகப்பார்த்து பதவியில் அமர்த்துவதா அல்லது ஒருவர் "என்னைத் தெரிஅது செய்கிறேன்" என்று பல்லிளித்து உத்தியோகப் பிச்சை கேட்பதா? சங்கக் கூட்டத்தில் தேர்தல் நேரத்தில் நடந்த தில்லுமுல்லுகள், அப்பப்பா சொல்லுந் தரமல்ல, ஆசிரியர் சமூகத்துக்கு அவமானம்! அழியாதவடு! போதும் இந்தப் பதவி வேட்டை. ஆசிரியர் சங்கம் ஒரு சிலரின் தனிச் சொத்தல்ல. உறுப்பினருக்கு தாம் விரும்பியோரை நியமிக்கும் உரிமை வேண்டும்.

—ஆசிரியன்

யாழ்ப்பாணம்.

## ஆபத்தான யோசனை

பத்திரிகைகளை தேசியமயமாக்கும் யோசனை மிகவும் ஆபத்தானது. நலிந்து கிடக்கும் தமிழ் மக்களை அது மேலும் பாதிக்கும்.

இலங்கை வானெலியை தனது தேவைக்காக துஷ்பிரயோகம் செய்யும் அரசாங்கம் பத்திரிகைகளையும் இந்த நிலையில் தான் பாவிக்கும் என்பது தெளிவு.

இதனுல் மக்கள் குரல் ஒடுக்கப்படும். ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படும். சர்வாதிகாரம் தலை தூக்கும்.

திரு. 'சுன்' கூறியதுபோல் பத்திரிகைகளை குறை கூருமல், அவை தம்மைக் கண்டிக்காத வகையில் நாடாள்வோர் நடந்து கொள்வதே மேல்.

— க. சுப்பிரமணியம்,

காரைநகர்

## யாழ் மாநகர சபை சொல்லும் செயலும்

தமிழ்ப் பிரதேசங்களில் எல்லாம் அதிகமாக தமிழிலேயே அலுவல்கள் முழுவதும் செய்கிருர்கள். ஆனுல் எமது யாழ்ப்பாணம் மாநகர சபை வாய் அளவில் ஆங்கிலத்தில் அலுவல்கள் எல்லாவற்றையும் செய்கிறது.

நமது மொழியை நாமே புறக்கணித்து நடந்தால், மற்றவர்கள் எப்படி செய்வார்கள்? இன்று நாம்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டு சகோதரியின் முன்மாதிரி

## கதியற்ற சைவக் குருக்கள் குடும்பத்துக்கு நிதி உதவி

### 'அடி அடியென்று அவரை அடித்துக் கொன்றூர்கள்' — கைக் குழந்தையோடு கூடிய இளம் மனைவி தரும் உருக்கமான விவரம்

மே-ஜூன் மாதக் கலவரத்தின்போது தென் இலங்கையில் நடந்த கோரச் சம்பவங்களில் கொடுமை மிக்கது பாணந்துறைக் கோயில் குருக்கள் கொல்லப்பட்டது என்பது எல்லோருக்குந் தெரியும். சில காலமாக எங்கும் இதே பேச்சு அடிபட்டது "அந்தோ பரிதாபம்!" என்று அனுதாபப்பட்டோர் தொகை ஏராளம்.

ஆனல் இன்று நிலைமை வேறுகிவிட்டது. தமது உயிரைப் பலி கொடுத்த அந்தச் சைவக் குருக்களைப் பற்றி எண்ணுவோர், அவர் விட்டுச் சென்ற மனைவியும் குழந்தையும் என்ன பாடு படுகிறூர்கள், அவர்கள் வாழ வழியுண்டா என்பதை நினைத்துப் பார்ப்போர் யார்?

இளமை மாறுத வயது. முப்பத்தைந்து கூட ஆகவில்லை. இல்லற வாழ்க்கை மேற் கொண்டு ஆறே ஆறு வருஷங்கள். "அப்பா" என்று மழலை பொழிந்து அன்பொழுக கட்டித் தழுவி இன்பமூட்டும் பிள்ளைக் கனியமுதைப் பெற்றெடுத்து நான்கே நான்கு ஆண்டுகள்தான். அதற்குள் காலன் கவர்ந்து விட்டான் திரு.பா. சுந்தரராஜக் குருக்களை.

#### மனைவி, குழந்தை பரிதாப நிலை

காடையர்கள் செய்த கொடுமையால் இன்று குருக்களின் 25 வயது இளம் மனைவி இராஜேஸ்வரி நடுத்தெருவில்! தனித்து அல்ல: கையிலே நாலு வயதுக் குழந்தையோடு. நல்லூர் வைமன் வீதி 12-ம் இலக்க இல்லத்திலே காலடி வைத்தால் பட்டு இழந்து, பொட்டு இழந்து, மொட்டு மாலை இழந்து மாங்கல்யமும் இழந்து அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாக மலங்கிப் போய் இருக்கும் அம்மையையும் "அப்பா...... அப்பா" என்று கலங்கிக் கூப்பாடு போடும் குழந்தையையும் கண்டாக வேண்டும். கண்டோர் நெஞ்சு எத்தனைதான் கல்லாக இருந்தாலும் நெக்குருகி விடும் என்பது நிச்சயம்.

தட்டித்தவறி அந்த அம்மாளோடு பேச்சுக்கொடுத்து விட்டால் அழுதழுது அவர் தமது கணவர் கொல்லப்பட்ட விதத்தையும் அவரது அருமை பெருமைகளையும் சொல்லும்போது கேட்பவர்கள் தாமும் கண்ணீர் சிந்தாமல் தப்பமுடியாது.



காலஞ் சென்ற
திரு. சுந்தரராஜக் குருக்கள்

பாணந்துறைச் சைவக் கோயில் அழிக்கப்பட்ட போது, அதைச் செய்த அதே காடையர்களால் சுந்தரராஜக் குருக்களும் எரித்துக் கொல்லப்பட்டார் என்பதுதான் அனேகமாக எல்லோரதும் நம்பிக்கையாகும். உண்மை என்னவெனில் குருக்களைக் காடையர்கள் பிடித்து அடியடியென்று அடித்து அடியாலேயே கொன்று தீர்த்துவிட்டார்கள். தீவைத்த சம்பவமெல்லாம் பின்னர்தான். ஒருவர் இருவரா? குண்டர்படை ஒன்று, பேய்க் கூச்சலோடு வந்து பாய்ந்து அகப்பட்டதைக் கொண்டு உள்ளவர்கள் எல்லோரும் அடித்துப் பதம் பார்த்தார்கள். அழுது என்ன, தொழுது என்ன? ஆண்டவனுடைய ஆலயத்துக்கு வந்த ஆபத்து ஆறு

(8-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### மக்கள் குரல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழி சுதந்திரம் நில சுதந்திரம அற்று அனுதைகளாகத் தவிக்கும் போது உணர்ச்சியற்று நமது மொழி, கலாச்சாரத்தை மறந்து நடந்தால் எமது கதி என்னவாகும்? எப்போது எமது குறை நீங்கும்.

—ந. திருச்செல்வம்,
வண்ணூர்பண்ணை.

### இந்தியத்....

(1-ம பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள இந்திய ஹை கமிஷனர் காரியாலயத்திலிருந்து கிடைத்த கடிதம் பாரதி கல்லூரியினரைத் திகைக்கவைத்துவிட்டதாம்.

"எங்களிடம் தமிழ்ப் பிரசுரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் எதுவும் கிடையா. வேண்டுமானல் பத்திரிகை ஏஜண்டுகளின் விலாசங்கள் தருகிறேம். அவர்களிடம் கேட்டுப் பாருங்கள்" இப்படியாக கடிதம் கிடைத்தது இந்திய ஹை கமிஷனரிடமிருந்து.

அதேசமயத்தில் ருஷ்ய ஸ்தானிகரிடமிருந்து மாஸ்கோவில அச்சிடப்பட்ட தமிழ்ப் புத்தகங்களும், இதர ஆங்கில மொழிச் சஞ்சிகைகளும கிடைத்ததோடு, பத்திரிகைக் கண்காட்சி நடத்தும் முயற்சியையும் பாராட்டிக் கடிதம் கிடைத்ததாம்.

மற்றும் பல ஸ்தானீகர்களும் பத்திரிகை புத்தகங்கள் அனுப்பியுள்ளார்களாம்.

தமிழ் மக்களும் வாழும் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் மட்டும் "தமிழ்" தம்மிடம் கிடையாதென்கிறூர். இந்த நிலை என்று மாறுமோ என்று கேட்கிறூர் பாரதி கல்லூரி ஆசிரியர் ஒருவர்.

### விபச்சாரம்

ஆசிரியர்: மா. சே. அருள். கிடைக்குமிடம்: திரு. வி. க. பதிப்பகம். 143/3 பிச்சாட்ஸ் லேன், மருதானை, கொழும்பு, விலை சதம் 40.

யார் விபசாரம் செய்கிறூர்கள்? ஆண்களா, பெண்களா? இருவருமே செய்கிறூர்கள். ஆனல் பெண்கள் செய்வதைத்தான் விபசாரம் என்று சமூகம் பெயர் சொல்லி அழைக்கிறது. விபசாரம் செய்வதற்காக மட்டுமல்லாமல் ஒரு தலைப்பட்சமாகப் பெண்களைத் தாக்குவதற்காகவும் ஆண்கள் கண்டிக்கப்படவேண்டும். இல்லையா?

'விபச்சாரம்' நூலாசிரியர் ஆண்களுக்கு சரியான 'சவுக்கடி' கொடுத்திருக்கிறூர். பெண்கள் பல காரணங்களுக்காக விபசாரம் செய்கிறூர்கள். அவற்றுள் ஆண்களும் ஒரு காரணம் என்பதை ஆசிரியர் இடித்துக் கூறியிருக்கிறூர்.

விபசாரம் நிச்சயமாக ஒரு சமூகத் திட்டு என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டிவிட்டு இதனை ஒழிப்பதற்கான வழி வகைகள் சிலவற்றையும் தமக்குத் தெரிந்தவரையில் கூறியிருக்கிறூர்.

சரளமான தமிழில் விறுவிறுப்பான நடையில் நூல் எழுதப்பட்டிருக்கிறது. 28 பக்கங்கள். இல்லை இல்லையென்றாலும் அரை மணித்தியாலயத்தில் படித்து முடித்துவிடலாம்.


NOMAD
நோமாட்

பால் வளம்மிக்க தேசத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஆகச் சிறந்த பால்



நோமாட் பால் பவுடர்

10மடங்கு சிறந்தது



1. போஷாக்கானது:
இயற்கைப்புரதச் சத்து, தாதுச் சத்து, உயிர்ச் சத்து ஆதியன கொண்டு விஞ்ஞான முறைப்படி சமரீதியாக சமநிலைப்படுத்தித் தயாரிக்கப்பட்டது.
2. ஆரோக்கியமானது:
ஆகக் கூடுதல் ஊட்டமளிக்கும் தன்மைவாய்ந்தது.
3. புதியது:
பசுவிலிருந்து கறக்கப்பட்டவுடனேயே பக்குவப் படுத்தப்படுகிறது. எப்பொழும் நாளாந்தம் விநியோகிக்கப்படுகிறது.
4. இலகுவான ஜீரணிப்பு:
விசேஷமாக குழந்தைகளுக்கும், பத்திய உணவு உண்ணும் வியாதியஸ்தர்களுக்கும் உகந்ததாக சிபார்சு செய்யப்படுகிறது.



5. பத்திரமானது:
க்ஷயரோக வியாதியால் பீடிக்கப்படாத பசுக்களின் பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது.
6. சேதமில்லை:
பால் தேவைப்படும் ஒவ்வோர் தருணத்திலும் தேவையான அளவு பால் கலந்து கொள்ளலாம். அதிகமுமில்லை—குறைவுமில்லை.
7. உத்தரவாதம்:
தயாரிக்கப்படும்பொழுது அதற்கு முன்னரும் பின்னரும் கவனமாக ஜரூரான கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுகிறது.
8. சுவையுள்ளது:
பிரசித்தி பெற்ற டச் தேசத்திய பசுக்களிலிருந்து தயாரிக்கப்படும் செழுமையான முழு ஆடை நிரம்பிய பால்.
9. தயாரிப்பது சுலபம்:
நூற்றுக்கு நூறு வீதம் தண்ணீரில் அதிவிரைவாக கரைந்துவிடுகிறது.
10. சுத்தமானது:
ஆகக் கூடிய அளவு சுத்தம்.




நியூட்ரிஸியாஸ் போஷாக்கானது.
நியூட்ரிஸியாவின் பத்து காரணங்களுடன் கூடிய நோமாட் பால் பவுடரையே கேட்டு வாங்குங்கள்.

எல்லாப் பிரபல ஸ்டோர்களிலும் கெமிஸ்ட்டுகளிடமும் கிடைக்கும்.

சோல் ஏஜண்டுகள்:

செட்ராக் (சிலோன்)
22, அப்பர் சதாம் வீதி,
கொழும்பு—1.
போன்: 78758.

Nutricia


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

(8)

நடு நிசியில் 'தடா' ரென்று கேட்ட ஓசையைத் தொடர்ந்து 'பூட்ஸ் கால்'களின் நடமாட்டமும் காதில் விழுந்தது. மின் விசைகள் அமுக்கப்பட்டன. கணப்பொழுதில் மின்சார விளக்குகள் ஒளிபரப்பின. என் அறையை—இல்லை இல்லை—என்னைக் காவல் செய்துகொண்டிருந்த பொலீஸ்காரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஒவ்வொரு மூலைகளுக்குள் தலையை விட்டுப் பார்த்தார்கள். மலசலக் கூட அறைக்குள் போனார்கள். மேசைக்கு கீழே பார்த்தார்கள். மேசை லாச்சியை இழுத்துப் பார்த்தார்கள். கட்டிலைச் சுற்றி வரப்பார்த்தார்கள். கட்டிலின் கீழே குனிந்து பார்த்தார்கள். அவர்கள் முகத்தில் ஒருவித பயம்—பீதி தெரிந்தது. பதட்டம் தோன்றியது நான் வாரிச் சுருட்டி எழுந்து கட்டிலின் மீது உட்கார்ந்து இவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

## சந்தேகம்

சிரித்தபடி "ஏன் இப்படி அவதிப்படுகிறீர்கள்"? என்று கேட்டேன்.

"ஏதோ ஒரு சப்தம் கேட்டது. அது என்னவென்று புரியவில்லை" என்றார்கள்.

"நான் தான் சிலைமாதிரி இங்கிருக்கின்றேனே, எதற்காக இப்படி விழுந்தடித்துக் கொள்ளுகிறீர்கள்?" என்று மீண்டும் ஒரு கேள்வியை கேட்டேன்...

"இல்லை...இல்லை..." என்று இழுத்துக் கொண்டார்களே தவிர அவர்களுக்கு எழுந்த சந்தேகம் மறைந்ததாயில்லை. அவர்களுடைய கண்கள் எதையோ கூர்ந்து நுணுகிப் பார்த்துக்கொண்டிருந்தன.

## எப்படி சேமம்?

நான் எனக்குள்ளே சிரித்தபடி கட்டிலில் சாய்ந்தேன்.

எங்கள் அறைக் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. இந்த அர்த்தராத்திரியில் யாரது கதவைத் தட்டுவது என்று யோசிக்கையில் அறைக்குள் ஒரு பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நுழைந்தார். "எப்படிச் சேமம்" என்று புன்முறுவலோடு என் சுகத்தை விசாரித்தார். "பரவாயில்லை" என்றேன்.

வந்த வேகத்தில் அவர் சென்று மறைந்தார். கண்களை மூடியபடி படுத்துக் கொண்டேன். மிக மெதுவாக அப் பொலீஸ்காரர்கள் பேசுவது காதில் விழுந்தது. மறுபடியும் 'பூட்ஸ்கால்'களின் ஓசை கேட்டது. ஆனால் முன் போல் வேகமும் விரைவுமாக அல்ல. மெதுவாக. ஒரு பக்கமாக சாய்ந்து படுக்கையில் என்ன நடைபெறுகிறதென்று கவனித்தேன்.

## பொலீஸ்காரர் வெட்கம்

இரண்டு பொலீஸ்காரர்கள் சப்தமே எழாதவண்ணம் அந்த அறையிலிருந்த ஒரேயொரு ஜன்னலின் கதவுகளை இழுத்து மூடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பாழாய் போன ஜன்னல் கதவுகளில் ஒன்று உடைந்து, பூட்டு விட்டுப்போய் இருந்தது. சப்தம் கேட்காது ஜன்னல் கதவுகளைப் பூட்டிவிட வேண்டுமென்ற அவர்கள்

---

**மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை**

---

எண்ணத்துக்கு மாறாக "பேச முடியாத அந்த பாதி ஜன்னல் கதவு" பேரிரைச்சலைக் கிளப்பி அடைத்துக் கொண்டது.

"ஜன்னலை திறந்து வைத்திருந்தாலும் நான் ஓடிப் போய் விடமாட்டேன்" என்று சொன்னபோது அவர்கள் தங்கள் செய்கைக்காக வெட்கப்பட்டுக் கொண்டார்கள்.

மூடிய ஜன்னலுக் கூடாகவும் கடல் அலைகளின் பேரோசை காதில் விழுந்த வண்ணமிருந்தது.

## பாடசாலை நினைவுகள்

"அலை கடல் தூங்காதோ தோழி" என்னும் திருமதி டி. கே. பட்டம்மாளின் இனிய பாட்டு என் ஞாபகத்தில் எழுந்தது. இதைத் தொடர்ந்து பாடசாலை நினைவுகள் எழுந்தன. பள்ளிக்கூட நாட்களை நினைத்துவிட்டால் வயோதிபர்கள்கூட சின்னஞ்சிறுவர்களாக மாறிவிடுகிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்கோ பேரப்பிள்ளைகளுக்கோ ஏதாவது புத்திமதி கூற வேண்டுமானால் வார்த்தைக்கு ஒருதடவை 'நான் பள்ளியில் படிக்கிறபோது' என்று கூறிக்கொள்வார்கள். பாடசாலை நாட்களில் அழியாது நிலைபெற்ற பல நிகழ்ச்சிகளில் முதலிடம் பெறுவது எங்கள் எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் வாய்விட்டுக் கூறியதீர்க்கமான முடிவுகள்.

## வாழ்க்கை லட்சியம்

அப்போது நான் தமிழில் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தி விட்டு ஆங்கிலக் கல்லூரியில் நுழைந்து நான்கு வருடங்களாயிற்று. ஜே. எஸ். ஸி. வகுப்பில் பயின்ற ஒவ்வொரு மாணவனதும் எதிர்காலம் என்னவென்று ஆசிரியர் கேட்டுக்கொண்டு வந்தார். என் சகமாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உத்தியோகத்தை நயப்பற்றியே சொன்னார்கள். பெருமைக்குச் சொல்லவில்லை—என் உடன் மாணவர்கள் முழுப்பேரும் அரசாங்கத்தில் ஆசிரிய வேலைமுதல் டாக்டர்கள் வேலைவரை உள்ள எல்லாவற்றையும் கூறிக்கொண்டிருந்தார்கள். நான், "ஒரு பத்திரிகை ஆசிரியனாக இருக்க விரும்புகின்றேன்" என்று பதிலளித்தேன். இக்கேள்வியைக் கேட்டவர் திரு கே. ஏ. அருளையா. இப்பொழுது கல்முனை பாத்திமா கல்லூரியில் ஆசிரியராயிருக்கின்றார்.

என் வாழ்க்கையின் லட்சியம் எனது பத்தொன்பதாவது வயதிலேயே நிறைவேறிற்று. ஆனால் இன்று...இந்த எண்ணங்களுக்கிடையில் மீண்டும் கண்ணயர்ந்தேன்.

ஃ ஃ ஃ

## ஆச்சரியம்

கண்களை விழித்துப் பார்க்கும்போது நான் காண்பது மாயா ஜாலமோ-மந்திர ஜாலமோபோலிருந்தது. வேறொன்றுமில்லை. இரவு பூராவும் என்மீது கவனமாகவிருந்த பொலீஸ்காரர்களை அங்கு காணவே இல்லை. சொல்லிக்கொள்ளாமல் போய்விட்டார்கள். எமக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்று எண்ணுகிறீர்கள். பதிலுக்கு வேறு நான்கு பொலீஸ்காரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் காலை வணக்கம் கூறினார்கள். ஆச்சரியத்தோடு அவர்கள் ஒவ்வொருவரும் எம்மை பார்த்தார்கள்.

## இல்லை....இல்லை!

நான் எழுந்து முகம் கழுவினேன். பல் துலக்கிக்கொள்ள ஒன்றுமே இல்லை. வெறும் தண்ணீரினால் பல்லைச் சுத்தம் செய்துகொண்டு எமக்கு வைத்திருந்த காலை உணவை சாப்பிட்டேன். அதிகாலையில் உலகச் செய்திகளைப் படித்துப் பழக்கப்பட்ட மனம் பத்திரிகைகளை நாடியது. படிக்கப் பத்திரிகை இருந்தால்தானே?

## மனவேதனை

தலை வாரிக்கொள்ள சீப்பு கூட இல்லை. உடுத்த வேஷ்டியை மாற்றிக் கட்ட மறு வேஷ்டி இல்லை. எங்களைச் சேர்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகளும் இப்படித்தான் வைக்கப்பட்டிருப்பார்களென்று நினைத்தபோது மனதில் பெரும் பங்கைப் பெற்றவர் திரு வி. வன்னியசிங்கமே. இயற்கையிலே அவர் ஒரு தாவரபட்சணி. வேறொன்றுமில்லை, அதாவது அவர் மரக்கறி உணவாளர். குளிப்பதற்கு அவருக்கு வெந்நீர் வேண்டும். இப்படி அவருடைய தேவைகள் எங்கள் தேவைகளுக்கு பெரும்பாலும் மாறுபட்டவையாயிருக்கும். அவர் பாடு எப்படியோ என்று எண்ணியபோது மனதுக்கு வேதனையாக இருந்தது.

மறுபடியும் அறைக்கு வெளியில் பல 'பூட்ஸ் கால்'களின் நடமாட்டம் கேட்டது. வர வர அந்தச் சப்தம் பலமாகக் கேட்டது. என் அறைக் கதவில் தட்டு விழுந்தது எழுந்து கதவைத் திறந்தபோது பொலீஸ்காரர்கள் தியை மிதித்தவர்கள்போல் துடித்து 'சலியூட்'பண்ணி நின்றார்கள். பல பொலீஸ் மேலதிகாரிகள் என் அறைக்குள் ஏககாலத்தில் நுழைந்தார்கள்.

(தொடரும்)

---


# 'புரூக்' மோட்டார்கள்




பிரசித்திபெற்ற 'புரூக்' இலக்றிக் மோட்டர்கள் 230-400/440 வோல்ட்களில் தேவையான குதிரை வேகங்களில் கிடைக்கும்.

தேவைக்கு எழுத வேண்டுகிறோம்.

**கே. என். அப்துல்காதர்**

**ராவுத்தர் அன் கம்பனி லிமிடெட்,**

312, ஸ்கின்னேர்ஸ் றேட் தெற்கு.

**கொழும்பு-10.**

டெலிபோன் : 2956. தந்தி : 'MEDAL'


---

# 'வள்ளுவர் புரட்சிப் புலவர்' என்ற இலக்கியக் கட்டுரை

# 'பரத்தையர்' பற்றிய குறிப்பு-சர்ச்சைக்கு இடமாகி விட்டது

## வாசகர் எழுப்பும் வினா

"யார் புரட்சிக் கவிஞர்? பாரதி மட்டுமா...?" என்ற வினாவை எழுப்பி, "வள்ளுவரே மாபெரும் புரட்சிப் புலவர்" என்று முடிவு கட்டும் கட்டுரையை 22-2-59 சுதந்திரனில் படித்தேன். கருத்தில் ஓர் ஐயப்பாடு.

வள்ளுவர் கால இலக்கியங்களோடு, அன்னாரின் "திருக்குறள்" கருத்துக்களை நோக்குங்கால், வள்ளுவரும் ஒரு புரட்சிக்காரரே என்பது தெளிவாகும். இது என்றோ ஆய்ந்து கண்ட முடிவு. எனினும் அதை அக் கட்டுரையாசிரியர், இன்றோர் புதிய கோணத்தில் நின்றாய்ந்துள்ளமை எல்லோராலும் போற்றுதற் குரியதே.

கட்டுரையில், "பரத்தையர் சூழ் நிலையால் பாண்டியன் செங்கோல் வளைந்தது என்பதனை இளங்கோவடிகள் குறிப்பாக கூறுகின்றாரல்லவா" என்று ஆசிரியர் திரு ராஜன் சுவாமிநாதன் எம். ஏ. எழுதியுள்ளார். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை நன்கு ஆய்ந்து கற்றோர் எவரும் (ஆசிரியரின்) மேற்குறித்த உரைகளைப் பார்த்துச் சற்றுத் திடுக்கிடாமல் இருக்க இயலாது.

"பரத்தையர்" என்று சிலம்பில் வருகின்ற எந்த மகளிரைக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்? ஏன் குறிப்பிட்டுள்ளார்? இவை பற்றித்தான் மயக்கம்

பாண்டியனின் செங்கோல் வளைந்தமைக்கு எந்தப் "பரத்தையர்" (?) ஏதுவாக இருந்தனர்? பாண்டிய மன்னனின் அவையில் நடனமாடிய—நல்லிசைப் பண் முழக்கியகலைத்திறத்தாலும்,


(9-ம் பக்கம் பார்க்க)

---


சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு

# நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.



ஸ்டாக்கிஸ்ட்ஸ்:-

**எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,**

70, பாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம்--கண்டேன் (8)

சுவாமி சச்சிதானந்தா



மிலம் திபேத் எல்லை வழியின் இறுதிக் கிராமம். கடல் மட்டத்திலிருந்து சற்றேறக்குறைய 12,500 அடி உயரம் உடையது. சுமார் 350 வீடுகள் இருக்கின்றன. பனிக் காலத்தில் கிராமம் முழுவதும் பனிக்குப் போர்வையோ, பாற் கடலோ, என ஐயுறும் வண்ணம் வெள்ளை வெளேர் எனக் காட்சியளிக்கின்றது. அக் காலத்தில் பசும் புல்லைக் காண்பது இயலாது. மக்களேயன்றி மாக்களும் வசிக்க முடியாத கடுங்குளிர். வேனிற் காலம் வந்ததும் (மிலத்திலிருந்து) நாற்பது ஐம்பது மைல்களுக்குக் கீழேயுள்ள ஊர்களில் தங்கியிருந்த ஊர் வாசிகள், மேலே வந்து குடியேற ஆரம்பிக்கின்றனர். அப்போதுதான் தபாற்கந்தோர், பாடசாலை, நீதி மன்றம் அனைத்தும் கிராமத்தில் அமைக்கப்பெறுகின்றன. எல்லாம் தற்காலிக வாழ்க்கையே, மீண்டும் பனி வந்தால் தத்தம் பொருள்களோடு கீழேயுள்ள ஊர்களுக்கு விரைந்து செல்கின்றனர்.

## காலத்துக்குகாலம் இடமாற்றம்

சிற்சில சமயம் அவ்விடத்தையும், பனிப் படலம் மூடிக்கொள்கின்றது; அப்போது அவ்விடத்திலிருந்து இன்னும் இருபது முப்பது மைல் கீழே சென்று குடித்தனம் செய்கின்றனர். பரிதியின் ஆட்சிக் காலத்தில் பர்வதத்தின் உச்சியை அடைவதும் பனிக் காலத்தில் மலைச்சாரலின் கீழே வருவதும் மிலம் வாசிகளின் வாழ்க்கையில் வருடந்தோறும் நடைபெறுகின்றன. காலத்திற்குக்காலம், இடத்திற்கு இடம் மாறுகின்ற இக்கிராம மக்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு மூன்று ஊர்களில் வீடுகள் இருக்கின்றன. மிலத்தைச் சுற்றிலும் மிக இனிய காட்சிகள் கண்ணுக்கும்கருத்துக்கும் பெருவிருந்து.

## விறகு கிடையாது

அக் கிராமத்து மக்கள் பெரும்பாலும் வியாபாரிகளே. பயிர்த் தொழில் மிக மிகக் குறைவு. எங்கேயாவது ஒரு சிலர் சிறு நிலத்திற் பயிர் செய்வர். வேறு எத் தொழிலையும் காண முடியாது. வெயிற் காலத்தில் ஆண்களும், பெண்களும் மிலத்திற் குடியேறுவரெனினும் குறிப்பிட்ட காலம் முழுவதும் தங்கியிருப்பவர்கள் பெண்களே. ஆண்கள் வியாபாரத்திற்காக அடிக்கடி திபேத்திய பகுதிகளுக்கு போய் வருகின்றனர். நாம் மிலத்தை அடைந்த முதல் நாள் திவான்சிங் சமைப்பதற்கு விறகு தேடிப் பார்த்தான். பெரு மரக் காடுகள் அற்ற, வெளி நிறைந்த கிராமத்தில், விறகைக் காண்பது முயற் கொம்பாயிற்று. பால், நெய் ஆகிய பொருட்களும் கிடைப்பது மிக அருமை.

## மண்ணெண்ணெய் விலை

நெடுந் தூரத்தில் உள்ள கௌரி கங்கையிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கே கண்ணீர் விட வேண்டியுள்ளது. வேறு பண்டங்களுக்கும் விலை அதிகம். கீழே பட்டணத்திலிருந்து பொருட்களை மிகச் சிரமப்பட்டு கஷ்டமான மலைப் பாதை வழியே மேலே கொண்டு செல்வதால், பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கின்றது. பட்டினத்தில் ஒரு டின் மண்



தண்ணீர் எடுக்கக் கண்ணீர் விடவேண்டிய நிலை இருந்தும் இந்தச்'சின்னன் சிறிசுக'ளின் 'குஷி'யைப் பாருங்களேன். தலையிலிருந்து முதுகுப் புறமாகத் தொங்க விடப்பட்ட பாத்திரத்தோடு தண்ணீர் எடுக்கச் செல்கிறார்கள்.

ணெண்ணெயின் விலை மூன்று அல்லது நாலு ரூபாய் என்றால் அதே எண்ணெய் மிலம் கிராமத்தில் இருபத்தைந்து அல்லது முப்பது ரூபாயாக விற்கப்படுகின்றது.

## இறைவன் திருவருட் செயல்


அங்குள்ள மக்கள் அன்புள்ளம் படைத்தவர்கள். மிகவும் நல்லவர்கள். நாம் அங்குள்ள பாடசாலையொன்றில் தங்கினோம். அக் கிராமத்து மக்களின் பேரன்பைப் பெறுவதற்குப் போலும் இயற்கை அன்னை அங்கு நம்மைத் தடுத்து நிறுத்தினள். மிலத்திலிருந்து மேலே செல்லப் பாதை திறக்கப்படவில்லை. வழியைமறித்துப் பனிப் படலம் முற்றுகையிட்டது. அதனால், பதினைந்து நாட்கள் மிலம் பாடசாலையில் தங்கவேண்டியதாயிற்று.

எம்மை வரவேற்று உபசரிக்க ஆயத்தம் செய்தது போல அந் நாட்களில் பாடசாலையும் நடைபெற வில்லை. நாம் மிலத்தை விட்டுப் புறப்படும்போதுதான் பாடசாலையும் ஆரம்பமானது. அனைத்தும் இறைவன் திருவருட் செயல்களே. பாடசாலைக் கட்டடத்தில் வழமை போல் பாலர்கள் பாடம் படிக்க வில்லை. ஆனால் நாங்கள் தங்கிய நாட்களில் அக் கிராமத்துப் பாலரெல்லாம் அங்கே கூடி ஆனந்தமாகப் பாடி ஆடி மகிழ்ந்தனர். அவர்களின் மழலை மொழி கேட்டோரைப் புதியதோர் உலகிற்கு அழைத்துச் சென்றது என்பது மிகையாகாது.

## கிறிஸ்துவ சமயப் பணி

1937-ல் யூ. எஸ். பாடக் என்ற கிறிஸ்துவப் பாதிரியாரால் கட்டப்பட்ட அப் பாடசாலை கிறிஸ்து மதப் பெரியோர்களின் சமயப் பணியைத் தெள்ளிதில் எடுத்து விளக்குகின்றது. அத்தனை மைல் உயரத்தில், மக்கள் சஞ்சாரம் மிகக் குறைவான சூழ் நிலையில், பாடசாலையை ஆரம்பித்துத் தம் மதத்தைப் பரப்ப பிரயத்தனம் செய்தார் பாதிரியார். ஆனால் இந்து சமயத்திலே ஊறித் திளைத்த ஊர்வாசிகளை மதம் மாற்ற முடியவில்லை. அதனால் தனது பணி நிறைவுறாததைக் கண்ட பாதிரியார் திரும்பிச்சென்று விட்டார். எனினும் பாலர் படிக்கப் பாடசாலையை அமைத்துச் சென்ற பாதிரியாரைக் கிராம வாசிகள் என்றும் மறப்பதற்கில்லை.

நாங்கள்மிலம் கிராமத்தை நெருங்கும்போது கண்ட கூடாரக் கூட்டம் அங்கு எல்லைப் பாதுகாவலிறதாக தங்கியிருக்கும் இந்திய போலீஸ் படையென அறிந்தோம். நாங்கள் மிலத்தில் தங்கியிருந்தவரை, அவர்கள் அனைவரும்—குறிப்பாக அவர்கள் தலைவர் திரு ஜோஷியும் எம்முடன் நன்கு பழகி நல்ல துணையாக இருந்தனர்.



சாண்டில்ய மகாமுனிவர் தங்கித் தவம் புரிந்த பகுதியில் உள்ள சாண்டில்ய குளத்தில் ஆனந்தமான ஸ்நானம்.

## மூச்சுத் திணறல்

ஜூன் 22-ல் மிலம் உறை பனி மலையை (கிளேஸியஸ்) காணப் புறப்பட்டோம். இரு நாட்களுக்கெனத் தனியாகக் குதிரைகளும், கூலிகளும் அமைத்துக் கொண்டோம். மிலம் கிராமத்தின் அண்மையில் இருந்த மிலம் கிளேஸியர் பிரசித்து பெற்று விளங்கியது. ஆரம்பத்தில் ஒரு மைல் தூரம் ஓரளவு சாதாரண ஏற்றமாக அமைந்திருக்கின்றது. அப்பால் இரண்டொரு மைல்கள் கடுமையான ஏற்றம்; வழியெல்லாம் உறை பனியே. அச் சூழ்நிலையில் வாயு பகவானின் ஆட்சி குறைவு. அதனால் மேலே நடந்து சென்ற எமக்குப் போதிய அளவு பிராண வாயு கிடைக்காமற் போகச் சுவாசக் கஷ்டம் ஏற்பட்டது. மேலே ஒவ்வொரு அடிக்கும் நின்று இளைப்பாற வேண்டியதாயிற்று. சில சமயம் சுவாசப்பை தனது வேலையை நிறுத்தி விடுமோ என்று கூடத் தோன்றும். அடிக்கொருதரம் ஆறுதல் எடுத்து, நிதானமாக மேலே செல்ல வேண்டியிருந்ததால் காலை புறப்பட்டவர்கள், நாலு மைல் நடப்பதற்குள் பகல் பன்னிரண்டு மணி ஆகி விட்டது. கஷ்டமான பாதையில் நீண்டநேரம் மிகக் களைப்புடன் நடந்த முதல் இடம் இதுவே.

## சாண்டில்ய குளம்

சுமார் 13,000 அடி உயரத்தை அடைந்துவிட்டோம். இங்கே சாண்டில்ய குளத்தின் அண்மையில் கூடாரத்தை அமைத்துக் கொண்டோம். நடந்து சென்ற சிரமம் எந்த வழியால் பறந்து சென்றதோ தெரியவில்லை. சாண்டில்ய மகா முனிவர் தங்கித் தவம் புரிந்த பகுதி அல்லவா! தெய்வீக அலை எமது உள்ளத்தை தன் வயப்படுத்தியது. ஆனந்தமாக குளத்தில் ஸ்நானம் செய்து உணவை முடித்தோம். பிற்பகல் முழுவதும் அச்சூழ்நிலையில் உள்ள அரிய காட்சிகளைக் காண்பதிலும் அச் சம்பாஷணையிலும் காலம் சென்றது. இரவு சிற்றுண்டி அருந்திவிட்டு எல்லோரும் உறங்கச் சென்றோம்.

## தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுதல்

லசி நிமிஷங்கள் தான் படுக்கையில் இருந்திருப்பேன். ஏதோ ஒருவித சக்தி உள் நின்று தூண்ட, சொல்ல முடியாத இன்பம் அகத்தும், புறத்தும் நிறைவதுபோன்றஉணர்ச்சிஉந்த, கூடாரத்துள் இருப்பதற்கு மனம் இடந்தரவில்லை. கம்பளியை எடுத்துப் போர்த்திக் கொண்டு குளக்கரையை அடைந்தேன். பத்மாசனத்தில் அமர்ந்தேன். ஆகா! என்ன அமைதி! எத்தனை சாந்தி! எவ்வளவு இன்பம்! தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் பேரின்பத்தை எம் பெருமான் தந்தார். அந்த இன்பத்தில் என்னை மறந்தேன்.

இரவு கழிந்து பொழுது புலர்ந்ததும் தெரியவில்லை, பகலவன் கதிர்கள் எதிரிலுள்ள பனிச் சிகரங்களில் பட்டுத் திரும்பிப் பொற்கிரணக் கற்றைகளாக வந்து கண்களை வருடிக் கூசச் செய்தன. உள்ளொளிமெதுவாக உள்ளத்தில் ஒடுங்கக் கண்கள் வெளியொளியைக் கண்டன, உள்ளொளியின் இன்பத்தின் வயப்பட்ட மனம், மீண்டும் கண்களை மூடச் செய்தது. இவ்வாறு நெடுநேரம் உள்ளொளிக்கும், வெளியொளிக்கும் உறவு நடந்தது. இந்நிலையில் உன்நாதமாகிய ஓங்காரத்தில் லயித்திருந்த காதுகள் வெளியே ஆட்களும் குதிரைகளும் செய்த அரவத்தைக் கேட்டன. மெல்ல மெல்ல மனம் உலக நினைவில் வந்தது. ஆயினும் இரவெல்லாம் பெற்ற இன்பத்தை கணமும் மறப்பதற்கில்லை.


## சுவாத்தியம்

ஜூன் 23 காலை, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுச் சூரிய குண்டம் என்ற குளத்தை நோக்கி மேலே சென்றோம். குதிரைகளும், கூடாரங்களும் சாண்டில்ய குளக்கரையிலேயே இருந்தன. வழிநெடுக வெயிலும், குளிரும், மழையும், பனியும் மாறி மாறித் தாக்கின. வாழ்க்கையில் இன்பமும், துன்பமும் மாறி, மாறி வருவதை சுவாத்திய நிலை வற்புறுத்திக் காட்டியது. நடைமுழுவதும் உறைபனியின் மேலேயே. உள்ளம் சளைக்கவில்லையாயினும், உடல் களைத்ததால் மேலே செல்ல முடியாமற்போய் விட்டது. பனிமலையின் மேலே குளமிருக்கும் இடத்தையடைய இன்னும் சிறிது தூரந்தான் இருக்கின்றது.

## கௌரி கங்கையின் உற்பத்தி

இடையிலேபலஇடங்களில் உறைபனி பெரும் பாளங்களாக வெடித்திருந்தது. பல அடி ஆழமான வெடிப்புக்குள் நீரோடும் சத்தம் சலசலக்கின்றது. ஆழமான

(15-ம் பக்கம் பார்க்க)



சமயப் பணி செய்ய, 1937-ல் யூ. எஸ். பாடக் என்ற கிறிஸ்துவப் பாதிரியாரால் மிலம் என்ற இடத்தில் கட்டப்பட்ட பள்ளிக் கூடம். மதப் பணி அங்கு வேர் கொள்ளவில்லையாயினும் பள்ளி இன்றும் இருந்து பிள்ளைகளுக்கு கல்வி புகட்டும் நல்ல பணி மனையாக விளங்கி வருகிறது. நமக்கு தங்குமிடமாக அமைந்ததும் இப் பள்ளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 மார்ச் மாதம் 8-ந் திகதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# 'விடிந்தால்போச்சு'

"குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு" என்பது ஒரு நாடோடிப் பழமொழி. நமது கனந்தங்கிய கல்வி அமைச்சரின் பேச்சுக்களையும் செயல்களையும் பார்க்கும்போது இந்தப் பழமொழிதான் ஞாபகத்துக்கு வருகிறது.

இப்படி நாம் கூறுவதால் 'காலி'க்குப் பிரதிநிதியான நமது கனந்தங்கிய கல்வி அமைச்சர் திரு விஜயானந்த தஹநாயகா அவர்களை நாம் குடிகாரர் என்று சொல்லிவிட்டதாக யாரும் தவறாக எண்ணிக்கொள்ளக்கூடாது. அந்தக் கெட்ட பழக்கங்கள் எல்லாம் அவரிடம் கிடையாது! நாம் கூறுவதெல்லாம் அரசியல் என்ற பழைய மதுவை அவர் கடந்த இருபது முப்பது வருடங்களாகத் தொடர்ந்து 'காலி' செய்து வந்திருப்பதனால் அவருக்கு அதிகார வெறி தலைக்கேறிவிட்டதென்பதுதான். அதனால் 'அவர் பேச்சு விடிந்தால் போச்சு' என்றாகி வருகிறது.

இந்தப் போதை நிலையின் காரணமாக அவர் மேடை நாடகத்தில் வரும் முட்டாள் ராஜாவைப்போல காலையொரு கட்டளையும், மாலையொரு மாற்றுக் கட்டளையும், மறுநாள் விடிந்ததும் வேறு கட்டளையுமாக அமர்க்களப்படுத்துகிறார்.

நாட்டில், கல்வித்துறையில், நேர்மையான, நீதியான, ஸ்திரமான நிர்வாகம் நடைபெறுவதற்கு திரு தஹநாயகாவின் 'தள்ளாடு நிலை' எவ்வளவு பாதகமானது, ஆபத்தானது என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஆசிரியர்கள்மீது முகாமைக்காரர்கள் நீண்ட நெடுங்காலமாக 'குதிரைவிட்டு' வந்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே. திரு தஹநாயகா கல்வி அமைச்சர் ஆனதும் ஆசிரியர்களுக்கு ஓரளவு விமோசனம் ஏற்பட்டது என்று யாவரும் நம்பினர். அதாவது முகாமைக்காரர்கள் ஆசிரியர்கள்மீது அநீதியாக முட்டிக்கொண்டு அவர்களைக் கசக்கிப் பிழிய இடங்கொடாதபடி முகாமைக்காரர்களின் அதிகாரத்தைத் திரு தஹநாயகா மட்டந்தட்டி வந்தார். இதனால் ஆசிரியர்கள் ஆறுதலும் மகிழ்ச்சியுமடைந்திருந்தார்கள்.

ஆனால் கடந்த வாரம் திரு தஹநாயகா பாடசாலை முகாமைக்காரர்களுக்கு அனுப்பியுள்ள ஒரு திடீர் சுற்றறிக்கை அவர்களுக்கு மீண்டும் சர்வாதிகாரம் வழங்குவதாக இருக்கிறது. முகாமைக்காரர்கள் விரும்பினால் அவர்களுடைய இஷ்டத்துக்கு ஏற்ற பிரகாரம் கேள்வி முறையின்றி ஆசிரியர்கள்மீது எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொண்டுவிட்டு கல்விக் காரியாலயத்துக்கு அறிவித்துவிட்டால் மட்டும் போதும் என்று பிரஸ்தாப சுற்றறிக்கை முகாமைக்காரர்களுக்கு விசேஷாதிகாரம் வழங்கியிருக்கிறது.

இது ஆசிரியர் சமூகத்துக்கு மட்டுமல்ல, பாடசாலை நிர்வாகம் சுமுகமாக நடைபெறுவதற்கும் பாதகமான சுற்றறிக்கையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

திரு தஹநாயகாவின் கல்வி இலாகா நிர்வாகம் எந்த ஒரு கொள்கையையும் அஸ்திவாரமாகக்கொண்டு இயங்காமல் அவருடைய தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கிணங்க க்ஷணம் பித்தம், க்ஷணம் வாதம் என்றபடி நடைபெற்று வருவதால் அவர் விரைவில் இந்த சுற்றறிக்கையை வாபஸ் பெற்று மீண்டும் முகாமைக்காரர்களின் அதிகாரங்களைப் பிடுங்கிக்கொள்வார் என்று சில ஆசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

அதாவது அடுத்த தேர்தலின்போது முகாமைக்காரர்களுடைய ஆதரவல்ல, சுயபாஷை ஆசிரியர்களின் ஆதரவுதான் அரசாங்கத்துக்குத் தேவை; ஆகவே சுற்றறிக்கை வாபஸாகித்தான் ஆக வேண்டி வரும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இக்கூற்றை நாமும் முற்றாக ஆதரித்தபோதிலும், சுற்றறிக்கை வாபஸாவதற்கு முன்பு, உள்ள இடைக்காலத்தில் வேண்டாத ஒருசில ஆசிரியர்கள்மீது முகாமைக்காரர்கள் பழிதீர்த்துக்கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. இந்த இடைக்காலத்துக்குள்ளேயே எத்தனையோ திருவிளையாடல்களும், தண்டனைகளும் நடைபெற்று முடிந்துவிடலாம்.

இந்த அபாய நிலைமை ஆசிரியர்களின் பிரதிநிதி ஸ்தாபனங்கள் கல்வி அமைச்சருக்குச் சுட்டிக்காட்டி, உரிய பாதுகாப்புத் தேடிக்கொண்டாலொழிய முகாமைக்காரர்—ஆசிரியர் பிணக்குகள் நாட்டின் பெரும்பான்மைப் பாடசாலைகளில் ஏற்பட்டு அதனால் நாட்டின் கல்வி சீர்கெடுவதோடு, மாணவர்களின் வளர்ச்சியும் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டுவது நமது கடமையாகும்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நூறு தமிழரசுக் கட்சிக் கிளைகள்

## கிராமப் பொருளாதாரம்

### குடிசைக் கைத்தொழில், விவசாயம் வளர்ப்பதற்கான ஏற்பாடுகள்

மட்டக்களப்பில் உள்ள சுமார் நூறு பெருங் கிராமங்களிலும் நூறு தமிழரசுக் கட்சிக் கிளைகளை அமைத்தும் இப்போது இருக்கும் அறுபது கிளைகளையும் புது நிர்மாணம் செய்தும், தெற்கே பொத்துவில் இருந்து வடக்கே கதிரவெளிவரைக்கும் பரந்து கிடக்கும் முழுப் பிரதேசத்துக்கும் கட்டுக்கோப்பான அரசியல், சமூக, பொருளாதாரப் பணி செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கிராமப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து, விவசாயம், குடிசைக் கைத்தொழில் போன்றவற்றை ஊக்குவிப்பது கிளைகளின் தலையாய நோக்கமாக இருக்கும் என்று தெரிய வருகிறது.

#### புது இடத்தில் தலைமைக் கிளை

கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டு இயங்க இருக்கும் கட்சிக் கிளைகளுக்கு எல்லாம் இணைப்பு நிறுவனமாகவும் தலைமைக் கழகமாகவும் மட்டக்களப்பு நகரில் உள்ள தமிழரசுக் கிளைக் காரியாலயம் விளங்கும். மேற்படி காரியாலயம் இப்போது உள்ள இடத்தில் அல்லாமல் விஸ்திரணமான புதிய தோர் இடத்தில் இருந்து செயல்படும் என்று தெரிகிறது.

#### சொந்தக் கட்டடம்

புதிய இடம் முதலில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட போதிலும் காலக்கிரமத்தில் கட்சியின் இந்தக் கிழக்கிலங்கை தலைமைக் கழகத்துக்கு சொந்தமான ஒரு கட்டடத்தை எழுப்ப உத்தேசித்திருப்பதாக மட்டக்களப்பு பிரதிநிதி திரு செ. இராசதுரை சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

இப்போது மட்டக்களப்புப் பகுதிகளில் உள்ள 60 கட்சிக் கிளைகளைப் புதுப்பித்தும் இல்லாத இடங்களில் புதிதாக அமைத்தும் அவற்றின் மூலம் ஆற்றப்போகும் திட்டவட்டமான பணிகள் பற்றியும் திரு இராசதுரை சொன்னர்.

#### தொழில் துறை உதவி

"கிராமங்களில் உள்ள கட்சிக் கிளைகள் தத்தம் பகுதிகளில் உள்ளவர்களின் தொழில் வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தும். மீன் பிடித்தல், விவசாயம் செய்தல், பட்டாண்டம் தயாரித்தல், பாய் இழைத்தல் முதலான தொழில்களில் ஈடுபட்டுள்ள கிராம வாசிகளுக்கு வேண்டிய உதவிகளை தலைமைக் கழகத்தின் அனுசரணையோடு கட்சிக் கிளைகள் நல்கும்.

#### பொருள்கள் கொள்வனவு

"இது தவிர அந்தந்தக் கிராமங்களில் உபரியாகக் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கட்சிக் கிளைகள் கிராம வாசிகளிடமிருந்து நியாயமான விலைக்கு கொள்வனவு செய்து மட்டக்களப்பு நகரில் உள்ள அவற்றின் தலைமைக் கழகத்துக்கு சேர்ப்பிக்கும். உதாரணமாக பால், தயிர், நெய், தேன், மீன், சோளம், நெல், முந்திரிக் கொட்டை, பாய்கள் போன்ற பொருட்கள் பல கிராமங்களில் அதிகம் இருந்தும் சரியான விற்பனை வசதி இல்லாததால் உற்பத்தியாளர்களாகிய கிராம வாசிகள் உழைத்தும் பயன் காண முடியாத நிலையில் இருக்கிறார்கள். [illegible]

பொருளாதார விழுக்காட்டை நிவர்த்திக்கக் கிளைகள் முனையும்" இப்படி திரு. இராசதுரை கூறினர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள தலைமைக் கழகம் எந்த வகையில் பணி செய்ய இருக்கிறது என்று கேட்டபோது அவர் பின் வருமாறு தெரிவித்தார்:-

#### விற்பனை வசதி

"கிராமங்களிலிருந்து கிடைக்கும் பொருள்களை வேண்டிய வெளி இடங்களுக்கு அனுப்பி விற்பனை செய்யும்பொறுப்பு தலைமைக் கழகத்தினுடையது. நகரில் வைத்து விற்பனை செய்வதற்கும் கழகம் ஏற்பாடு செய்யும்.

#### வாசிகசாலை

"இது தவிர, தலைமைக் கழகம் ஒரு சிறந்த வாசிகசாலையாகவும் அரசியல் பள்ளிக்கூடமாகவும் திகழும். குறிப்பிட்ட தினங்களில் அரசியல் வகுப்புகள் நடத்தப்படும். தமிழ் பேசும் மக்கள் இன்றைய சூழ் நிலையில் அறிய வேண்டிய விஷயங்கள் பலவற்றையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு இப்போ இல்லை. ஏனைய நாடுகளில் சிறுபான்மை இனங்கள் எப்படி வாழ்கின்றன? அவை எப்படி விடுதலை பெற்றன? அரசியல் போராட்டங்களில் மக்கள் பங்கு என்ன?- இப்படியான விஷயங்களைத் தெரிந்து கொள்ள உதவியாக, வேண்டிய புத்தகங்கள் சஞ்சிகைகள் வைக்கப்படும்.

#### காட்சிப் பொருள்கள் கூட்ட ஒழுங்குகள்

"தமிழருடைய சிறப்பையும் சரித்திரப் பெருமையையும் புலப்படுத்தும் காட்சிப் பொருட்களும் நூல் செல்வங்களும் கூட நகரின் தலை

(9-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டு சகோதரியின்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காலமும் தவறாது பூஜை செய்து வந்த குருக்களுக்கும் வந்துவிட்டது. அணுவணுவாக அவர் உயிர் விடும்படி வதை செய்தார்கள் அந்த வெறியர்கள்.

## ரூபா 10,000 கொள்ளை

கொலைக்கொன்றவர்கள் அத்தோடு விட்டுவிடவில்லை. அகப்பட்டதையெல்லாம் கொள்ளையடிக்கவும் செய்தார்கள். பொருள், பண்டம் அனைத்தும் சூறையாடப்பட்டன. கட்டிக்காத்து வைத்த ரொக்கம் ரூபா 10,000 -அதையும் கொடியவர் தமதாக்கிக்கொண்டார்கள்.

அந்தப் பத்தாயிரம் ரூபா இருந்தாலாவது உயிர் நீத்த குருக்களின் குடும்பம் ஒருவாறு தள்ளாடியேனும் தலை நிமிர முடியும். அதுவும் இல்லை இப்போது. அரசாங்க உதவியும் இல்லை. இதுதான் அந்தத் துர்ப்பாக்கியக் குடும்பத்தின் இன்றைய பரிதாபகரமான நிலைமை.

நம்மவருள் மனிதாபிமானம் உள்ளவர்கள், பிறர் துன்பம் கண்டு துடித்து அவர்களுக்கு முடிந்த உதவி செய்ய முன்வருபவர்கள் அடியோடு இல்லை என்று சொல்வதற்கில்லை.

## மலைநாட்டுச் சகோதரி

கண்டி பேராதனை வீதி 392-ம் இலக்க இல்லத்தில் உள்ள மலைநாட்டுச்சகோதரி சி. இராசம்மா சுதந்திரன் நேயர்களுக்குப் புதியவரல்லர். முன்னர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமக்குத் தெரிந்தவர்களிடமிருந்து நிதி திரட்டி நல்ல காரியங்களுக்கு வழங்கியிருக்கிறார்.

இப்பொழுதும் திரு சுந்தரராஜக் குருக்களின் குடும்பத்துக்குச் சேர்ப்பிக்க ரூபா 37-00 நிதி திரட்டி அனுப்பியுள்ளார். சுதந்திரனுக்கு அவர் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

ஆசிரியர்: சுதந்திரன்,

"ஐயா, தங்கள் பத்திரிகை வாயிலாகத் தமிழ் பேசும் மக்களுக்கு எத்தனையோ தொண்டுகள் செய்திருக்கிறீர்கள். அதே போல வகுப்புக் கலவரத்தின்போது பாணந்துறையில் காடையர் கையில் சிக்கி உயிர் நீர்த்த சைவக் குருக்களின் குடும்பத்தாரின் துயர் துடைக்கும் வகையில் அவர்களுக்கும் தமிழ் பெரு மக்கள் நிதி உதவி அளிக்கும்படி தாங்கள் செய்வீர்களென நம்புகிறோம்.

"நிர்க்கதியாயுள்ள குருக்கள் குடும்பத்தாருக்கு நம்மால் இயன்ற நிதி உதவி அளிக்க விரும்பினோம். நண்பர்கள், தெரிந்தவர்கள் இல்லையென்னாது முகம் கோணாது மனமுவந்து தம்மாலானதைத் தந்தார்கள். அவர்கள் பெயர்களையும் தந்துதவிய தொகையையும் அடியில் குறிப்பிட்டிருக்கிறோம். மொத்தம் ரூபா 37-00 சேர்ந்தது அதை இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். தயவுசெய்து சிரமம் பாராது குருக்கள் குடும்பத்தாரிடம் இத்தொகையைச் சேர்ப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இப்படிக்கு

—சகோதரி சி. இராசம்மா"

## நிதி தந்தோர் விவரம்

1. சி. இராசம்மா—5-00 2. மணி 1-00, 3. பி.குணசீலி 5-00, 4. இ. வே. அன்னமலர் 2-00, 5. சி. அன்னம்மா 2-00, 6. சு. பிலோமினு 2-00, 7. மா. செல்லம்மா 2-00, 8. ஆர். ஈ. கந்தையா 1-00, 9. சி. பரமேஸ்வரி 2-00, 10 கே. ஜி. செல்லம்மா 2-00, 11. சி. யே. புஸ்பமலர் 2-00, 12. கே. பரமேஸ்வரி 2-00, 13. சிவபுரத்தராசன் 2-00, 14. பொ. தங்கம்மா 2-00, 15. செ. நல்லம்மா 1-00, 16 ஏ. எஸ். இரத்தினமலர் 2-00, 17. வி. இரத்தினம் 2-00. ஆக மொத்தம் ரூபா 37-00

மலைநாட்டுச் சகோதரியின் இந்த முன் மாதிரியைப் பின்பற்றிப் பலரும் குருக்கள் குடும்பத்திற்கு கைகொடுத்து உதவ விழைவார்கள் என்பதே எமது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமச் சங்க சம்மேளன மாநாட்டில்

## தமிழுக்கு அவமதிப்பு

### பிரதிநிதிகள் புறக்கணிக்கப்பட்டனர்

### செயலாளருக்கு ஆட்சேபனைக் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 5—

கொழும்பில் சமீபத்தில் நடந்த அகில இலங்கை கிராமச் சங்க சம்மேளனத்தின் 32வது வருடாந்த மாநாட்டில் தமிழ்ப் பிரதிநிதிகள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டனர். தமிழ் மொழி அவமதிக்கப்பட்டது. மாநாட்டு நிகழ்ச்சிகளில் தனிச் சிங்களக் கொள்கை தீவிரமாக அமுல் நடத்தப்பட்டது.

மாநாட்டு விவாதங்கள் எதிலும் தமிழ்ப் பிரதிநிதிகள் பங்குபற்ற முடியாதவாறு சிங்கள மொழி ஏகாதிபத்தியம் செலுத்தியது. பிரதமர் தொடக்கம் சகல பேச்சாளர்களும் சிங்களத்தில்தான் பேசினர். அப்பேச்சுகள் சரிவர மொழிபெயர்க்கப்படவில்லை. பிரேரணைகள் பற்றிய விவாதம்கூடச் சிங்களத்தில் நடந்ததால் தமிழ்ப் பிரதிநிதிகள் அவை சம்பந்தமான வாக்கெடுப்பில் கலந்துகொள்ள முடியாது மௌனமாக இருந்தார்கள்.

புது வருட உத்தியோகஸ்தர் தேர்தல் மிக வேடிக்கையாக இருந்தது. ஏற்கனவே சிங்களத்தில் தயாரிக்கப்பட்டிருந்த பெயர்ப் பட்டியலொன்றை ஒருவர் சிங்களத்தில் வாசித்தார். அது அனுவதித்து நிறைவேற்றப்பட்டது. அங்கு நடந்தது புதுவருட நிர்வாகிகள் தேர்தலென்பதைப் பின்னர்தான் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒருவாறு உணர்ந்துகொண்டனர்.

பிரதிநிதிகள் அடையாளக் கார்டுகள் சிங்கள மொழியில் மட்டுமே அச்சிடப்பட்டிருந்ததால் அவற்றை ஏற்க முடியாதென்று தமிழ்ப் பிரதிநிதிகள் மறுத்தனர். அப்போது அவற்றின் மறுபுறத்தில் ஆங்கிலத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்து நிலைமையைச் சமாளித்தனர் அதிகாரிகள்.

இம்மாதிரியான அவமதிப்புகளுக்கிடையில் தமிழ்ப் பிரதிநிதிகள் மேற்கண்டது போன்ற மாநாடுகளில் பங்குபற்றுவதில் பலனெதுவுமே இல்லை என்று சுட்டிக்காட்டி பிரஸ்தாப மாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியாகச் சென்ற புத்தூர் கிராமச் சங்க உறுப்பினர் திரு க. த. கிருஷ்ணராசா, அகில இலங்கை கிராமச் சங்க மகாசபைச் செயலாளருக்கு எழுதிய ஆட்சேபனைக் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

## என். எஸ். கே. மதுரம் நாடகம்

கொழும்பு இந்து மன்றம், ஜிந்துப்பிட்டி குருகுல உயர் நிலைப் பள்ளி ஆகியவற்றின் நிதி உதவிக்காக சனியும் ஞாயிறும் (மார்ச் 7,8-ந் திகதிகளில்) என். எஸ். கே. மதுரம் குழுவினரின் நாடகங்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.

சனிக்கிழமை பிற்பகல் 6மணிக்கு 'மணமகள்' நாடகம் நடைபெறும் என்றும், ஞாயிறு மாலை 6 மணிக்கும் பின்னர் 9 மணிக்கும் 'தளபதி' நாடகம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

## கல்விக் கொள்கை கேலிக்கூத்து ஆகிவிட்டது

இலங்கையில் கல்வி இலாகாவினதும் மந்திரி தஹநாயகாவினதும் கல்விக் கொள்கை கேலிக் கூத்தாகிவிட்டது. சட்டங்கள் பொழுதோடு பிறப்பதும்இரவோடு ரத்தாவதும் ஆக நிலைமை சீரழிந்து போயிற்று என்பதற்கு ஓர் உதாரணம்:

சிறிது காலத்துக்கு முன்னர் ஆசிரியர்களை முகாமைக்காரரின் பிடியிலிருந்து காப்பாற்றுவதான ஒரு சட்டம் பிறப்பிக்கபபட்டது. அதன் மூலம் ஆசிரியர்களைத் தம் மிஷ்டம்போல் நடத்தவோ அன்றி வேலை நீக்கம் செய்யவோ இருந்த எதேச்சாதிகார அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.

இப்போது அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டு புதியதொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிய சட்டம் முகாமைக்காரரிடமிருந்து பறித்த அதிகாரங்களை அவர்களுக்கு மீண்டும் வழங்குகிறது.

## மார்ச் 3 அடையாள..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம், வேலை நிறுத்தத்தன்று மலைநாடு, தமிழ் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களைப் பொறுத்த மட்டில் தனது மானத்தை ஓரளவு காப்பாற்றியது உண்மையே. எனினும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதற்கு திராணியில்லை. அப்படி எடுத்தால் பொது வேலைநிறுத்தம் ஏற்பட்டு அரசாங்கமே அடியோடு கவிழ்ந்துபோக நேரிடலாம் என்பது அரசாங்கத்துக்கு மட்டுமல்ல,பொது மக்களுக்குமே தெரியும்.

இந்த நிலையில் திரு கெனமன் எச்சரிக்கை விடுத்திருப்பது ஏன் என்பதை இலகுவில் புரிந்துகொள்ளலாம். தமது எச்சரிக்கையின் பயனாகத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பின்னர் பெருமை பேச இது வாய்ப்பாகும் அல்லவா?

### மலைநாட்டு மக்களுக்கு......

ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் தமிழ் பேசும் மக்களுக்கு ஒருவகையில் நலன் பயப்பதாய் அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். மலைநாட்டிலும் தமிழ்பேசும் மக்கள் பிரதேசங்களிலும் வேலைநிறுத்தம் மற்றெல்லா இடங்களைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவு பிரமாதமான வெற்றியாக நடைபெற்றது. அவர்கள் சட்டத்தின் உண்மையான நோக்கத்தையும் அதால் தங்களுக்கு நேரக் கூடிய ஆபத்துக்களையும் நன்கு உணர்ந்து கொண்டதையே காட்டுகிறது.

இதுதவிர, தமக்கு எல்லோருக்கும் ஆபத்து என்றதும் எப்படி அவர்கள் ஒருமுகமாக நின்று போராட விழைவார்கள் என்பதையும் நடந்து முடிந்த வேலைநிறுத்தத்தின் வெற்றி அறிவுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம், குறிப்பாக மலைநாட்டில் சவக்களை தட்டச் செய்தது என்றால் தொடர்ந்து சில நாட்கள் வேலைநிறுத்தம் செய்தால்...? ஜனநாயக விரோதச் சட்டத்தை எதிர்த்து ஒருநாள் வேலைநிறுத்தம் செய்து அதன் மூலம் தமது உண்மையான சக்தியையும் பலத்தையும் நன்கு தெரிந்துகொண்ட மலைநாட்டு மக்களுக்கு தமது மனித உரிமைகளுக்காகவும் எந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதில் இனிச் சந்தேகம் இருக்க இடமில்லை.

### அவசரகால நிலைமை '58

அவசர கால நிலைமை '58 மதிப்புரை இவ்வாரம் வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

## மட்டக்களப்பு . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மை நிலையத்தில் இடம் பெறும். இவ்வாறு திரு. இராசதுரை கூறினார்.

மட்டக்களப்பின் திக்கெட்டும் நூறு கட்சிக் கிளைகள் அமைத்து கட்டுக்கோப்பான பணி தொடங்கும் இயக்கத்தின் ஆரம்ப நடவடிக்கையாக மட்டக்களப்பு வட பகுதியில் சமீபத்தில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. திரு. செ. இராசதுரையுடன் எம். மாணிக்கம், பி. மாணிக்கவாசகர், ஏ. சண்முகநாதன் போன்ற கட்சிப் பிரமுகர்களும் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

### கதிரவெளி கிளை

கதிரவெளியில் கட்சிக் கிளை அமைக்கப்பட்டது. பின் வருவோர் உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: சி. கணபதிப் பிள்ளை, துணைத் தலைவர்கள்: க. தாமோதரம்பிள்ளை, நா. வைரமுத்து, செயலாளர்: க. நாகரெத்தினம், துணைச் செயலாளர்: ஆ. வேலாயுதபிள்ளை, பொருள்காவலர்: வ. நல்லதம்பி.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:-சி. சண்முகம், க. கதிராமன், க. இராசன், மு. கந்தையா, வ. வீரபத்திரன், கே. கோணலிங்கம், க. கோபாலன், [illegible] இராசதுரை, சி. கந்த[illegible], வீ. சுப்பிரமணியம், நா. காளிக்குட்டி, வ. ஏரம்பன், மூ. இராசையா, சொ. கந்தையா, சி கந்தையா, க. சாமித் தம்பி, வே. குமாரசாமி.

### வாலிப முன்னணி

கதிரவெளியில் தமிழரசு வாலிப முன்னணி ஒன்றும் அமைக்கப்பட்டது. அதன் உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

போஷகர்கள்: நீ. கணப[illegible] [illegible] சாமி, துணைத்தலைவர்: க. தம்பிராசா, செயலாளர்: வே. சிவலிங்கம், துணைச் செயலாளர்: க. கதிராமத் தம்பி, பொருளாளர்: க. காத்தமுத்து.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:-வீ. முத்தையா, வ. கணபதிப்பிள்ளை, இ. சித்திரவேல், வே. கணேசமூர்த்தி, ப. அகிலேசபிள்ளை, வ. சின்னத் தம்பி, க. சிவசுப்பிரமணியம் ஐயர், வீ. கோணமலை.

### பால்சேனை கிளை

பால் சேனையில் அமைக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக் கிளை உத்தியோகத்தர்கள்:

தலைவர்: சு. கிளமன்ற், உபதலைவர்: க. இராசையா, சி. பத்தக்குட்டி, செயலாளர்: கே. நாகலிங்கம், துணைச் செயலாளர்: கே. சண்முகம், பொருள்காவலர்: க. கந்தையா.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:-க. கதிராமர், க. மூத்தையா, சி. கந்தவனம், க. கந்தையா, சே. குணசேகரம், பொ. இராமன், க. தம்பிப் பிள்ளை, க. சின்னத்தம்பி, சி. வேலன், ப. விசுவலிங்கம், கி. கந்தவனம்.

## திட்டமிடுதல்:

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கிச் செழித்திருக்க முடியாது. ஆகவே மற்ற நாடுகளைப் பொருளாதாரத் துறையில் முன்னேற வைப்பது தன்சொந்த நலத்தையே கவனிப்பதாகும். இந்த உண்மைப் பிரகாரமே பொருளாதார அபிவிருத்தியில் முன்னணியில் நிற்கும் நாடுகள் பின் தங்கி நிற்கும் நாடுகளுக்கு மூலதனத்தை நன்கொடையாக உதவ முன்வருகின்றன.

**உபாத்தியாயர்:**

இத்தகைய பிற நாட்டு உதவியும் மூலதனமும் இன்றி நம் நாட்டுப் பொருளாதாரத்தை அபிவிருத்தி பண்ண முடியாதோ?

**குமரேசு:**

அப்படி முடியாது என்ற [illegible] பான்மை முற்றும் தப்பானது. பிறரை நம்பும் மனப்பான்மை நம்மைப் பீடித்திருக்கும் வரை எவ்வளவு பொருள் வசதி இடைத்தாலும் நாம் முன்னேறமாட்டோம். ஜப்பான் தேசம் பொருளாதாரத் துறையில் வெற்றியீட்டியதற்கு பிறநாடு எது உதவி செய்தது? ருஷ்யா தேசம் பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறியதற்கு மூலதனம் எங்கிருந்து நன்கொடையாக வந்தது?

**உபாத்தியாயர்:**

இந்த விஷயம் மிக நுட்பமாக ஆராயப்பட வேண்டும்.

**குமரேசு:**

ஆம் அதை மற்றமுறை எடுத்துக்கொள்வோம். நான் போய் வருகிறேன்.

**அப்பாக்குட்டி:**

நானும் வாறன் [illegible] பார்.

### வள்ளுவர் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டோர் மயங்கும் கவினும் காவலனைக் கவர்ந்த நாடக மகளிர் 'பரத்தை' யரா? அம் மகளிரை எவ்வாறு "பரத்தையர்" இனத்தோடு பிணைக்க முடியும்?

உண்மையிலேயே, நெடுஞ்செழியன் நீதி வழுவ அந் நாடக மகளிரா போதை அளித்தனர்? கலையில் (கோவலனைப் போல்) தன்னை மறந்தான் பாண்டியன். இதற்கு நாடக மகளிர் யாது செய்வர்? இளங்கோவின் இணையிலாக் காப்பியம் இவர்களைத்தான் (நாடக மகளிர்) "பரத்தையர்" என்று, குறிப்பாகக் கூறுகின்றதா? இல்லையாயின், கண்ணகி, கோப் பெருந்தேவி, மாதவி ஆகிய மூவர் கற்பிலும் [illegible] மேத்த கற்புடைய மாதவி மடக் கொடியோ 'பரத்தை'? "ஆம்" என்றால் கட்டுரையாளர், இளங்கோவடிகளாம் இலங்கு புகழ் கவிஞரின் வாய்மொழிகளோடு விளக்கந் தர வேண்டுகிறோம்.—விரிவான சான்றோடு.

—தமிழ்நேசியன்

சி. சி. சி.

### தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC629

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த மண்

சிறுகதை — எழுதியவர்: சிற்பி

"உங்களைப் போன்ற பைத்தியக்காரரை நான் இதுவரை கண்டதில்லை"

"அடி பைத்தியமே! நானும் அப்படித்தான். பைத்தியக்காரிகளையே நான் பார்க்கவில்லை—உன்னைத் தவிர"

"சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையுடன் விளையாட எனக்கு நேரமில்லை......' பொய்க் கோபத்துடன் அவ்விடத்தை விட்டுச் செல்ல முயன்றாள் சோமாவதி. தாவி நீட்டிய சிவலிங்கத்தின் கரங்களுள் சோமாவின் பின்னல் இரண்டும் சிக்கின. மெல்லிய பூங்கொடியைப் பற்றுவதைப் போன்று, அவளின் பின்னல்களைத் தன் கைவிரல்களிற்கிடையில் சுற்றிக்கொண்டு, "இந்த முழுப் பைத்தியத்தைக் காதலிக்கின்றாயே, இதைவிடப் பைத்தியக்காரச் செயல் ஏதாவது உண்டா?" என்று அழகு காட்டினான். அவனுடைய ஒரு கை அவளுடைய மதிமுகத்தை வருடியது.

சிவலிங்கத்தின் கர ஸ்பரிசம் அவளை ஊமையாக்கியது. பேச்சற்று மூச்சற்றுப் பொற்சிலையாய் நின்றாள். இரண்டு சோடிக் கண்கள் ஒன்றையொன்று கௌவின; கலந்தன; கதைகள் பல பேசின மௌன பாஷையில்!

யாரோ வரும் அரவம் கேட்டது. சிலை உயிர் பெற்றது.

"உங்கள் தொழுகையை முடித்து விட்டு வாருங்கள். சாப்பிடுவதற்கு நேரமாகி விட்டது," என்று சொல்லி சிட்டாய் பறந்தாள் சோமா.

சிந்தைக் கினியவள் சிந்திய வார்த்தைகள் சிவலிங்கத்திற்குப் புதிய வேகத்தைக் கொடுத்தன. இன்ப உணர்ச்சிகளுடன் அடுத்த அறைக்குச் சென்றான், அன்றைய பிரார்த்தனையை முடிப்பதற்காக.

★

இந்த மண்ணில் பிறந்த பெருமை சிவலிங்கத்திற்கு மட்டும் உண்டு! தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்த சிசு முதன் முதலாக மண்ணைத் தான் முத்தமிட்டது. பிரசவ வேதனையுடன் கிடந்து தவித்த அவனுடைய தாய்க்கு, பஞ்சணைமெத்தை, ஏன் கிழிந்த பாய் கூடக் கிடைக்கவில்லை!

தந்தை அவனுக்குத் தெரியாது. குழந்தையை எடுத்துக் கொஞ்ச வேண்டும் என்ற ஆவலுடனிருந்த சுந்தப்பன் அந்த ஆவல் நிறைவேறுமலே இறந்து விட்டான் இரண்டு மாதங்களுக்கு முன்பு. சிவலிங்கம் பிறந்து ஓராண்டு முடிவதற்குள் பெற்ற தாயைப் பூமித்தாய் தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டாள்.

அனாதை ஆச்சிரமத்தில் வளர்ந்தான் அவன். பதினெட்டு ஆண்டுகள் அங்கேயே கழிந்தன. எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவுடன் ஆச்சிரமத்திலிருந்து வெளியேறி 'வேலை தேடும் படலத்'தில் இறங்கினான். அரசாங்கம் அவனை அன்புடன் வரவேற்றுப் பொலநறுவைக்கு அனுப்பியது. குமாஸ்தாவாக.

பொலநறுவையில் அவனுக்குத் தெரிந்தவர்கள் எவருமேயில்லை. சென்ற புதிதில் அலுவலகத்தில்வேலை செய்த ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தான். ஆனால் அவருடைய தயவில் நீண்டநாட்கள் இருப்பதற்குப் பிடிக்கவில்லை. "ஊர்பிடிபட்டபின்" தனியாக எங்காவது அறை கிடைக்குமா என்று விசாரிக்கத் தொடங்கினான். அப்போது எதிர்ப்பட்டவள் தான் சோமாவதி.

கல்லூரி மாணவி அவள். கிழத் தந்தையும் அவளுமே யடங்கிய அந்தச் சிறு குடும்பம் ஒரு பெரிய பங்களாவில் வசித்து வந்தது. அறை விசாரிப்பதற்காகச் சென்ற சிவலிங்கத்தைக் கிழவனும் மகளும் அன்புடன் வரவேற்றனர்.

பங்களா முழுவதையும், சுற்றிப் பார்த்தான் சிவலிங்கம். நல்ல காற்றோட்டமுள்ள அறைகள். எல்லாப் பகுதிகளும் கூட்டிச் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தன. பங்களாவைச் சுற்றிலும் ஒரு தோட்டம். தோட்டத்தின் மத்தியில் ஒரு கிணறு. அவன் மனதைக் கவர்ந்து விட்டது. அந்த இடம்.

"பெரியவரே! வாடகை எவ்வளவானாலும் பரவாயில்லை. எனக்கு இந்த இடம் பிடித்து விட்டது" என்றான் கிழவனிடம். சிவலிங்கத்தின் தோற்றமும், அவன் பேசிய தோரணையும் கிழவரை மயக்கி விட்டன.

"தம்பி! எனக்கு வாடகை பெரிதல்ல. உங்களைப் போன்ற கண்ணியமானவர்களென்றால் இந்தப் பங்களா முழுவதையுமே கொடுத்து விடுவோம்...... உங்கள் சொந்த வீடாகவே இதைக் கருதிக் கொள்ளலாம்" அரைகுறை ஆங்கிலத்தில் அடிக்கடி நிறுத்தி நிறுத்திப் பேசினான் கிழவன்.

கிழவன் வார்த்தைக்காகத் தவித்தபோது, அவன் பேசியதைப் புரிய முடியாமல் சிவலிங்கம் தவித்தபோது, வலிய வந்து தெளிய வைத்தது அந்த வண்ணக்கிளி. ஆச்சரியம் அவனை ஊமையாக்க அவளையேபார்த்தபடி நின்றான் சிவலிங்கம். செந்தமிழில் தேனைக் கலந்து இனிமை சொட்டப் பேச அந்தச் சிங்களப் பெண்ணால் எப்படி முடிந்தது?

விழுங்கி விடும் பார்வையுடன் நின்ற சிவலிங்கத்தைக் கண்டு, கால் விரல்களால் நிலத்தைச் சுரண்டியபடி தலையைக் குனிந்து கொண்டாள் சோமாவதி.

"நாங்கள் எப்போதுமே தமிழர்களுக்குத்தான் அறைகளை வாடகைக்குக் கொடுப்பது வழக்கம். அவர்கள் தான் எதுவித தகராறுமில்லாமல் வாடகைப் பணத்தை ஒழுங்காகக் கொடுப்பவர்கள். அவர்களுடன் பழகிப் பழகி, சோமா தமிழை நன்றாகப் பேசப் பழகி இருக்கின்றாள்"— சிவலிங்கத்தின் திகைப்பைக் கண்ட கிழவன் கூறிய விளக்கம், அவனுக்குத் தேனாகத் தித்தித்தது.

அன்று பின்நேரமே சிவலிங்கம் அங்கு குடிபோய் விட்டான். அருகேயிருந்த ஒரு 'மலையாளம் கடை'யில் உணவு ஏற்பாடுகளைச் செய்தான். அலுவலகத்திற்குச் செல்லாத வேளைகளில், பங்களாவையடுத்த தோட்டத்தில் தான் அவனைக் காணலாம்.

அவன் ஒருகவிதைப் பித்து. தமிழில்வெளியான கவிதைத் தொகுதிகள் அனைத்தும் அவனிடம் இருந்தன. அவன் எழுதிய ஓரிரு கவிதைகளும் பத்திரிகையில் வெளி வந்துள்ளன. தோட்டத்திலுள்ள செடி கொடிகளின் பசுந் தோற்றமும், அங்கே வீசும் இளந்தென்றலும் அவனுடைய கவிதை உள்ளத்திற்குச் சிறந்த விருந்தாயமையும். புதிய புதிய கவிதைகளை அவன் உருவாக்கிக் கொண்டே இருந்தான்.

கவிதைகளை இயற்ற முடிந்ததே தவிர, அவற்றை இசையுடன் பாட அவனால் முடியவில்லை. சாரீர வசதி போதாது. தோட்டத்திற்குச் சென்றால் மட்டும் வாய்விட்டுப் பாடுவான். தனிமையான அந்த இடத்தில் காதுகளைப் பொத்திக்கொள்வதற்கு யாரிருக்கின்றார்கள்?

ஃ ஃ ஃ

அன்று சிவலிங்கத்திற்கு ஒரே மகிழ்ச்சி. வெண்பாப் போட்டி ஒன்றில் பங்கு பற்றும்படி பத்திரிகை ஆசிரியர் ஒருவர் எழுதியிருந்தார். வெண்பாவின் கடைசி அடி கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கேற்றாப்போல், முதல் மூன்று அடிகளையும் எழுத வேண்டும். நீண்டநேரம் சிந்தித்து, வெண்பாவில் இடம்பெற வேண்டிய கருத்துக்களை ஒழுங்கு செய்துவிட்டான். இனி, அவற்றிற்குக் கவிதை உருவம் கொடுக்க வேண்டும். அலுவலகத்திலிருந்தபோது பல தடவை எழுதி, எழுதிக் கிழித்துவிட்டான். ஒன்றுமே அவனுக்குப் பிடிக்கவில்லை. பிரசவத்தை எதிர்நோக்கும் தாய்மார்களுக்கு ஏற்படும் 'இன்ப வேதனை'யுடன் வீட்டிற்கு வந்து, உடைகளை மாற்றிய பின் தோட்டத்திற்குச் சென்றான்.

வழக்கமாக உட்காரும் செவ்வந்திச் செடிக்கருகே துண்டை விரித்துப் படுத்தான். அவன் உடம்பு மாத்திரம் அங்கே கிடந்தது. எண்ணம் எங்கெல்லாமோ பறந்து திரிந்து விளையாடியது. நேரம் ஏறிக்கொண்டே போனது. வட்ட நிலா வானமுகட்டை நோக்கி ஏறத் தொடங்கியது. பால் நிலவில் வெள்ளித் துண்டுகளைப் போலிருந்த மல்லிகைப் பூக்களின் நறுமணம் அவனுக்குப் போதையூட்டியது. செவ்வந்திகள் பொன்னொளியில் மின்னின. 'இரவரசி' மலர்களும் மொட்டுகளுமாகக் குலுங்கினன். இவைகளை ஆட்டி அசைத்து மெல்லென வருடிக்கொண்டு இன்னிசை எழுப்பியது தென்றல். அந்த இசையைத் தொடர்ந்து அவனுடைய மனம் செல்ல, அவன் வாய்விட்டுப் பாடினான். கவிதை பிறந்துவிட்டது!

துள்ளியெழுந்தான் அவன். இரண்டு மூன்று தடவை அந்தப்பாடலைப் பாடிப் பார்த்தான். அந்தளைய சிறந்த கவிதையை அவன் இதுவரை இயற்றவில்லை. கிணற்றில் கைகால்களை கழுவிவிட்டு அறைக்குள் சென்று மீண்டும் பாடினான். அவனுடைய ஓட்டைக் குரலைத் தொடர்ந்து தேனருவியாய்ப் பாய்ந்தது ஓர் இனிய கீதம். கன்னித் தமிழ்க் கவிதையினைக் கற்கண்டுக் குரலில் பாடினாள் பெண்ணொருத்தி.

"தேவர்க்கரசு நிலை
வேண்டியதில்லை-அவர்
தின்னும் சுவையமுது
வேண்டியதில்லை.
சாவிற் தமிழ் படித்துச்
சாகவேண்டும்—எந்தன்
சாம்பல் தமிழ் மணத்து
வேக வேண்டும்."

சிவலிங்கத்திற்கு மிகவும் பிடித்தமான அந்தப் பாட்டை ஈழநாட்டுக் கவிஞரொருவர் இயற்றியிருந்தார்! அவனைப் பித்தனாக்கியது அந்தக் கவிதைதான். தமிழுணர்ச்சி ததும்பும் அந்தப் பாட்டைத் தமிழ் மணமேயில்லாத இந்த இடத்தில் யார் பாடுவார்கள்? ஆவலால் உந்தப்பட்டு, குரல் வந்த திசையில் கண்ணோட்டம் விட்டான். கனவா அது? அந்தப் பாடலை, அடுத்த அறையிலிருந்து பாடியவள் சோமாவதி!

திடுமென அங்கே சென்றான் சிவலிங்கம். பாட்டு 'டப்'பென்று நின்றது. அவள் எழுந்தாள்.

"மன்னித்துவிடு சோமா! உத்தரவின்றி உள்ளே நுழைந்ததற்காக" என்றான் அவன். அவனுடைய வெப்ப மூச்சு அவள் பட்டுக் கன்னங்களிற் பட்டு அவற்றைச் சிகப்பாக்கியது. உணர்ச்சிப் பிழம்பாக நின்ற சிவலிங்கத்தைக் கண்ட அவள் சற்றே பின்

(11-ம் பக்கம் பார்க்க)

துணிகளை வெண்மையாக்குகிறது
மில்க் வைற் நீல சோப்
ஒரு கட்டியின் விலை சதம் 20.
தயாரிப்பாளர்:
மில்க் வைற் சோப்
தொழிற்சாலை,
527, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை ஜூன் 6-ந் திகதி
விண்ணப்பம் ஏற்கும் கடைசித் திகதி 14-3-59.
அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் இவ் வருடம் பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்
ஒரு ஆசிரியராகலாம்
★ சாதாரண பயிற்சி
★ விஞ்ஞானப் பயிற்சி
★ தூய கணிதப் பயிற்சி
விபரங்களுக்கு எழுதினால் இலவசமாக அனுப்பப்படும்.
அற்லஸ் ஹோல்,
தபால் பெட்டி 649, கொழும்பு.
போன்: 9759.

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"
மதிப்பிற் சிறந்த வைரங்கள்!
அழகிற் சிறந்த ஆபரணங்கள்!!
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்
எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.
உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாநாடு முடிந்ததும் வவனியாவிலிருந்து மட்டக்களப்பு நண்பர்களுடன் யாழ்ப்பாணம் வந்தடைந்த நமக்கு மனம் நிலைகொள்ளவில்லை. காரணம் நாடெங்கிலுமிருந்து கிடைத்த கலவரச் செய்திகளே.

தென் இலங்கையில் நடந்த அட்டூழியங்கள் கட்டுமீறியவையாகையால் எத்தனை இருட்டடிப்பு இருந்தும் பயனில்லை. நாடெங்கும் கேட்ட அவற்றின் எதிரொலி யாழ்ப்பாணத்திலும் இடியாக முழங்கியது. பொறுமைக்குப் பெயர்பெற்றவர்கள்தான் தமிழர்கள். என்றாலும் தென்னகத்தில் தம்மவர்கள் மிருகங்களிலும் கேவலமாக மதிக்கப்பட்டு ஈவிரக்கமற்ற வகையில் வதைக்கப்பட்ட செய்திகள் அவர்கள் உள்ளத்திலே புயலை ஏற்படுத்திவிட்டன. விளைவு......? மே 27ந் திகதி அமைதி குலைந்தது; அராஜகம் நிலவியது.

### ஒன்றே ஒன்று

சந்திக்குச் சந்தி ரோட்டுக்கு ரோட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று கலவரம் செய்தார்கள். வேள்வித் தீயில் பல பொருட்கள் வெந்து சாம்பலாகின. யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று இருந்தது எது என்று பார்த்தால் தீ வைத்தல் ஒன்றே ஒன்றுதான்.

### அட்டூழியம்

தென் இலங்கைச் சம்பவங்களால் தாங்க முடியாத அளவுக்கு தமிழ் மக்கள் ஆத்திரமூட்டப்பட்டிருந்தும் அவர்கள் தங்கள் வழி வழி வந்த பண்பை ஆவேச உணர்ச்சிக்கு அடவு வைத்துவிடவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்த எந்த ஒரு சிங்களவர்தானும் கொல்லப்படவில்லை. யாரும் கற்பழிக்கப் படவுமில்லை. இப்படிப் பண்போடு நடந்துகொண்ட தமிழர்களுக்கு, அவர்கள் என்ன, ஒரு பாவமும் அறியாத ஆயிரமாயிரம் கிராம மக்களுக்கு கிடைத்த பரிசு என்ன? குண்டாந்தடிப்பிரயோகம், துப்பாக்கிச் சூடு! பொலீஸாரினதும் இராணுவத்தினரும் அவர்களைக் கழுகாக வளைத்துக் கொத்திக் கிழித்துவிட்டார்கள்.

### ஓய்வு இல்லை

இரவு, பகல் என்ற வித்தியாசமின்றி எந்நேரமும் மக்கள் சுட்டுவிழ்த்தப்பட்ட இடங்களுக்கும், உயிருக்கு மன்றாடும் நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்த ஆஸ்பத்திரிகளுக்கும், ஆபத்தான பேர்வழிகள் என்று சொல்லி ஆடுமாடுகள் போல அடைத்துவைக்கப்பட்டிருந்த பொலீஸ் ஸ்டேஷன்களுக்கும் மாறி மாறித் திரிந்தேன்.

குண்டினால் கிழிக்கப்பட்டுக் குடல் சரிந்த பிரேதங்களை உற்றாருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும், காயமடைந்தவர்கள் நிலையைத் தெரிந்து, தெளிந்து, உறவினர்களுக்கு ஆறுதல் கூறுவதற்கும், அநியாயமாக பொலீஸ் ஸ்டேஷன்களில் அடைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும் நேரம் போதவில்லை.

---

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி
திரு. ஏ. அமிர்தலிங்கம்

---

இத்தனைக்கும் மத்தியில் கிளிநொச்சி போன்ற தூர இடங்களில் பொலீஸாரும் இராணுவத்தினரும் எதுவித மூகாந்திரமும் இன்றி ஏதுமறியாத மக்களுக்கு இழைத்த இன்னல்களை நேரில் கண்டறிந்து மேலதிகாரிகளுக்குப் புகார் செய்ய அங்கெல்லாம் செல்ல வேண்டியதாயிற்று. வீட்டில் ஒரு நிமிஷம்தானும் தங்கியிருக்க முடியாத நிலை. அங்குமிங்குமாய் பறந்து திரிந்தேன்.

### டெலிபோன் மணியோசை

அந்த நேரத்தில் எல்லாம் என் வீட்டு டெலிபோன் மணி ஓசை ஓர் உயிருக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது. "மக்கள் தொண்டு தாங்கள் செய்வதற்கு நான் முட்டுக்கட்டையல்ல. பவுத்திரமாகப் போய் வாருங்கள்'' என்று அன்போடு விடை தந்து ஆர்வத்தோடு அனுப்பும் என் மனைவியைத்தான் குறிப்பிட்டேன். என்னைப் பற்றிய ஏதாவது கோளாறான செய்தியைத்தான் அந்தத் தடவையில் கேட்க வேண்டுமோ என்ற எண்ணத்தால் பெண் உள்ளம் மணியோசை கேட்டதும் 'பகீர்' என்று அடித்துக் கொள்வது இயற்கைதானே. அத்தனை ஆபத்து நிறைந்த இடங்களுக்கெல்லாம் நான் சென்றது அவருக்குத் தெரிந்திருந்ததால் ஒவ்வொரு மணியோசையும் அப்படித் திகிலை ஏற்படுத்தியது.

### மட்டக்களப்புச் செய்திகள்

யாழ்ப்பாணத்திலே நிலைமை இப்படியென்றால் மட்டக்களப்பைப்பற்றிக் கேட்கவா வேண்டும். யாழ்ப்பாண மக்கள் பொலீஸ், இராணுவத்தினர் இரும்புப் பிடியில் சிக்கிப் பட்ட பாட்டையெல்லாம் நேரில் பார்த்த நமக்கு மட்டக்களப்பு நிலைமைபற்றிக் கிடைத்த செய்தி பேரிடியாகிவிட்டது. ஏற்கனவே நொந்துபோயிருந்த உள்ளத்தில் கூர்முனை ஈட்டிகொண்டு குத்துவதுபோலாகிவிட்டது. இராணுவத்தினர்கள் அங்கு என்றும் எப்பொழுதும் எங்கும் இல்லாத அளவு அக்கிரமங்கள் செய்து வருவதாக அறிந்தோம்.

### தந்தி

நம்மோடு யாழ்ப்பாணம் வந்திருந்த மட்டக்களப்பு நண்பர் பத்மநாதனுக்கு கிடைத்தது ஒரு தந்தி. பரிபாஷையில் அமைந்திருந்தது அது. நேரடியாகசொன்னால் ஆகாது என்ற காரணத்தால் பரிபாஷையில் தரப்பட்ட தந்தி நமது கவலையை மேலும் அதிகரிக்கச் செய்தது."

மட்டக்களப்பு நண்பர்கள் துடித்தார்கள். பெற்றவர்கள், உற்றார் உறவினர்கள் அங்கிருந்து அல்லல்படுவதாகக் கேள்விப்பட்டதும் அவர்களுக்கு இங்கே இருப்புக் கொள்ளவில்லை. திரு மாணிக்கம் 'விடு...விடு' என்று கிளம்பத் தயாராகிவிட்டார். நண்பர் ராஜதுரை தனிமையில் இருந்து என்ன கஷ்டப்படுகிறாரோ என்ற அங்கலாய்ப்பு வேறு. எல்லோருமாக ஒரு முடிவுக்கு வந்தோம். வந்தது வரட்டும்; மட்டக்களப்புக்கு நாம் போயே தீருவது என்பதுதான் நமது தீர்மானம்.

### கட்டளை பிறந்தது

எப்படிப்போவது? ரயில் ஓடவில்லை; கார், பஸ் போவதற்கு நிலைமை சரியில்லை. கடல் மார்க்கம் இருக்கவே இருக்கிறது. அதை யார் தடுக்க முடியும் என்று துணிந்து அப்படியே போவது என்று முடிவு செய்தோம். மட்டக்களப்பு நண்பர்களுக்கு இந்த முடிவோடு தான் 'உயிர்' வந்தது. அப்போது தலைவர் வன்னியசிங்கத்தின் கட்டளையும் கிடைத்தது. நான் மட்டக்களப்பு நண்பர்களை அழைத்துக் கொண்டு கடல் மார்க்கமாகக் கிழக்கிலங்கை செல்ல வேண்டும் என்பதுதான் அவரது கட்டளை.

கட்டளையை நிறைவேற்ற எத்தனையோ இக்கட்டுகள்.

(தொடரும்)

---

# பிறந்த மண்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ந்தாள். தன்னை ஒருவிதமாகச் சாமாளித்துக் கொண்டு "வேறு ஏதாவது தமிழ்ப் பாடல்கள் தெரியுமா?" என்றான்.

அவள் பதில் சொல்லவில்லை; பாடினாள் பாரதியாரின் 'கண்ணம்மா' சோமசுந்தரனாரின் "கத்தரி வெருளி" எல்லாவற்றையும் அழகாகப் பாடினாள். அவனுடையஇதய வீணை அவள் பாடலுக்குச் சுருதி சேர்த்தது.

"இவைகளை எங்கே கற்றுக் கொண்டாய் சோமா?"

"உங்களிட.... மிருந்துதான் ..." சோமாவதியின் குரல் கரகரத்தது.

"என்னிடமிருந்தா?" சிவலிங்கத்தின் கேள்வியில் பேரன்பும் பெருமிதமும் பொங்கியெழுந்தன.

"நீங்கள் தோட்டத்தில் பாடிக்கொண்டிருக்கும் போது நான் அவற்றை நன்கு கவனித்து மனப்பாடஞ் செய்தேன். தமிழ் மொழியில் நல்ல கவிதைகள் இருக்கின்றன என்பதை உங்களிடமிருந்துதான் தெரிந்து கொண்டேன்''

அவர்கள் இப்பொழுது இவ்வுலக மனிதர்களாகவே தோன்றவில்லை. கவிதா தேவியின் சன்னிதானத்திலே ஒன்றாகப் பிணைந்திருக்கும் ரசிக சிகாமணிகளாக இருந்தார்கள். அவள் பாட அவன் கேட்க, அவன் கேட்க அவன் பாட......கவிதை வானில் தமிழிசை முழங்கியது. மறுபடியும் அவர்கள் இந்த உலகத்திற்கு வந்த போது...வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிணைந்திருந்த கைகள் பிரிந்தன!

அவள் கல்லூரிப் படிப்பு முடிந்துவிட்டது. இருவர்க்கிடையே பழக்கமும் அதிகரித்தது. சோமாவதியின் வீட்டிலேயே சாப்பிடவும் தொடங்கினான் சிவலிங்கம். அவன் மனதறிந்து, ருசியறிந்து சமைத்துப் போட்டாள் அவள். அவ்வளவு தான் அன்பில் மிதந்தாலும் கண்ணியத்துடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையினால், கிழவனும் அவர்களின் தொடர்பில் குறுக்கிடவில்லை.

சமையல் வேலை முடிந்த பின் சிவலிங்கத்தின் அறையைச் சுத்தம் செய்வதற்காகச் சென்றாள் ஒருநாள். புத்தகங்களைக் கண்ட கண்டபடி வாரியிறைத்து அறையை ஒரே குப்பையாக்கி விட்டிருந்தான் சிவலிங்கம். அவற்றை ஒழுங்காக எடுத்து வைத்துக்கொண்டிருந்த பொழுது ஓர் அபூர்வ வஸ்து அவள் கண்களில் பட்டது. ஒரு சிறிய பட்டுப் பை நிறைய கொஞ்ச மண் மிக மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது அதை எடுத்தெறிய நினைத்தவள் சிவலிங்கத்தின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

"மண்கிடைக்காதென்று இவ்வளவு கட்டுக்காவலுடன் வைத்திருக்கின்றீர்களே, பைத்தியக்காரரைப் போல்'' என்றாள் அவள்.

"அது மண்ணல்ல, சோமா! நான் வணங்கும் தெய்வம்''

"கலி" ரென்று நகைத்தாள் அவள், "கல்லையும் மண்ணையும் வணங்குபவர்கள்தானே நீங்கள்!''

"அந்தக் காரணத்திற்காக நான் இதை வணங்கவில்லை. எனக்கு உயிரூட்டி, உணர் ஊட்டி உரமூட்டியது இந்த மண் இதைப் பார்க்கும் போது என் பெற்ற தாயை நினைத்துக்கொள்வேன். உயிரைக் கொடுத்தாவது நான் பிறந்த நாட்டின் உரிமையைக் காப்பாற்ற வேண்டும் என்று உணர்வை எனக்கு ஊட்டுவது இந்தத் தமிழ் மண்தான் சோமா, இதே தமிழ் மண்தான்!"

"என்னை மன்னித்துவிடுங்கள், சிவா...!" அவனையே பார்த்தபடி நின்றாள் அவள்.

மௌனம் பல நிமிடங்களை விழுங்கியது.

"நீங்கள் தமிழர். நான் சிங்களப் பெண்...'' சோமாவதியின் ஏக்கக் குரல் அந்த மௌனத்தைக் கலைத்தது.

"அதற்காகக் கவலைப்படாதே சோமா? வீரத்தைப் போற்றுவதைப்போல் காதலையும் போற்றுவார்கள் தமிழர்கள். நீ சிங்களப் பெண் என்பதற்காக உன்னை எவருமே வெறுத்தொதுக்க மாட்டார்கள். என்னை நம்பு சோமா.'' அவளுடைய கைகளை அழுத்திய படியே மேலும் சொன்னான்," ஆட்சி பிரிவதை நாம் விரும்புகின்றோமே தவிர, அன்பு பிரிவதை விரும்பவில்லை. எத்தனையோ துறைகளில் இந்த இரண்டு இனமும் பிரிந்திருந்தாலும், அன்பு என்ற சக்தி எல்லோரையும் ஒன்றாக்கும். என் நாட்டில் உனக்கு அளிக்கப்படும் வரவேற்பைக் கண்டு நீ பிரமித்துவிடுவாய்!"

சோமாவதியின் சந்தேகம் தீர்ந்துவிட்டது. ஆனால் ஓய்வான வேளைகளில் அவனுடைய வாயைக் கிண்டிவிடும் வழக்கம் மட்டும் மாறவில்லை. அந்தப் "பைத்தியக் காரப்'' பேச்சைத் தொடங்கினால் அவனுடைய உணர்வின் உள்ளாளத்திலிருந்து உதிக்கும் உறுதி மொழியைக் காதாரக்கேட்டுநெஞ்சார மகிழலாமல்லவா?

## 2

சோமாவதி அன்புடன் பரிமாறிய உணவை, நாக்கில் நீர் சொட்டச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த சிவலிங்கத்தின் காதுகளில் கிழவர் கூறிய ஒரு செய்தி நாராசமாகப் பாய்ந்தது.

"[illegible] நோக்கிக் [illegible] படை செல்கின்ற [illegible] இன்னும் சில [illegible]

(15-ம் பக்கம் பார்க்க)

---

# தமிழ்மறைக்கழகம் விடுக்கும் வேண்டுகோள்

## திருக்குறள் ருஷ்ய மொழிபெயர்ப்பு வெளிவருவது குறித்து பாராட்டு

உலகெலாம் வள்ளுவன் திருநாமம் வழங்கவும், அவன் வாய்மொழி அனைவரதும் வாழ்க்கைக்குப் பயன்படும் வகை செய்யவும் அயராது உழைத்து வரும் தமிழ் மறைக் கழகத்தின் பணி ஆண்டு தோறும் வெற்றி யீட்டி வருவது குறித்து கழகம் மட்டுமல்ல, தமிழ் கூறும் நல்லுலகமும் பெருமை கொள்ளலாம்.

இந்த வெற்றியில், இரவு பகல் என்று பாராது, தன் நேரத்தையும், பணம் பொருள் செலவையும்நோக்காது.தூற்றுபவர், போற்றுபவர் யாரையும் பொருட்படுத்தாது தமிழ்ப் பணியே தன் பணியெனக் கொண்டு தொண்டாற்றி வரும் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு பெரும் பங்கு உண்டு.

### கழகப் பணி

இலங்கை, தமிழகம், தென் ஆபிரிக்கா, மலாயா, பிஜித் தீவுகள், மாஸ்கோ முதலான இடங்களிலெல்லாம் வைகாசி அனுடத்தில் வள்ளுவர் திருநாள் கொண்டாட இன்று மக்கள் திரள்கிறார்கள் என்றால் பண்டிதர் இரத்தினத்தின் தலைமையில் உள்ள தமிழ் மறைக் கழகம் செய்த, செய்துவரும் தமிழ்ப் பணிக்கு வேறு சான்று வேண்டியதில்லை.

### வேண்டுகோள்

இவ்வாண்டும் வைகாசி அனுடத்தில் (22-5-59-ல்) எங்கும் வள்ளுவர் திருநாள் கொண்டாடப்படவேண்டும் என்பதும், இத் திருநாள் விழாவை யொட்டி திருக்குறள் மனனப் போட்டியும் பரிசில் வழங்கலும் நடைபெறவேண்டும் என்பதே தமிழ்மறைக் கழகத்தின் வேண்டுகோளாகும்.

கழகம், ஏழாவது திருக்குறள் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் மே 22, 23, 24-ந் திகதிகளில் நடத்தத் தீர்மானித்திருக்கிறது. மாநாட்டில்திருக்குறள் நூற் காட்சிக்கும் ஏற்பாடு செய்யவிருக்கிறது.

### திருக்குறள் ருஷ்ய மொழி பெயர்ப்பு

அணிமையில் நடந்த கழக ஆட்சி மன்றக் கூட்டத்தில் சோவியத் விஞ்ஞான மன்றத்தின் கீழைத் தேசக்கலைக் கழகத்துக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்க வேண்டுமென்று ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திருக்குறளை ருஷ்ய மொழியில் மொழி பெயர்த்து வெளியிட அந்தக் கழகம் தொடங்கியிருப்பதற்காகவே பாராட்டும் நன்றியும்.

வள்ளுவர் தொடர் ஆண்டையும் வழக்குக்குக் கொண்டுவருமாறு தமிழ்ப் பத்திரிகைகளுக்கும், தமிழ் நிலையங்களுக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும் வேண்டுகோள் விடுப்பதென்றும், திருவள்ளுவர் தொடர் ஆண்டை இப்பொழுதே வழங்கிவரும் பத்திரிகைகளுக்கும், சங்கங்களுக்கும் நன்றி தெரிவிப்பதென்றும் பிறிதோர் தீர்மானம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகக் கலை வளர்ச்சிக்கு சுதந்திரன் தொண்டு**

# சமீபத்திய நாடகங்கள் — விமர்சனம்

## சந்திப்பு

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. ஏ. கந்தையா தலைமையில் கடந்த முதலாந் திகதி விபுலானந்தர் இசைச் சங்கத்தினரால் குருவயூர் அனுதைப் பாடசாலை உதவி நிதிக்காக கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது சந்திப்பு என்ற நாடகம்.

நடனங்கள் நாடகத்தின் நல்ல அம்சமாகவும் ஜனரஞ்சகப் பகுதிகளாகவும் அமைந்தன. திரு கே. கே. அச்சுதனின் ரொக் அன் ரோல் நடனம் எல்லோரையும் கவர்ந்தது. இடையிடையே அவர் 'ஊளையிட்டது' மட்டும் கேட்கச் சகிக்கவில்லை. கண்டிய நடனத்தைக் கேலி செய்யும் வகையில் அவர் ஆடிக்காட்டியது பற்றி ஒருசிலர் "இது இனத்துவேஷ நடவடிக்கை" என்று ஒப்பனைக்கு இலேசாகக் கடிந்துகொண்டாலும் விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரித்து ரஸித்தார்கள்.

### அற்புத நடனம்

பிரபல நாட்டிய விற்பன்னர் கோபிநாத்தின் சிஷ்யர் சுகுமாரனின் சிவ நடனம் சிந்தையைக் கவரும் சீரிய விருந்தாக அமைந்தது. அவருக்கு செய்யப்பட்ட வேஷ ஒப்பனையும் மிகப் பொருத்தமாக இருந்தது நடனத்துக்கு ஊட்டம் அளித்தது. அவரின் அங்கங்கள் ஒவ்வொன்றின் அசைவிலும் இருந்த நளினம் பெண்களுக்குக்கூட இருக்குமோ என்பது சந்தேகம். அற்புதமான நடனம்.

சுகுமாரனின் மாணவி ஈ. டி. சாந்தியின் நடனமும் நன்ருகவே இருந்தது. ஆயினும் நடிகை சாவித்திரி நடனமாடும்போது காணும் குறை இவர் நடிப்பிலும் காணப்பட்டது. அதாவது வலது பக்கம் கழுத்தை வளைத்து கைநயனம் செய்வதில்உள்ள கைலாகு இடது பக்கத்தைப் பொறுத்தமட்டில் அடியோடு இல்லை. மற்றப்படி நாட்டியத்தில் எடுப்பும், துடிப்பும், தாள லயமும், அபிநயமும் "அழகு...... அழகு......!" என்று சொல்லலாம்.

### மாலை மரியாதை

நாடகத்தின் இன்னெரு குறிப்பிடத்தக்க அம்சம் தலைமைதாங்கிய திரு கந்தையா நடிகர்நடிகைகளுக்கு நாடகத்தின் நடுக்கட்டத்தில் மாலை மரியாதை செய்தது ஆகும். இறுதியில் அந்த வேலையைச் செய்வதானுல் அதற்கு அவர் ஒப்பியிருப்பாரோ என்னவோ! நாடகம் நடத்தியவர்கள் விஷயமறிந்தவர்கள்

### எடுத்துக்காட்டு

நாடகத்தின் கதை, வசனம், நடிப்பு, தயாரிப்பு இவைபற்றி சொல்வதே சிரமமாக இருக்கிறது. வெறுமனே ரேடியோவில் கேட்டு அனுபவிக்க வேண்டிய நாடகத்தை நேரில் பார்த்தும் அனுபவிக்கவென்று மேடையேற்றினுல், அது எப்படி வானெலி நாடகமாகவும் இல்லாமல், மேடை நாடக வாடையும்கூட இல்லாமல் நலம் கெட்டுக் குட்டிச்சுவராகிக் கோணங்கி விளையாட்டாக முடியும் என்பதற்கு சந்திப்பு நாடகம் அருமையானதோர் எடுத்துக்காட்டாக விளங்கியது.

### இழுக்கு

இலங்கை வானெலியில் மேற்படி நாடகம் ஒலிபரப்பப்பட்டபோது அதன் சிறப்புக் குறித்து கேட்டோர் எல்லோராலும் பாராட்டப்பட்ட எழுத்தாளர் திருச்சி சந்தருக்கு இதனுல் வீணில்இழுக்கு. திறமை மிகுந்த தயாரிப்பாளர் சானுவும் தமக்குத் தாமே விழுக்காட்டை வலுவில் ஏற்படுத்திக்கொண்டார். நடிகர் நடிகையர்கள் பரிதாபத்துக்குரியவர்கள், பாவம்! அத்தனை பேரும் நன்ருக நடிக்கக்கூடியவர்கள்—காலைவாரி விடப்பட்டுவிட்டார்கள். வானெலிநாடகங்களில்சதா நடித்துப் பிரபலமடைந்த அவர்களுக்கும் இந்தமேடை நாடகத்தால் வந்தது வினை.

வர இருக்கும் மேடை நாடகங்களை நடத்த இருப்பவர்களுக்கு இது படிப்பினையாக இருக்குமானுல் நிச்சயம் பயன் உண்டு.

—கே. கே. ஆர்.

## உயிர்காத்த உத்தமன்

யாழ்ப்பாணம் மனேகரா தியேட்டரில் ஸ்ரீ சரவணபவா நாடக மன்றத்தார் அணிமையில் அளித்ததுதான் உயிர் காத்த உத்தமன் என்ற சமூக நாடகம். கலையரசு சொர்ணலிங்கத்தின் தலைமையில் நடந்தது.

சொந்தக் கற்பனையில் கதையை உருவாக்கி உரையாடலை அமைத்து நாடகத்தை டைரக்ட் செய்தவர் யாழ். ஏ. எஸ். மணி என்று அழைக்கப்படும் அ. சிவசுப்பிரமணியம். கதையில் கட்டுக்கோப்போ புதுமையோ வேண்டிய அளவு இல்லாவிட்டாலும் சிக்கல்கள் புகுத்தப்பட்டிருந்ததால் நாடகம் கடைசிவரை எப்படியோ இழுபட்டுச் செல்கிறது. வசனங்கள் ஏறுமாருக இருந்த போதிலும் ஏமாற்றம் அளிக்கவில்லை. சினிமாப் பாணியில் கதாசிரியர் நாடகத்துள் 'வீரபுருஷோத்மன்' என்ற ஒரு குட்டி நாடகத்தைப் புகுத்தியது கேலிக் கூத்தாக இருந்தது. மன்னிக்க முடியாத குற்றம்.



### நல்ல நடிப்பு

நடிப்பில் முதலிடம் வில்லன் பாத்திரம் தாங்கிய ஏ. சுந்தரராஜனுக்கே. பி. எஸ். வீரப்பாவின் சிரிப்பு, முக பாவம், அங்கலாய்ப்பு, இன்னும் எஸ். ஏ. நடராஜவின் பேச்சுத்திறன் அவரிடம் காணப்பட்டன.

வில்லியாக நடித்த சந்தானலட்சுமி தாம் காதலித்தவன் ஒரு ... வெறுத்து ஒதுக்கித் ... அவனை வெறுத்து ஒதுக்கித்

## வீர மைந்தன்

இன்றைய சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு ... அவசியம் வேண்டிய நல்ல ... கருத்தை ஆணித்தரமாக ... எடுத்துரைக்கும் அருமையான ... நாடகமாகத் திகழ்ந்தது வீர மைந்தன். வட்டு... கோட்டைப் பிரதிநிதி ... ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் கலைவாணர் நாடக மன்றத்தினர் அணிமையில் யாழ்ப்பாணம் மனேகரா தியேட்டரில் நடித்துக் ... காண்பித்தனர்.

ப... பேராசையால் அன்னியனு... க்குத் தன் சொந்த நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவன் ஒருவன்; இந்த ஈனச் செயலைத் தடுத்து நாட்டைக் காக்க விளையும் வீர மைந்தன் ஒருவன்—இவ் விருவரையும் ... சுற்றிக் கதை வளர்ந்தது.

### கதை, வசனம், டைரக்ஷன்

திரு ... வை. பி. ஆசைத்தம்பியின் "... விந்திய வீரன்" என்ற நாவல் ... வீர மைந்தனுக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆசைத்தம்பியின் வசனங்கள் பெரும்பாலும் நாடகத்தில் ஒலித்தாலும் இன்றைய தமிழரின் நிலையை எடுத்துக் கூறும் பிரசாரவடுக்குகளையும் கேட்க முடிகிறது.

நாடகத்தை டைரக்ட் செய்த திரு அரசு பாராட்டுக்குரியவர். இவரின் மேற்பார்வையில் செய்யப்பட்ட காட்சி ஜோடனைகளும், உடை அலங்காரங்களும் சிறப்பாக விளங்கின. ஆனுல் வீர மைந்தனின் உடை அலங்காரம் மட்டும் ஏனே அலங்கோலமாக இருந்தது!

### நடிப்பு

நாடகத்தின் உயிர் நாடியான முக்கிய பாத்திரத்தை ஏற்று அதோடு இரண்டறக் கலந்து அற்புதமாக நடித்தவர் க. துரைசிங்கம். அயல் நாட்டு மன்னன் உத்திரனுக நடித்த இவரின் கம்பீரமான தோற்றமும், தலையாட்டும் லாகவமும், கணீரென்ற குரலும்பார்ப்போரைக் 'கிறுங்க' வைத்தன என்ருல் மிகையாகாது.

வீர மைந்தனுக நடித்த இ. சற்குணம், தந்தை வீரசேனுக நடித்த நா. கணபதிப்பிள்ளை. ஆழுறுவாக நடித்த செல்வி சரஸ்வதி ஆகியோரும் சபையோரின் பாராட்டைப் பெற்றனர். பொன்னம்பலம் நல்ல நகைச்சுவை விருந்து அளித்தார். ஏனே இடையில் இவரைத் தீர்த்துக்கட்டி விட்டார்கள்!

மற்றவர்களின் நடிப்பு அவ்வளவாக எடுபடவில்லை யாயினும் நிறைவு அதிகமாகவும் குறை மிகக் குறைவாகவும் இருந்ததால் நாடகத்தைப் பார்த்தவர்கள் எல்லோருமே திருப்தியோடு தான் வீடு திரும்பினுர்கள். அருமையான நாடகம் என்று வேறு பேசிக்கொண்டார்கள்.

—க. தேவேந்திரராசா



போருக்குச் செல்லும் பெரிய மருதுவை வழி அனுப்பி வைக்கிருள் மனைவி.
கண்ணதாசன் பிலிம்ஸ் தயாரிப்பான "சிவகங்கைச் சீமை" யில் டி. கே. பகவதி, எஸ். வரலட்சுமி முதலியோர் தோன்றும் காட்சி.

## இரத்தமொன்று

இலங்கையிலே கலைப்பசியுடையோரின் ஆவலைத் தீர்ப்பதற்காக அமைந்துள்ள ஒரே ஒரு சாதனம் சினிமாதான். ஒரு சில திறமை மிகுந்த நடிகர்களால் அவ்வப்போது நடிக்கப்படும் நாடகங்கள், வேறு பல குறைபாடுகளினுல், மக்களின் மனத்தில் நிரந்தர இடத்தை அடையத் தவறிவிடுகின்றன. இந்தப்பொது விதிக்குப் புறம்பானதாக அமைந்துள்ள ஒரு சில நாடகங்களுள் குறிப்பிடத்தக்கது, யாழ்ப்பாணம் கவின் கலை மன்றத்தினரால் சமீபத்தில் சண்டிருப்பாய் இந்துக் கல்லூரியல் அரங்கேற்றப்பட்ட "இரத்த மொன்று" என்ற நாடகம். இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் சு. வித்தியானந்தன் அரங்கேற்ற விழாவிற்குத் தலைமை தாங்கினுர்.

### கதை

மட்டக்களப்பைச் சேர்ந்த படித்த வாலிபனுன அழகு வேலையின் நிமித்தம் கொழும்பிற்கு வருகின்ருன். கொழும்பில் அவன் நடாத்தும் வாழ்க்கை வேடிக்கையானது. அவனேடு கூடப் படித்தவன் யாழ்ப்பாணத்துச் சோமு. அழகுவின் மாமன் அம்பலவாணர் தன் மகள் பத்மாவை அழகுவிற்கே மணம் முடிக்கப் படாத பாடு படுகின்ருர். அழகுவின் நண்பன் சோமு பத்மாவைக் காதலிக்கின்ருன். சோமு வீட்டில் வளரும் முல்லையைக் காணுமலேயே காதலிக்கின்ருன் அழகு. இதனுல் பல சிக்கல்கள். அம்பலவாணரின் மனதை மாற்ற அழகுவும் சோமுவும் பற்பல தந்திரங்களைச் செய்கின்ருர்கள். வெற்றி காண்கின்ருர்கள். இதுதான் நாடகத்தின் கதை.

### நகைச் சுவையும் பாராட்டும்

அழகுவாக நடித்த சிவானந்தமும், சோமுவாக நடித்த பரமலிங்கமும் அருமையான நகைச்சுவையோடு திறம்பட நடித்தனர். அம்பலவாணராக நடித்த விஞயகமூர்த்தி, சிறந்த குணசித்திர நடிகராக எதிர்காலத்தில் விளங்குவார் என்பதை, அன்றைய அவரது நடிப்பு எடுத்துக் காட்டிவிட்டது. ஆண்கள் பெண்களாக நடிப்பதிலும் பார்க்கப் பெண்களே பெண்களாக நடிப்பதுதான் சாலச் சிறந்தது என்பதை பத்மாவாகவும் முல்லையாகவும் நடித்த வாலிபர்களது குரல்கள் தெளிவாக்கிவிட்டன. குறத்தியாக வந்த பொன்னம்பலமும், நடனமாடிய சிறுமியும்மேடையில் ஒரு சில நிமிடங்களே தோன்றினுலும், சபையோரின் பாராட்டுதலைப் பெற்றுவிட்டனர்.

### 'ஓசி' பாடல்கள்

வசனம் பரவாயில்லை. ஆனுல், ஈழத்தில் நடந்ததாகச் சித்தரிக்கப்படும் கதையில் இடைக்கிடையே இந்தியப் பாணியில் பேச்சு அமைந்தது வரவேற்கத்தக்கதல்ல. பாடல்கள் இனிமையாக இருந்தன. ஆனுல் அத்தனையும் சினிமாவில் 'ஓசி' வாங்கியவை.

### சாதனை

காட்சி அமைப்புகள், ஒலி ஒளி அமைப்புகள் புதிய உத்திகளைக் கொண்டு திறம்படத் தயாரிக்கப்பட்டிருந்தன. காட்சிகள் மிக விரைவாக மாற்றப்பட்டதும், நிழற் காட்சிகள் மூலம் சில சம்பவங்கள் சித்தரிக்கப்பட்டதும் மிகச் சிறப்பாக, நாடகத்தின் அழகிற்கு அழகு செய்து, டி. கே. எஸ். குழுவினரின் நாடகங்களை நினைவூட்டின. ஈழத்தினராலும் சிறந்த தமிழ்ச் சமூக நாடகங்களை நடாத்திக் காட்ட முடியும் என்பதை நிரூபித்துவிட்டது "இரத்தமொன்று". இந்தியா, சென்சீன முதலிய நாடுகளிலே பெற்ற கலை அனுபவத்தைக் கொண்டு, நாடகத்தை எழுதி நடிகர்களுக்குப் பயிற்சியளித்து, தாமும் முக்கிய பாத்திரமேற்று நடித்த ஆசிரியர் முத்து சிவானந்தன் பி. ஏ. (ஆனர்ஸ்) மற்றும் ஏனைய கவின் கலைக் கழக நிர்வாகிகளது முயற்சி பெரிதும் பாராட்டக்கூடியது.

—கலையன்பன்

தள்ளும் கட்டத்தில் அற்புதமாகத் ... பங்கைச் செய்தார் தம்மை ஒரு நடிகை என்று சந்தேகத்திற்கு இடமின்றி அனைவரும் கொள்ளும்படி செய்தார்.

கதாநாயகன் என். கணேஷ், கதாநாயகி சுப்புலட்சுமி, உயிர் காத்த உத்தமன் எம். ஏ. கபூர் மற்றவர்களும் நடிக்க போதிய சந்தர்ப்பம் இல்லை. உள்ளதைத்தானும் எல்லோரும் நன்கு பயன்படுத்தினுர்கள் என்று சொல்வதற்கும் இல்லை.

### நடனம்

ஈழத்துச் சந்திரபாபு என்று பெயர் பெற்ற கே. வி. விநாயகேந்திரனின் நடனம் மிக நன்ருக இருந்தது. ஒலி, ஒளி அமைப்பு, செட்டிங்ஸ் சுகப்படவில்லை. ஆயினும் என்ன, தியேட்டருக்குள் புகுந்தவர்கள் கடைசி வரை இருந்து நாடகத்தைப் பார்த்துவிட்டே வெளியேறினுர்கள். ரஸிகப் பெருமக்களின் பொறுமையே பொறுமை!

—மணியம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, இங்கிலாந்தில் கூட கிராக்கி

## உஷா தையல் மெஷின்கள் மின்சார விசிறிகளுக்கு

### இந்தியாவில் உள்ள உற்பத்தி கம்பெனி வழங்கும் உன்னதமான சேவை

### பம்பலப்பிட்டியில் கண் காட்சி விழா

இந்தியப் பொருட்கள் என்ருல் அவை தரம் குறைந்தவை என்ற தப்பான எண்ணம் பலகாலமாகப் பலரிடமும் இருந்து வந்தது. இதனுல்காந்திமகாத்மா சுதேசி இயக்கம் நடத்தி இந்திய உற்பத்திப் பொருட்களைப் பிரபல்யப்படுத்த வேண்டிய அவசியம்கூட ஏற்பட்டது ஒரு காலத்தில்.

ஆனல் இன்று...? இந்திய உற்பத்திப் பொருட்களை உலக நாடுகள் அனைத்தும், உற்பத்தி வர்த்தகத் துறைகளில் முன்னணியில் நிற்கும் நாடுகள்கூட விரும்பி வாங்கி வருகின்றன. இப்படி வாங்கப்படும் இந்திய உற்பத்திப் பொருட்களில் முக்கியமானவை உஷா தையல் மெஷின்கள், மின்சார விசிறிகள் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

கல்கத்தாவில் உள்ள ஜே என்ஜினியரிங் உவேர்க்ஸ் லிமிட்டெட் கம்பனியாரால் நாளொன்றுக்கு தயாரிக்கப்படும் 20,000த்துக்கு அதிகமான உஷா தையல் மெஷின்களிலும் 23,000த்துக்கு அதிகமான மின்சார விசிறிகளிலும் இந்தியாவின் பூரண தேவைக்கு உபயோகப்படுபவை போக மிகுதியானவற்றில் பெரும் பகுதி எந்த நாடுகளில் விற்பனையாகின்றன என்ற உண்மையை அறியும்போது யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது.

#### வெளி நாடுகளில் கிராக்கி

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பெல்ஜியம், ஹொலண்ட், இத்தாலி போன்ற, உற்பத்தித்துறையில் முன்னணியில் நிற்கின்ற நாடுகளிலும் மற்றும் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து மத்திய ஆபிரிக்கா, துருக்கி, சைப்பிரஸ் ஆகிய நாடுகளிலும் ஏராளமான உஷா தையல் மெஷின்களும் மின்சார விசிறிகளும் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கி உபயோகிக்கப்படுகின்றன.

எப்படி இந்தக் கிராக்கி ஏற்பட்டது? காரணம் என்ன? உஷா தையல் மெஷின்களினதும் மின்சார விசிறிகளினதும் உன்னதமான உற்பத்திச் சிறப்பும், அவை மக்களிடையே பாவனைக்கு வழங்கப்படும் பக்குவமான புது முறையும், வழங்கிய பின்னர் "விற்பனை செய்ததோடு நமது பொறுப்பும் முடிந்தது" என்று இருந்துவிடாமல் கம்பனியார் தமது வாடிக்கைக்காரரோடு என்றென்றும் இடைவிடாத தொடர்பு வைத்து தாம் வழங்கிய பொருட்களிலிருந்து ஆகக் கூடுதலான பயனை அவர்கள் பெறும் பொருட்டு வேண்டிய உதவி அளித்து வருவதுமே காரணம் என்று சொல்லலாம்.

#### மெஷின்கள் விசிறிகள்

குடும்பப் பாவனைக்கும் தையல் வேலை செய்யும் தொழில் வினைருக்கும் மற்றும் எவருக்கும் எந்த விதமான தையல் வேலைக்கும் ஏற்ற வகையில் நவநவமான பல்வேறு டிசைன்களில் தயாரிக்கப்படும் உஷா தையல் மெஷின்கள் அழகு, நீண்ட நாள் உழைப்பு, இலேசான இயக்கம், இடவசதி, முதலான சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கு அவற்றை இன்று உலகெங்கும் உபயோகித்து திருப்தி கண்ட லட்சக்கணக்கான மக்கள் பெருமையோடு நற்சாட்சி கூறுகிருர்கள்.

உஷா மின்சார விசிறிகளும் அப்படியே. மேசை விசிறிகள், சீலிங் விசிறிகள், பெடஸ்டல் விசிறிகள்— இவற்றைத் தாம் பார்த்ததில்லையே என்று கூறும் ஒரு நபரைத் தானும் நாம் இன்று தேடிப்பிடித்துக் கொள்வது கஷ்டம். வீடுகள், வர்த்தக நிலையங்கள், அரசாங்கக் காரியாலயங்கள் எங்கு பார்த்தாலும் உஷா விசிறிகள் பொருத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இலங்கையில் இப்படியான வியத்தகு நிலையை உண்டாக்கிய பெருமை ரெய்மூ சன்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரையே சாரும்.

#### உஷா கண்காட்சி

இப்பொழுது பம்பலப்பிட்டி மார்க்கெட்டுக்கு முன்னுல் உள்ள இடத்தில் உஷா தையல், பின்னல் கண்காட்சி விழா நடைபெறுகிறதல்லவா! இலங்கையில் முதன் முறையாக இப்போதே இவ்வித கண்காட்சி நடக்கிறது. தினமும் மக்கள்சாரி சாரியாகச் சென்று கண்காட்சியைப் பார்த்து பயன் அடைகிருர்கள்; மகிழ்ச்சி எய்துகிருர்கள். இந்தப் பெருமையும் ரெய்மூ சன்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரையேசாரும்.

கடந்த ஆண்டில் உஷா மெஷின் உற்பத்திக் கம்பனியார் இப்படியான கண்காட்சிகளை சென்னையிலும் கல்கத்தாவிலும் வைத்தார்கள். இலங்கை மக்களும் அப்படியான ஒரு கண்காட்சியைக் கண்டு களிக்க வசதி வேண்டுமென்று கருதியே இவ்வாண்டில் அதை இங்கு வைக ரெய்மூ சன்ஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தார் ஒழுங்கு செய்தார்கள். பிரதமரின் மனைவி திருமதி பண்டாரநாயகா கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய போது முயற்சியைப் பாராட்டினுர். காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த தையல் வேலைப்பாடுகளைக் கண்டு தாம் பிரமித்துப் போனதாகக் கூறினுர். உஷா மெஷின்களை எத்தகைய அரிய வேலைகள் செய்யப் பயன் படுத்தலாம் என்பதைத் தாம் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைவதாகவும் சொன்னுர்.

கண்காட்சியை முன்னிட்டு விசேஷமாக இந்தியாவிலிருந்து வந்த திரு லாலா ஸ்ரீடார் தமது ஆரம்ப உரையில் உற்பத்திக் கம்பனியின் தோற்றம், வளர்ச்சி முதலானவற்றையும் அதன் சேவைகளையும் தெளிவாக எடுத்துச் சொன்னுர்.

#### பயன்

மொத்தத்தில் உஷா தையல் மெஷினையோ அல்லது மின்சார விசிறியையோ வாங்குபவர்கள் தாம் உஷாராக நடந்துகொண்டோம் என்று நிச்சயமாக நம்பலாம். குறைந்த விலைக்கு சிறந்த பொருளை வாங்கி திருப்தி கொள்ளலாம். தமது அண்டைநாடான இந்தியாவின் பொருளைக் கொள்முதல் செய்தோமே என்பதிலும் அதன் மூலம் உலகெங்குமுள்ள லட்சக்கணக்கான உஷா வாடிக்கைகாரர் பட்டியலில் தாமும் ஒருவராகச் சேர்க்கப்பட்டோமே என்பதிலும் பெருமை கூட அடையலாம்.


## நன்றி கூறும் தமிழ் அன்பர்கள்

எனக்கு வயது 39 ஆகிறது. 5 குழந்தைகளுண்டு. ஆஸ்த்மா என்ற தொய்வு 15 வருட காலமாக என்னை சித்திரவதை செய்தது. நடுச் சாமம் தனியாக ஊசி போடுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற நாட்களை இன்று நினைத்தாலும் பயமாக இருக்கிறது. "ஆஸ்த்மடிக்கா" 3 பாட்டில்கள் எனக்கு பூரண குணமளித்துள்ளது என்பதை ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ஒப்பம்

திரு. கே. அப்துல்காதர்,
55/2, காலி ரோட்,
கொழும்பு—4.

என் மனைவிக்கு 10 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி பூரண குணம். நன்றி.

திரு. வி. முத்துக்குமார்,
Erracht Estate,
Dehiowita.

"ஒரே பாட்டில் ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷலில் பலவருஷமாக எனக்கு இருந்த ஆஸ்த்மா பூரண குணம். என் இதய நன்றி.

திரு. எஸ். செல்லையா,
Stokland Group,
Udugama.

எனக்கு 15 வருடமாக இருந்த ஆஸ்த்மா பூரண குணம். தொய்வு ஏற்பட்ட நாள் ஞாபகமேயில்லை. என் நன்றி ஆஸ்த்மடிக்காவுக்கு.

ஸ்ரீமதி இ. சரவணமுத்து
"ரமணிவாசம்," தெல்லிப்பழை.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

'ஆஸ்த்மடிக்கா'

(ஒரு நவீன சஞ்சீவி

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-


ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

சுகாதார வைத்தியசாலை.,
255 காலி ரோட்,
(பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்)
கொழும்பு- 4.



## இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




★ ஒருவரின் ஆயுள் காலம் முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

ரெய்மூ சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4243, 5060.

பருத்தித்துறையில் கிடைக்குமிடம்:

விநாயகம் அன் சன்ஸ்,
பருத்தித்துறை



கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள் கூட வினாக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. மற்றும் மீன்களின் உடலில் ஒட்டிக் கொள்ளும் தன்மையுடைய ஒரு வகை மீன் இருக்கிறது. இதன் பெயர் என்ன?

பொ. சிதம்பரநாதன், செங்கலடி.

2. எமது உடலில் ஒரு போதும் வளராமல் இருக்கும் உறுப்பு எது?

மனோ நல்லையா, வெள்ளவத்தை.

3. மூட்டைப் பூச்சி முதன் முதலில் எங்கே இருந்தது? பின்பு எப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் பரவியது?

கோ. ஹரிதாஸ், கிளிநொச்சி.

4. உலகின் மிகப் பெரிய நூல் நிலையம் எங்கே உள்ளது? அதன் பெயர் என்ன.

மட்டுவில் கிருஷ்ணன் கொழும்பு.

5. பின்வருவனவற்றைக் கண்டு பிடித்தவர்கள் யாவர்? (அ) மின் ஜியல், கிராமபோன், திரைப்படம் (ஆ) டெலிவிஷன் (இ) எஞ்மல் (ஈ) நீராவிக் கப்பல் (உ) தந்தி (ஊ) ரேடியம் (எ) ஆகாய விமானம் (ஏ) வானொலி

ஆ. இராசரத்தினம், கொழும்பு.

# ............பண்டிதனுவான்

## "கம்பனும் கவித்தேனும்"

அமிழ்தினும் இனிய நம் செந்தமிழ் மொழி கவிச் சக்கரவர்த்தி கம்பன் பைந்தமிழில் படைத்த "இராமாயணம்" என்னும் இலக்கியப் பூம் பொழிலால் புத்துயிர் பெற்று பேரெழிலுடன் புதுமையொளி வீசுகின்றது. அதன் கண், உவமை நயத்துடனும்— எதுகை மோனை நயத்துடனும் இலக்கியச் சுவை மலிந்து காணப்படும் ஒவ்வொரு கவிதை மலரும் தமிழ் மணத்தை அள்ளி அள்ளி வீசுகின்றது. கம்பன் அளித்த காவிய அமுதமாகிய இராமாயணம், செந்தமிழர்களுக்குக் கிடைக்கப்பெற்ற அரும் பெருஞ் செல்வமாகும்.

இப் பேரழகினை அரங்கேற்றும்போது அதனைக் கேட்டு உவந்த தமிழ் மக்கள் அதன் நல் சுவை கண்டு, அஃது அமிர்தம் போன்று இனிமையாயிருத்தலை உணர்ந்து, மண்ணுலகத்திலுள்ள தங்களுக்கு இத் தேவமிர்தத்தைத் தமிழ் மொழியாகிய பாற் கடலிலிருந்து கடைந்தெடுத்துத் தந்த வள்ளலாம் கம்பனுக்கு "கவிச் சக்கரவர்த்தி" என்று பட்டம் சூட்டி உவகையெனும் வெள்ளத்தில் ஆழ்ந்தனர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கொப்ப இராமாயணக் காவியச் சோலையில் ஒரு கவிதை மலரைக் கொய்து அதன் நறுமணமெனும் தமிழின்ப வெள்ளத்தில் மூழ்குவோம்.

விசுவாமித்திர முனிவருடன் இராமனும், இலக்குவனும் மிதிலை மாநகரின் கோட்டை வாயிற் புறத்தை அடைகின்றனர். அப்பொழுது கம்பனின் கண்களுக்கு கோட்டை மதிலின் மீது விளங்கும் அழகிய கொடிகள் காற்றினுல் அசைவது தென்படுகின்றது. அதனைக் கண்டதும் கம்பனின் கற்பனை வளம் விரிகின்றது—கருத்து வளம் செறிகின்றது—கவிதை மலர் மலருகின்றது. அவ்வழகிய கொடிகள் இராமபிரானை தமது கரங்களை நீட்டி அழைப்பதாகக் கம்பன் காணுகின்ருன். இத்தகையதொரு கருத்துவளம் தோன்றுவதை நாம் கவிஞர்களிடம்தான் காணக்கூடியதாய் இருக்கிறது.

"செந்தாமரை மலரினின்றும் நீங்கிய திருமகள் இங்கே சிதையாக வந்திருக்கின்ருள், ஆதலின் திருமாலாகிய நீ விரைவிலே வருவாயாக" என அக் கொடிகள் தம் கைகளை நீட்டி, கோட்டை நோக்கி, பெருமித—சிங்க நடையுடன் வரும் இராமனை அழைப்பதுபோல் காட்சியளிப்பதாக,

"மையறு மலரின் நீங்கி
யான் செய் மாதவத்தின்
வந்து
செய்யவள் இருந்தாள் என்று
செழு மலர்க் கொடிகள்
என்னும்
கைகளை நீட்டி அந்தக்
கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்(று)
அழைப்பது போன்(று)
அம்மா."

என்னும் கவிதை மலர்மூலம் கம்பன் அழகாக வர்ணிக்கிருர்.

கவிதை நயங்களெல்லாம் கசிந்தொழுகும்படி கவிச் சக்கரவர்த்தி கம்பன், தமிழுலகுக்களித்த கம்பராமாயணம், என்னும் பாற் கடலை நம் நா இனிக்கப் பருகி தமிழின்பம் காண்பது பைந்தமிழர்களாகிய எமது கடமையாகும்.

—க. நவசோதி,
கொழும்பு.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்துவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 8.

பெயர்.....................................................

பாடசாலை..............................................

விலாசம்..................................................

..................................................

.................................... ....................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




# ஜூலியஸ் சீஸர்

உலகப் பெருங் கவி ஷேக்ஸ்பியர் எழுதிய வீர காவியங்களுள் ஜூலியஸ் சீஸரும் ஒன்ருகும். சீஸர் ரோமாபுரியின் உயர்வுக்காக உயிரையும் மதியாது, பகை அரசர்கள்மீது படை எடுத்து பெருந் தொகையான பொன்னையும் பொருளையும் பொதி பொதியாய் பிறந்த நாட்டுக்குக் கொண்டுவந்தான். ஆணவம் பேசிய அரசர்களை அடக்கினுன். பிறந்த பொன்னுட்டின் பெருமைக்காக பத்து வருட காலம்பகை அரசர்களுடன் போராடினுன். பிறந்த பொன்னுட்டுக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்தான். சீஸர் தேடிக் கொடுத்த சிங்கார வாழ்வால் மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். சீஸரை முடியாட்சியின் தலைவனுக்க முற்பட்டனர். சீஸரின் உயிர் நண்பன் மார்க் அன்ரனியும் அதை வரவேற்ருன். ஆனுல் சீஸர் அதை மறுத்தார்.

"குடியாட்சியில் குறையெதுவுமில்லாதபோது முடியாட்சி எதற்கு என்ருர். அன்ரனி அதை மறுத்து சீஸர் முடியாட்சியின் தலைவனுவதால் நாட்டுக்கு உண்டாகும் நன்மைகளை மக்களுக்கு எடுத்து கூறினுன். மக்கள் அதை ஏற்றுக் கொண்டனர். ஆனுல்மார்க் புரூட்டஸ் என்பவன் இதை மறைமுகமாக மறுத்து சீஸரைக் கொல்ல சதிக் கூட்டத்தை உருவாக்கினுன். காரணம் அவன் குடியாட்சியையே விரும்பினுன். ஆம் அவன் உரோம நகரத்தில் முடியாட்சியை வீழ்த்திக் குடியாட்சியை ஏற்படுத்திய ஜூசியஸ் புரூட்டஸ் பரம்பரையில் உதித்தவன். இன உணர்ச்சி கனலாக அவன் இதயத்தில் எழுந்தது. இதற்கு கேஸியஸ் என்ற சதிகாரன் தூபம் போட்டான்.

சதிகாரர்கள் பயங்கரத் திட்டத்துடன் சீஸரை அரசியல் மன்றக் கூட்டத்தில் கோழைத்தனமாகக் குத்திக் கொன்றனர். மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் கிடந்த மக்கள் மருண்டனர். கலக்கமடைந்து காணப்பட்டனர். மக்கள் மன்றத்திலே புரூட்டஸ் பேசினுன். சீஸரைக் கொன்றதுக்குக் காரணம் காட்டினுன். அவன் கூறிய காரணத்தைக் கேட்டு மக்கள் அமைதி அடைந்தனர். ஆனுல் சீஸர் மேல் அளவு கடந்து ஆத்திரப்பட்டனர். புரூட்டஸைப் புகழ்ந்தனர். சீஸரின் உயிர் நண்பன் அன்ரன் சோகச் சிலையானுன். ஆனுல் சீறினுன். சீஸரின் சிறப்புகளை மக்களுக்கு எடுத்துக் கூறினுன்.

சீஸர் உரோமின் உயர்வுக்காக உழைத்த உத்தமன் என்பதைஉரோமர் உள்ளத்தில் உதயமாகும்படி உணர்ச்சியுடன் பேசினுன். பேச்சு வன்மையால் மக்களின் மனத்தை மாற்றினுன். மக்கள் குமுறும் எரிமலைபோல் கொதித்து எழுந்தனர். சதிகாரர்களைச் சாக்காட்டுக்கு அனுப்பத் துடித்தனர். சீஸரின் சடலம் எரிக்கப்பட்டது. அதே சமயம் சதிகாரரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. புரூட்டஸும் மற்றையோரும் தப்பித்து ஓடினர். அன்ரனிஅவர்களைப் பின் தொடர்ந்தான். போர் தொடுத்தான் முடிவு? புரூட்டஸ் தோற்ருன். தன் மானத்தை விட்டுக் கொடுக்காமல் தற்கொலை யுண்டு மாண்டான். சில சதிகாரர்களும் அதே நிலையை அடைந்தனர். அன்ரனி அமைதி அடைந்தான் சீஸரின் ஆவியும் அமைதியடைந்ததாக ஆனந்தம் அடைந்தான்.

—"உதயகுமார்"
கொழும்பு

# கல்விச் செல்வம்

உலக மக்களனைவராலும் போற்றி வளர்க்கப் பட்டு வரும் அரிய செல்வமொன்றெனில் அது கல்விச் செல்வமே. சாக்கடையோரத்திலே போக்கற்ற யாக்களாக இல்லையேல்!! அதிலும் கேவலமான சக்களாக வாழ்ந்து வந்த மக்களின் வாழ்க்கையை வளம் நிறைந்த நிலமாக்கியது கல்விச்செல்வம். நேருக்கு நேர் நின்று போர் புரியும் ஆண்மையையும் வீரத்தையுமகற்றிவிட்டு, ஆயுதம் காட்டிப் பயமுறுத்தும் அடலாரின் ஆணவத்திற்கும் அதிகாரத்திற்கும் அடங்கியொடுங்கியடிபணிந்து "ஆலதுமவனுல், அழிவதுமவனுல்" என்ற அநீதியான பழியை ஆண்டவன் மேல் சுமத்திவிட்டு, அடிமைக் கூண்டுக்குள் கிடந்து அவதிப்பட்ட மக்களின் இதயத்திலே உரிமைக்குரலைத் தட்டியெழுப்பி விடுதலைக்கு முரசு கொட்டி வீறுகொண்டெழச் செய்தது கல்விச்செல்வம்.

நாற்றமெடுக்கும் சமுதாயச் சேற்றிலே வீற்றிருக்கும் மக்களைத் தட்டியெழுப்பிஅறிவுத் தடாகத்திலே நீராட்டி மறுமலர்ச்சியென்னும் கோட்டைக் கழைத்துவந்து, நாட்டிலே நலம் செழிக்கவும்,நல்லோரின் கல்வி தழைக்கவும், அறிவு பிறக்கவும், அறியாமையிருளிறக்கவும், அருள் புரிந்து வருவது கல்விச்செல்வம். வருங்கால வாலிபர்களின் வளமான வாழ்க்கை நொறுங்காமலும் கருங்காமலும் செல்லவேண்டுமானுல் வன்மை மிக்க கல்விச் செல்வத்தை வலுவறக் கற்றுணர வேண்டும்.

கண்டது கற்று, கருத்தறிந்து, கற்ருேர் முன்னின்றுரைப்பவன்தான் கல்லூரக வர முடியுமென்று கற்றறிந்த பெரியோர் கூறுவர். "கற்க கசடற" "கற்றிலனுயினும் கேட்க" "கற்றனைத்தூறும் அறிவு" என்று கூறும் வள்ளுவரின் நற்றமிழ்க் கருத்துரையை நாமுணர்ந்து நல்லறிவுடையவர்களாகத் திகழ்வதற்கேற்ற முறையில் கல்வியைக்கற்க வேண்டும். கற்றவர்களிடமிருந்து பல அரிய பெரிய அறிவு முத்துக்களையும், அனுபவக்கொத்துக்களையும்கேட்கவேண்டும். எனவே கல்லாதான் என்ருெருவன் உண்டென்ற சொல்லையே இல்லாமல்செய்ய வேண்டும்.

மா. பி. தமிழ்நெஞ்சன்
கொழும்பு

# கண்டது கற்கப் பண்டிதனுவான்

## (விடைகள்)

1. 'றிமோரு'. மற்றும் மீன்களின் உடலில் ஒட்டிக் கொள்ளும் தன்மை இதற்கு இருப்பதால் செம்படவர்கள் இந்த மீனைப் பிடித்து இதன் வாலில் ஒரு நூலைக் கட்டித் தண்ணீரில் விடுவார்கள். மற்ற மீன்களைப் பிடிக்க இந்த உபாயத்தைத் அவர்கள் கையாளுகிருர்கள். றிமோரு மீன் பெரும் பாலும் சுரு மீனின் உடலில் தான் அதிகம் ஒட்டிக் கொள்கிறது என்று சொல்லுகிருர்கள்.

2. கண்ணின் இரு கருமணிகள்.

3. மூட்டைப் பூச்சி முதன் முதலில் கிரேக்க சீன நாடுகளில் மட்டும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களோடு மூட்டைப் பூச்சிகளும் சென்று எல்லா இடங்களிலும் பரவின என்று கருதப்படுகிறது.

4. லெனின் ஞாபகார்த்த நூல் நிலையம் தான் உலகின் மிகப் பெரிய நூல் நிலையம். ருஷ்ய நாட்டிலே மாஸ்கோ நகரத்திலுள்ளது. இந்த நூல் நிலையத்தில் சுமார் 1 கோடி 40 லட்சம் புத்தகங்கள் இருப்பதாகச் சொல்கிருர்கள். அமெரிக்க நாட்டில் வாஷிங்டனில் உள்ள காங்கிரஸ் நூல் நிலையத்தில் சுமார் 1 கோடி 1 லட்சம் புத்தகங்கள் இருக்கின்றனவாம். இது உலகின் இரண்டாவது பெரிய நூல் நிலையம் ஆகும்.

5. கண்டுபிடிப்பாளர்கள் வருமாறு:-
(அ) எடிசன் (ஆ) ஜோன் லூயி பயர்ட் (இ) பர்னுட் பாலின்ஸ்கி (ஈ) ராபர்ட் பெல்டன் (உ) மோர்ஸ் (ஊ) கியூரி அம்மை (எ) ரைட் சகோதரர்கள் (ஏ) மார்க்கோனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### அருளொளி மகாசபைக் கூட்டம்

அருளொளி நிலைய மகா சபைக் கூட்டம் சென்ற 15-2-59-ல் திரு கே. பி. ஹரன் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது. தலைவர் முன்னுரையின் பின் சென்ற மகா சபைக் கூட்ட அறிக்கை கௌரவ காரியதரிசியால் வாசிக்கப்பட்டது. பின் ஐந்தாவது ஆண்டு நிருவாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: சங்கப் போஷர்கள்: திருவாளர்கள்: ச. கார்த்திகேசு, அன்பர் பூபதிதாசர்.

தலைவர்: திரு கே. பி. ஹரன், உபதலைவர்கள்: திருவாளர்கள்: முதலியார் குல சபாநாதன், வ. சிவஞானம், வி. நடராசன், த. சுப்பையா, எஸ். டி. சிவநாயகம். கௌரவ இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் வ. செல்வரத்தினம், த. சொக்கநாதன், கௌரவ தனாதிகாரி: திரு சுப்பையா, உபதனாதிகாரி: திரு வீர. நடராசா. நிருவாக சபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்: ந. பெ சதாசிவம், சி. ஆறுமுகம், க. விநாயகமூர்த்தி, ஆர். பி. செல்லையா, வே விநாயகமூர்த்தி டி. பொன்னுச்சாமி, க. இரத்தினசபாபதி, மு. வெற்றிவேலு, இ. புலேந்திரன், சி. தர்மராசா, திருமதி முதலியார் குல சபாநாதன், திருமதி சொக்கநாதன், திருமதி ராமசாமி, திரு ராமலிங்கம், திருமதி பெரியசாமி.

—

### பாரதி வாசிகசாலை

சங்கானை பாரதி சனசமூக சேவா சங்கம் கடந்த தை மாதம் 30ம் திகதி தன் நிருவாகத்தின் கீழ் ஓர் வாசிகசாலையைப் பொது மக்களுக்காகத் திறந்து வைத்தது.

மேற்படி வாசிகசாலையைத் திறந்து வைத்துப் பேசிய சங்கானைப் பட்டின சபைத் தலைவர் திரு. நா. முத்தையா பாரதி கண்ட சமுதாயத்தை நனவாக்க முயலும் இளைஞர்கள் பாரதியாரின் அதே கொள்கைகளைக் கடைப்பிடித்து, ஒன்று சேர்ந்துழைத்து ஓர் ஸ்திரமான கட்டுக்கோப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேற்படி சங்க நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர். பொ. நாகரத்தினம், உப தலைவர்: நா.இராசலிங்கம், காரியதரிசி: சி. க. கணேசல், உப காரியதரிசி: பொ. செல்லையா, தனாதிகாரி: பா. பசுபதி. மற்றும் திருவாளர்கள் செ. குமாரசாமி, க. நாகமணி, ச. செல்லையா, கா. கந்தசாமி, அ. யோசேப், அ. கந்தையா ஆகியோர் நிருவாக சபை அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டனர்.

—

### தீபதரிசன விழா

கொழும்பு அருளொளி நிலையத்தின் ஐந்தாவது ஆண்டு தீபதரிசன விழா சென்ற 15-2-59-ல் டோசன் வீதியிலுள்ள நிலையத்தில் திரு. கே. பி. ஹரன் தலைமையில், திரு. ச. சுப்பையாவின் சோதிப்பாடல்களுடன் ஆரம்பித்தது.

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கப் பாடசாலை மாணவர்களான செல்வன். த. சுமந்திரன், செல்வன். ப. தேவராசா முதலியோர் பேசிய பின்னர் திருவாளர்கள் எஸ். டி. சிவநாயகம், முதலியார் குலசபாநாதன், அன்பர் பூபதிதாசர், கு. இராமச்சந்திரன் முதலியோர் அரிய சொற்பெருக்காற்றினர்கள்.

பின் செல்வி. யோகதேவி சொக்கநாதர் பக்திப் பாடல்கள் பாடினர். திரு. க. தியாகராசா யோகாசனப் பயிற்சி நடத்தினர். காரியதரிசியின் நன்றியுரையுடன் பிரசாதம் வழங்கப்பட்டு விழா இனிது முடிந்தது.

—

### தமிழ் வளர்ச்சிக் கழகம்

வண்ணார்பண்ணை தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுக் கூட்டமொன்று சென்ற 18-2-59-ல் கே. கே. எஸ். வீதியிலுள்ள 280-ம் இலக்க மேல் மாடி மண்டபத்தில் தலைவர் திரு. இ. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் முக்கிய நிகழ்ச்சியாக இவ்வருடத்திற் குரிய நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப் பட்டது. கழகத் தலைவராக திரு. இ. மகேந்திரன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். உப-தலைவராக திரு. ந. தேவராசாவும், செயலாளராக திரு. சு. இ. இரத்தினகோபாலும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பேசுகையில்: தற்பொழுது இருக்கும் இக்கட்டான நிலையில் தன் மானம் உள்ள ஒவ்வொரு தமிழரும் தலை போவதாயிருந்தாலும் தமிழையும் தமிழ் பண்பாடு கலாச்சாரம் முதலியவற்றை காக்க முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அடுத்து செயலாளர் பேசுகையில் இயல் இசை நாடகம் ஆகிய மூன்று வழிகளாலும் தமிழை வளர்க்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

—

### மாணவர் மன்ற ஆண்டு விழா

விவேகானந்த வித்தியாலய மாணவர் மன்ற ஆண்டு விழா சென்ற 20-2-59-ல் மேற்படி மன்ற முன்னாள் தலைவர் திரு. அ. நாகராசா தலைமையில் நடைபெற்றது. வித்தியாலய தலைமை ஆசிரியர் திரு. கு. வி. செல்வத்துரை, பண்டிதமணி சிதம்பரம்பிள்ளை முதலியோர் மாணவர்களுக்கான நல்லவைகள் பல எடுத்துக் கூறி மாணவர்களின் சேவையைப் பாராட்டினர்கள். பின்னர் வித்தியாலய மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. அதன் பின்னர் புத்தாண்டு நிர்வாகிகள் கீழ்க்கண்டவாறு தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. பொ. கனகரத்தினம், செயலாளர்: த. சண்முகம், தனாதிகாரி: செல்வன். பெ. அதிசய போத்தி, பத்திராதிபர்: செல்வன். இலட்சுமிநாராயணசர்மா.

இவர்களுக்குதவியாக முறையே, திருமதி. பா. இராஜேந்திரம், அ. கந்தப்பன், இரா. சுப்பையா, செல்வி. இ. விமலா ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

மேற்படி மன்றத்தின் போஷகராக முன்னாள் தலைவரான ஆசிரியர் திரு. அ. நாகராசாவும், வாசிகசாலைப் பொறுப்பாளர்களாக திரு. வி. நாராயணதாஸ், வை. கந்தசாமி ஆசிரியர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

# பிறந்த மண்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் பொலநறுவையிலும் கலகம் ஏற்பட்டுவிடுமாம்...”

கையை உதறிவிட்டு வெளியே எழுந்து சென்றான் சிவலிங்கம்.

இலங்கைச் சரித்திரத்தின் இரத்த அத்தியாயம் தொடங்கிவிட்டது. நாடெங்கிலும் வகுப்புக் கலவரம். எங்கு பார்த்தாலும் இன வெறியின் எதிரொலி. கூச்சல், குமுறல், மரணத்தின் பிடியில் அகப்பட்டவர்களின் பரிதாப ஓலங்கள். மரண தேவனின் மறு உருவில் வந்தவர்களின் எக்காளம்! நேற்றுவரை ஒரு தாயின் பிள்ளைகளென வாழ்ந்தவர்களிடையே இன்று போர்!

போர்க்களத்தில் திரியும் முரட்டு யானையைப் போல் வீதியில் குதித்தான் சிவலிங்கம். எப்படியாவது வவனியாவிற்குச் சென்று, ஆருயிரைக் கொடுத்தாவது அந்த அன்னை பூமியைக் காக்க வேண்டும்!

பாய்ந்தோடி வந்தாள் சோமா. “மூலை முடுக்குகளிலெல்லாம் முரடர்கள் நிற்கின்றார்கள். வெளியே செல்வது ஆபத்து. வீட்டிற்குள்ளேயே இருந்தால் எப்படியாவது தப்பிவிடலாம்.” என்றாள்.

“எனக்கு என்னுயிர் பெரிதல்ல. நான் போகத்தான் வேண்டும்.”

“அப்படியானால் நானும் வருகிறேன்” அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டு அவள் கெஞ்சினாள், அழுதாள்.

“வேண்டாம் சோமா! நீ இங்கேயே இரு. வெற்றி வீரனாக வந்து உன்னைச் சந்திக்கின்றேன்” சோமாவின் கைகளை விடுவித்துக் கொண்டு, முன்னிலும் வேகமாகச்சென்றான்.

பற்றிய மரம் பறிக்கப்பட்டதால் ‘படா’ரென்று விழுந்தது அந்தப் பூங்கொடி. உணர்ச்சி வெறியர்களின் உடும்புப் பிடியிலே உயிருக்குயிரானவன் சிக்கப் போகின்றானே என்பதை எண்ணி அவள் விம்மினாள், புலம்பினாள்.

திடீரென்று ஒரு யோசனை ‘பளிச்’சிட்டது!

நிமிர்ந்து பார்த்தாள். சிவாவின் உருவம் இன்னும் மறையவில்லை. ‘விடுவிடென்’று அறைக்குள் சென்று மண் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

“இதோ உங்கள் தெய்வம்! நீங்கள் மறந்து விட்டீர்களே, சிவா......சிவா......!” தன் பலமெல்லாவற்றையுஞ்சேர்த்து உச்சக் குரலில் கதறினாள் அவள்.

மந்திரத்தால் கட்டுண்டவனைப் போலத் திரும்பினான் அவன். வந்துகொண்டிருப்பவனை வரவேற்க அவளும் முன்னேறினாள். காந்தம் போல் ஒருவரை ஒருவர் இழுத்தனர். கைகளை நீட்டி, அவளிடமிருந்து அந்தப் பொட்டலத்தைப் பெறப் போகும் சமயம்...... ஐயோ எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்து விட்டது! எங்கிருந்தோ வந்து இடையில் புகுந்த முரடனொருவன், தன் கத்தியை சிவலிங்கத்தின் நெஞ்சில் பாய்ச்சி விட்டு ஓடினான்.

சோமாவின் கையிலிருந்த மண் முடிச்சு நிலத்தில் விழுந்தது. நெஞ்சைக் கையால் அழுத்தியபடி சுருண்டு சுருண்டு கீழே விழவிருந்த சிவாவைத் தாங்கினாள் அவள். நடுங்கும் துடைகளின் மேல் தன் அன்புக் காதலனைக் கிடத்தினாள். அவளுடைய கண்ணீர் அவனைக் குளிப்பாட்டியது.

துயர வெள்ளத்தில் இருவரும் மிதந்தார்கள். சிவாவின் தொண்டையிலிருந்து வந்த பரிதாப ஒலி சோமாவின் இதயத்தை அறுத்துக் கொண்டிருந்தது.

“சோமா...... சோ...மா... எங்கே......என்......?” சிவாவினால் எதையுமே தெளிவாகப் பேச முடியவில்லை.

கண்களில் நீர் மல்க அந்தக்கடைசி நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நந்தையைப் பார்த்தாள் சோமா. அவளுக்கும் பேச்சு எழவில்லை.

குறிப்பறிந்த கிழவன் அருகேயிருந்த பட்டுப் பையை எடுத்துக்கொண்டு வந்தான். மிகவும் பயபக்தியுடன் அதைத் தன் இரண்டு கைகளாலும் பெற்றுக் கொள்வதற்காக எழுந்த சிவலிங்கம், மறுபடியும் ‘தடா’லென்று விழுந்தான். கிழவனின் கைகளிலிருந்துவிழுந்த பையிலிருந்து மண் எங்கும் சிதறியது. அந்த மண்ணின் மீதே கிடந்து உயிரைவிட்ட பெருமை அவன் முகத்தில் காணப்பட்டது!

★

கண்களில் துளித்த நீரைத் துடைத்து விட்டு, தன் காதலனின் நினைவுச் சின்னமான அந்த மண்ணைப் பார்த்தாள். அங்கங்கே தெறித்திருந்த இரத்தத் துளிகள் அழகான வார்த்தைகளாக வடிவெடுத்திருந்தன. அந்த வண்ணத் தமிழ் வாசகத்தைப் பல முறை படித்தாள் சோமாவதி: “நான் பிரிந்தாலும் உன் தூய அன்பை மறக்க மாட்டேன்; நாடு பிரிந்தாலும் நல்ல அன்புணர்ச்சி எல்லோரையும் பிணைக்கும்”.

# கைலாசம் கண்டேன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்து நீரின் ஓசை கேட்கத்தக்கதாக அத்தனை அமைதி நிலவியிருக்கின்றது. ஆம், புறத்திலே ஐம்புலன்கள் சென்று ஆரவாரம் செய்யாது, அமைதியுற்று இருக்குமாயின், எமது ஆழமான அகத்தில் ஊறும் அன்புச்சுனையிலுள்ள, தெய்வீக ஓசையை கேட்க முடியுமன்றோ! அத்தகைய பாதாளப் பனி வெடிப்புகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கின்றது. வெடிப்புகளைத் தாண்ட நேரிடும்போது உடல் வெடிப்பில் விழுந்து விடுமோ என்ற அச்சத்தால் உயிர் ஊசலாடும். ஓரிடத்தில் கல்லொன்றை எடுத்து வெடிப்புள் போட, விரைந்து சென்ற கல் நெடு நேரத்தின் பின் கீழே ஓடிக் கொண்டிருந்த நீருக்குள் விழும்சத்தம் கேட்டது. இவ்வாறு அடியில் உருகி ஓடும் நீரே கௌரி கங்கையின் உற்பத்தியாக அமைகிறது.

### அரிய காட்சி

மற்றவர்கள் மேலேசெல்லயானும், சுவாமி பகவதானந்தரும் மட்டும் களைப்பால் மேலும் தொடர்ந்து செல்லாது மலையிலேயே தங்கிப் பனிக் காட்சிகள் பலவற்றை பார்த்தோம். சில இடங்களில் பனிப் பாறைகளின் மேல் சிறு சிறு வாய்க்கால்கள்போல் தெள்ளிய நீர் ஒடுவதும் அதன்மேல் பனியாலேயே கண்ணாடி மூடியிட்டதுபோன்று காட்சியளிப்பதும் நேரில் கண்டவரே அனுபவிக்கும் அரிய தொரு காட்சி. அவைகளையெல்லாம் விட்டுப் பிரிய மனமின்றிய நிலையில் மீண்டும் திரும்பி மெல்ல நடந்து சாண்டில்ய குண்டம் வந்தடைந்தோம்.



மிலம் உறை பனி மலை (கிளேஸியஸ்) யின் அழகான தோற்றம்.

### தந்தூரிச் செடி

சாண்டில்ய குளத்தின் பகுதியில் தந்தூரி என்னும் பெயருடைய சிறு செடிகள் நிறைந்திருக்கின்றன. அகலமான இலை சிவந்த குச்சி போன்ற புஷ்பத்துடன் பார்வைக்குக் கடும்பச்சை நிறமாக அழகைக் கொடுக்கின்றது. இலையின் அடித்தண்டும், செடித்தண்டும் உணவுக்கு உபயோகப்படுகின்றன. இதன் சுவையில் புளிப்பும், இனிப்பும் சேர்ந்திருக்கின்றன. ஏறக்குறைய நெல்லிக்காயின் ருசியை ஒத்திருக்கின்றது. செடியில் வேரின் சாற்றை எடுத்து துணிகளுக்கு மஞ்சட் சாயம் ஊட்டுகின்றனர்.

### துலாச் செடி

தந்தூரிபோன்ற இன்னொரு செடியும் நிறைய இருக்கின்றது. அதன் பெயர் துலா. இதன் சாறு, [illegible] குணமும் உடையது. அங்குள்ள மக்கள் காயங்களுக்கு மருந்தாகத் துலா வேரின் சாற்றை உபயோகிக்கின்றனர்.

இரவு உண்டியருந்தி, உறங்கச் சென்றதும் எமக்கு இன்றிரவும் முன்னிரவைப்போலவே, உறங்காத உறக்கமாகக் கழிந்தது. ஜூன் 24 காலை சாண்டில்ய குளத்திலிருந்து புறப்பட்டுக் கீழே இறங்கி மிலத்தை அடைந்தோம். ஜூலை 2ம் திகதிவரை மிலத்திலேயே நாட்கள் கழிந்தன. வழிக்குத் தேவையாகக் கொண்டு வந்த உணவில் ஒரு பகுதியை உண்டு முடித்துவிட்டோமல்லவா? விலையைப் பார்த்து மயங்கியென்ன பயன். மேலும் யாத்திரைக்குத் தேவையான உணவை மிலத்தில் தேடிக்கொண்டோம். புதிய குதிரைகளும் கூலிகளும் அமைத்துக் கொண்டோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல்




சிவாஜி கணேசன், ஜமுனா நடிக்கும்




# பொம்மை ★ ★ கல்யாணம்

மற்றும்

**வி. நாகையா, ரங்கராவ், பிரண்ட் ராமசாமி, காக்கா ராதா கிருஷ்ணன், மைனாவதி, சாந்த குமாரி**

இன்னும் பலர் நடித்தது.

டைரக்ஷன்: ஆர். எம். கிருஷ்ணசாமி ★ சங்கீதம்: கே. வி. மகாதேவன்

## கொழும்பு கிங்ஸ்லி திரையில் இறுதி வாரம்!

# பதிபக்தி

ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன், சாவித்திரி, சந்திரபாபு, தங்கவேலு, பாலையா நடித்தது.

கதை வசனம்: சோலை மலை

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்





இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 மார்ச் மாதம் 8-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org